வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு வார மலர்

Eelanadu ඊළනාඩු





Email : news@eelanadu.lk | மலர் : 04 | 12.03.2023 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 93 | பக்கங்கள் : 16



08 தேர்தல்களுக்கு எதிராக அரசின் கெடுபிடிகள்



11 ஈழ – தமிழக மீனவர் பிரச்னை உண்மைநிலை என்ன?



09 தேர்தல் அறிவிப்பது ஆணையாளர்! வாக்குப் பெட்டிகள் ரணில் வசம்!



07 ஆபத்தை விஞ்சிய வாழ்வின் ஏக்கம்

## அரசுக்கு எதிராக போராடினால் இனி அரசாங்க வேலை இல்லை

### கடும் தீர்மானத்துக்கு அரசு தயார்

கொழும்பு, மார்ச் 12

**அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டம் நடத்தும் மாணவர்களுக்கு இனிவரும் காலங்களில் அரச வேலை வழங்குவது இல்லை என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.**

இந்த விடயம் குறித்து கொழும்பு உயர் அரசியல் வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர் குழு ஒன்று அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கட்சி விவகாரங்கள் மற்றும் நாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடியது. இந்தக் கலந்துரையாடலின் விளைவாகவே அரசாங்கம் கடுமையான தீர்மானத்தை எடுத்துள்ளது.

மேலும், அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களிலோ அல்லது குழுக்களிலோ இணைவோருக்கு அரச சேவையில் வேலை வாய்ப்புகளை

15

## யாழ்ப்பாணத்தில் காற்று மாசு உச்சம்!

### முகக்கவசம் அணிய ஆலோசனை



யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ்ப்பாணத்தில் காற்று மாசுபாடு மீண்டும் உச்சம் பெற்றுள்ளது. நாட்டில் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திலேயே காற்று மாசுபாடு உச்சமாகக் காணப்பட்டது. இது காற்று தரச் சுட்டியில் 155பி. எம். ஆக பதிவாகியிருந்தது.

இந்த நிலையில், முதியவர்கள், சிறுவர்கள், சுவாசம் சம்பந்தமான சிக்கல் உள்ளவர்கள் வெளியே வரும்போது முகக்கவசம் அணியுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

15

## எம். பிக்களின் சொத்து விவரங்களை வெளியிட நீதிமன்றம் உத்தரவிட்டது!

கொழும்பு, மார்ச் 12

பாராளுமன்ற உறுப்பினர்களின் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் அவர்களின் சொத்துகள், ஆவணங்கள் பற்றிய தகவல்களை வழங்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் சொத்துகள் மற்றும் பொறுப்பு ஆவணங்களை பெற பாராளுமன்றச் செயலாளரிடம் விண்ணப்பம் செய்யப்பட்டது. ஆனால், அவர் அந்தக் கோரிக்கையை நிராகரித்தார்.

பொதுச் செயலாளரின் நிராகரிப்பை எதிர்த்து சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்

15

## தேர்தலின் நிச்சயமற்ற நிலைமை விரைந்து முடிவுக்கு வரவேண்டும்!

ශ්‍රී ලංකා ජාතික සාම මණ්ඩලය
தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

கொழும்பு, மார்ச் 12

உள்ளூராட்சி தேர்தல் குறித்து நிச்சயமற்ற தன்மை நிலவுகிறது. இந்த நிலைமை விரைந்து முடிவுக்கு வரவேண்டும். அத்துடன், அரசமைப்பின் பிரகாரம் அரச நிறுவனங்கள் தேர்தல் திணைக்களத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவை தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பு விடுத்த அறிக்கையில்,

உள்ளூராட்சி

15

## தொல்பொருள் திணைக்களத்துக்கு ஆலோசகர்களாக இரு தமிழர்கள்!



கொழும்பு, மார்ச் 12

தொல்பொருள் திணைக்களத்துக்கான ஆலோசனை குழுவில் இரு தமிழ் பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பொன். பாலசுந்தரம்பிள்ளை, வரலாற்றுத்துறையின் முன்னாள் பேராசிரியர் ப. புஷ்பரட்ணம் ஆகியோரே இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர்.

19 உறுப்பினர்களை கொண்ட இந்த ஆலோசனைக் குழுவில் அஸ்கிரிய பௌத்த பீடத்தின் அநுநாயக்க வெண்ட்ருவே உபாலி தேரர், கலாநிதி பஹமூனே சுமங்கல தேரர், எல்லாவெல மேதா னந்த தேரர், பேராசிரியர் இந்துராகரே தம்மரத்ன தேரர், கொழும்பு ஷாஹிரா கல்லூரியின் அதிபர் ஏ. ஆர். மரிக்கார் மொஹமட் ரிஸ்வி ஆகியோரும் உள்ளடங்குவர்.

இந்த ஆலோசனை குழு இரண்டு

15

## தேர்தலுக்கான நிதியை விடுவிக்க வேண்டும்!

### ஜனாதிபதியிடம் ஆணைக்குழு கோரிக்கை!

கொழும்பு, மார்ச் 12

உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்தத் தேவையான நிதியை வழங்குமாறு ஜனாதிபதியும் நிதியமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவிடம் எழுத்து மூலமாக கோரிக்கை விடுத்துள்ளாதாக தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

15

## ‘வடக்கின் பெரும் போர்;’ மத்திய கல்லூரி சம்பியன்!



பக்கம் 02

## மகிந்த மீண்டும் பிரதமர்; ராஜபக்ஷ குடும்பம் தீவிரம்!

### விரைவில் பிரசாரம் ஆரம்பம்



கொழும்பு, மார்ச் 12

ஜனாதிபதியாகவும் பிரதமராகவும் முன்னர் பதவி வகித்த மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் பிரதமராக நியமிக்க ராஜபக்ஷ குடும்பத்தினர் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரியவருகின்றது.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மாநாடு மொனராகலையில் நடைபெறவுள்ளது.

15

## இலங்கைக்கு உதவுவதற்கு ஜி-20 நாடுகள் தவறிவிட்டன

### சர்வதேச மன்னிப்பு சபை

புதுடில்லி, மார்ச் 12

அண்மையில் நடைபெற்ற ஜி-20 நாடுகளின் நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்களின் கூட்டத்தில், கடன் நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் இலங்கைக்கு உதவுவதற்கான

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## 116ஆவது வடக்கின் பெரும் போர்:

# 29ஆவது தடவை மகுடம் சூடியது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி!



படங்கள் - ஐ. சிவசாந்தன்

யாழ்ப்பாணம், மார்ச் 12

116ஆவது வடக்கின் பெரும் போர் வெற்றிக் கிண்ணத்தை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி கைப்பற்றியது. இதன் மூலம் 29 தடவையாக பெருந் துடுப்பாட்ட போட்டியில் அந்த அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியுள்ளது.

சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை 9 விக்கெட்களால் வெற்றி கொண்டதன் மூலம் யாழ். மத்திய கல்லூரி இந்த சாதனையைப் படைத்துள்ளது.

யாழ்ப்பாணத்தின் முதலாவது பெருந்துடுப்பாட்டப் போட்டியான வடக்கின் பெரும் போர் 116ஆவது ஆண்டாக இம்முறை நடந்தது.

இரண்டாவது இன்னிங்ஸில் பின்தொடர்ந்து ஆடிவந்த சென். ஜோன்ஸ் கல்லூரி நேற்று முன்தினம் ஆட்டம் நிறைவுக்கு வந்தபோது 7 விக்கெட்கள் இழப்புக்கு 137 ஓட்டங்களுடன் தடுமாறியது.

கவிசன் 22, விதுசன் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். நேற்றைய தினம் இருவரும் தொடர்ந்து துடுப்பெடுத்தாடினர். ஆனால், இந்த இணை நிலைக்கவில்லை. மேலதிகமாக எந்த ஓட்டமும் எடுக்காமலேயே விதுசன் ஆட்டமிழந்தார். அவர் 53 பந்துகளில் 12 ஓட்டங்களை சேர்த்திருந்தார்.

அடுத்து வந்த அசாந்த் நிலைக்க முயற்சித்தார். ஆனால், அவர் 6 ஓட்டங்களுடன் பருதியின் பந்துவீச்சில் சஞ்சயனிடம் பிடிகொடுத்து வெளியேறினார். மறுமுனையில் நிதானித்து ஆடிய கவிசனுடன் இறுதி விக்கெட்டுக்காக இணைந்தார் கஜகர்ணன்.

இருவரும் நிலைத்து ஆட முயன்றபோதும் கவிசன் 37 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 53.2 ஓவர்களில் சென். ஜோன்ஸ் கல்லூரி சகல விக்கெட்களையும் இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சார்பாக பந்து வீசிய நியூட்டன், பருதி ஆகியோர் தலா 5 விக்கெட்களை வீழ்த்தினர்.

இது யாழ். மத்திய கல்லூரி முதல் இன்னிங்ஸில் பெற்ற 8 ஓட்டங்களே அதிகமாகும். எனவே, 9 ஓட்டங்கள் பெற்றால் போதும் வெற்றி என்ற இலகு இலக்குடன் களமிறங்கியது மத்திய கல்லூரி. அணித் தலைவர் கஜன் - சஞ்சயன் தொடக்கம் கொடுத்தனர். கஜன் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். ஆனால், அடுத்து வந்த விதுசன் ஒரு பௌண்ட்ரியை விளாசினார். 3.1 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 9 ஓட்டங்களைப் பெற்ற மத்திய கல்லூரி வெற்றி பெற்றது.

சஞ்சயன் 2, விதுசன் 5 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

வீழ்த்தப்பட்ட ஒரு விக்கெட்டையும் சென். ஜோன்ஸ் வீரர் அபிசேக் கைப்பற்றினார்.

முன்னதாக, கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென். ஜோன்ஸ் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்களையும் இழந்து 279 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில், நிசாந்தன் அஜய் 74, விதுசன் 71, சஞ்சயன் 42, அனுசாந்த் 27 ஓட்டங்களையும் பெற்றிருந்த னர்.

பதிலுக்கு முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி 51.2 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றது. இதில், ஜெசீல் 43, சபேசன் 34 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர்.

152 ஓட்டங்கள் பின்தங்கியிருந்த சென். ஜோன்ஸ் கல்லூரி ஆட்டத்தைப் பின்தொடர்ந்து ஆடியது. மத்திய கல்லூரியின் அபார பந்துவீச்சுக்கு முன்னால் இரண்டாவது இன்னிங்ஸிலும் அந்த அணியால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. கவிசன் 37, ஜனத்தன் 26, ஜெசீல் 25 ஓட்டங்களை அதிகபட்சமாக எடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வெற்றிபெற்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு வெற்றிக் கிண்ணத்துடன் 5 இலட்சம் ரூபாய் பணப்பரிசும் வழங்கப்பட்டது.

போட்டியின் நாயகனாக நியூட்டன் தெரிவானார். இதே போன்று சிறந்த துடுப்பாட்ட வீரராக நிசாந்தன் அஜய் (74 ஓட்டங்கள் - யாழ். மத்திய கல்லூரி) தெரிவானார். சிறந்த பந்துவீச்சாளராக பருதி (5 விக்கெட்கள் - யாழ். மத்திய கல்லூரி), சிறந்த விக்கெட் காப்பாளராக டானியல் பரமதயாளன் (யாழ். மத்திய கல்லூரி), சிறந்த களத்தடுப்பு வீரராக மகேந்திரன் கிந்துசன் (யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோர் தெரிவாகினர்.

இதேசமயம், நடைபெற்று முடிந்த 116 போட்டிகளில் சென். ஜோன்ஸ் கல்லூரி 38 போட்டிகளிலும், யாழ். மத்திய கல்லூரி 29 போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளன. 41 போட்டிகள் சமநிலையில் முடிவடைந்தன. 7 போட்டிகளின் முடிவுகள் கிடைக்கவில்லை. ஒரு போட்டி கைவிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)





















# அழிக்கப்பட்ட ஆலயங்களை மீளக்கட்ட அனுமதியுங்கள்!

## ஆறு. திருமுருகன் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 12

**அழிக்கப்பட்ட ஆலயங்களை மீளக்கட்டுவதற்கு அனுமதி வழங்கவேண்டும். இராணுவ ஏனைய ஆலயங்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவர் செஞ்சொல் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை சைவ மக்களின் மிகத்தொன்மை வாய்ந்த வரலாற்றிடம் கீரிமலை இந்தப் பகுதியில் கடல் மட்டத்திலிருந்து மிகவும் உயரமான மலை போன்ற ஒரு பாறையில் ஆதி சிவன் கோயில் அமைந்திருந்தது. அந்தச் சிவன் கோயில் தற்போது இல்லை என்று அங்கு போய் வந்த அன்பர்கள் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்கள்.

மேலும், பெருமைமிக்க பெண் சித்தரான சடையம்மாவின் சமாதி கோயில் மடம் அதற்கருகிலிருந்த சங்கர சுப்பையர் சுவாமிகளின் சமாதி, கதிரவேலன் கோயில் இவற்றைக் காணவில்லை என்ற செய்தி சைவ மக்களுக்கு மிகவும் அதிர்ச்சியை தந்துள்ளது.

சுமார் 33 ஆண்டுகளுக்குப் பின்பு ஆலயத்தை தரிசிக்கலாம் என்று சென்ற மக்களுக்கு பேரதிர்ச்சியை தந்தது. இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி மற்றும் அமைச்சரவை பதிலளிக்க வேண்டும்.

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த ஆலயங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அழிக்கப்பட்ட கோயில்கள் இருந்த இடத்தை சைவ மக்களிடம் உடனடியாக ஒப்படைக்க வேண்டும்.

மீண்டும் அந்த இடங்களில் சைவமக்கள் கோயில்களை கட்டுவதற்கான அனுமதியை உடன் வழங்க வேண்டும். தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்விடயம் தொடர்பாக உடன் குரல் கொடுக்க வேண்டும்.

வடக்கு மாகாண ஆளுனர் பொதுமக்கள் தங்கள் நிலங்களை பார்வையிடுவதற்கும் அங்கு எஞ்சியுள்ள கோவில்களை தரிசிப்பதற்கும் ஒழுங்கு செய்ய வேண்டும் என்று வேண்டுகின்றோம் - என்றார்.

(ஐ)



# மணல்காட்டில் திடீரென தீப்பற்றியது சவுக்கு காடு!

வடமராட்சி, மார்ச் 13

மணல்காட்டின் பிரபலமான சவுக்கு காடு நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் திடீரெனத் தீப்பற்றி எரிந்தது.

இந்தத் தீ பரவல் குறித்து பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்கவின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

இதையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பருத்தித்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி சேந்தன் தலைமையிலான குழுவினர் பிரதேச மக்களுடன் இணைந்து அங்கிருந்து பருத்தித்துறை பிரதேச சபை, இராணுவம், உதவியுடன் இரவு 11 மணியளவில் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

தீ மேலும் பரவாமல் மக்கள், பொலிஸார், இராணுவத்தினர் அங்கிருந்த குப்பைகளை வேகமாக அகற்றியும் மணல் மண்ணால் தடுப்பு அமைத்தும் தண்ணீரை ஊற்றியும் கட்டுப்படுத்தினர்.

இந்த சவுக்கம் மரக் காட்டில் விறகுகளை வெட்டுவதற்காக விஷமிகள் வேண்டுமென்றே தீ வைப்பது நீண்டகாலமாக தொடர்ந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ-02)




# பொலிஸாருக்கு எதிர்ப்பு தெரிவித்து நட்டாங்கண்டல் மக்கள் போராட்டம்!

முல்லைத்தீவு, மார்ச் 13

மாந்தை கிழக்கு நட்டாங்கண்டல் பொலிஸாருக்கு எதிராக நட்டாங்கண்டல் மக்கள் நேற்று முன்தினம் மாலை முதல் இரவு வரை பொலிஸ் நிலையம் முன்பாக எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வீட்டில் இருந்த வயோதிபர் ஒருவரை கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வந்தனர் என்றும், அந்த வீட்டில் மணல் இருந்ததாகவும் வீட்டின் உரிமையாளர் மன்னாருக்கு சென்றிருந்த சந்தர்ப்பத்தில் அவர் இல்லாத சமயத்தில் வீட்டில் காவலுக்கு இருந்த உரிமையாளரின் தந்தையான 68 வயது முதியவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், மணல் அகழ்வில் ஈடுபட்டவர்களை கைது செய்யாது பொலிஸார் ஆடு மேய்த்துக்கொண்டிருந்த அப்பாவிகளை கைது செய்வதாகவும் பொலிஸார் சட்டவிரோத செயல்பாடுகளை முன்னெடுக்க ஊக்கமளிக்கின்றனர் என்றும் இதன்போது அவர்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

(ஐ)

# 110 கிலோ கேரள கஞ்சா மாதகலில் மீட்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 13

நேற்று முன்தினம் இரவு மாதகல் - லூர்துமாதா தேவாலயத்துக்கு அண்மையாக 110 கிலோ எடை கொண்ட கேரள கஞ்சா மீட்கப்பட்டது.

55 பொதிகளாக பொதியிடப்பட்ட இந்த கஞ்சா பொதிகள் மாதகல் கடற்படையினரால் மீட்கப்பட்டது. எனினும், இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

மீட்கப்பட்ட கஞ்சா பொதிகளை காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு கொண்டு சென்றதுடன், அடுத்த கட்ட நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# தொழில் சட்டங்களை பின்பற்றாத முன்பள்ளிகள் மீது நடவடிக்கை!

## தொழில் திணைக்கள அதிகாரிகள் சுட்டிக்காட்டு





வடமராட்சி, மார்ச் 13

முன்பள்ளிகளை நடத்தும் நிர்வாகங்கள் தொழில் திணைக்கள சட்டத்தைப் பின்பற்றாமை முன்பள்ளித்துறை வளர்ச்சிக்கு அடிப்படையில் தடையாக இருக்கிறது. முன்பள்ளித்துறையின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு சட்டத்தைப் பின்பற்றாத முன்பள்ளிகள்மீது நடவடிக்கைளை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளோம் என்று தொழில் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முன்பள்ளிகள் தொழில் திணைக்கள சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்துவம் தொடர்பில் தெளிவுபடுத்தும் விழிப்புணர்வுக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெற்றிருந்தது. இதன்போதே தொழில் திணைக்கள அதிகாரிகள் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளனர்.

முன்பள்ளிகள் அனைத்தும் தொழில் திணைக்கள சட்டத்துக்கு அமைவாக, தொழில் திணைக்களத்தில் பதிவு செய்ய வேண்டும், சட்ட ஒழுங்கின்படி முன்பள்ளி ஆசிரியர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு 16 ஆயிரம் ரூபாய்க்கு குறையாத சம்பளத்தை நிர்வாகம் வழங்க வேண்டும். அதேவேளை, வழங்கப்படும் சம்பளத்தின் 20வீதத்துக் ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பும் 3 வீதத்துக்கு ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்பும் வழங்கப்படப் படவேண்டும்.

ஆனால், முன்பள்ளிகளை நடாத்தும் நிர்வாகங்கள் உரிய தொழில் திணைக்கள சட்டத்தைப் பின்பற்றாமை முன்பள்ளித்துறை வளர்ச்சிக்கு அடிப்படையில் தடையாக இருக்கின்றன. அதேவேளை, முன்பள்ளிகளுக்கான ஆசிரியர்களுக்கான நியமனங்களை மேற்கொள்ளும் நிர்வாகங்களே, அதே ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்கும் பொறுப்புடையவர்களாகின்றனர் என்று சுட்டிக்காட்டிய அதிகாரிகள், முன்பள்ளித்துறையின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு சட்டத்தைப் பின்பற்றாத முன்பள்ளிகள்மீது நடவடிக்கைளை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளோம் என்று குறிப்பிட்டனர்.

இந்த கூட்டத்தில், கரவெட்டி மற்றும் மருதங்கேணி கல்வி கோட்டத்திற்கு உட்பட்ட முன்பள்ளிகளை நடத்தும் முன்பள்ளி நிர்வாகத்தினர், முன்பள்ளி ஆசிரியர்கள் பங்கேற்றிருந்தனர்.

# நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ். மாநகர சபையின் நடமாடும் சேவை எதிர்வரும் புதன் கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை தட்டா தெரு சந்தியில் உள்ள கலா ஜோதி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் 1, 2, 9 ஆம் வட்டாரங்களுக்கான ஆதனவரி அறிவித்தல் படிவம் - சோலைவரி வழங்கல், பெயர்மாற்ற விண்ணப்ப படிவம் வழங்கல், சைக்கிள் உரிமம் வழங்கல் போன்ற சேவைகளை வழங்குவதுடன் பொது மக்களால் இதுவரை காலம் செலுத்தாதுள்ள ஆதனவரி நிலுவைகள் மற்றும் நடப்பாண்டு ஆதனவரி போன்றவற்றை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதில் பெறப்படும் வரிப் பணத்தைக் கொண்டு யாழ். மாநகர சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக யாழ். மாநகர சபை ஆணையாளர் அறிவித்துள்ளார். அத்துடன், நடப்பாண்டு ஆதனவரியை முழுமையாக செலுத்தும் பட்சத்தில் இரண்டாம், மூன்றாம், நான்காம் காலாண்டுக்கான ஆதனவரியில் 5 வீத கழிவை பெற முடியும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

(ஐ)

# யாழ். மாவட்ட மக்களுக்கு பொலிஸாரின் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 12

**யாழ். மாவட்டத்தில் அண்மைக்காலமாக மாடுகள் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. எனவே, மாடுகள் தொடர்பில் உரிமையாளர்கள் அவதானமாக இருக்குமாறு பல தடவைகள் வலியுறுத்தியும் பொதுமக்கள் அசண்டையீனமாக நடந்து கொள்வதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

வீதிகளிலும் , வீட்டுக்கு முன்னால் உள்ள மின்கம்பங்களிலும், கால்நடைகளை கட்டி வளர்ப்பதுடன் வீட்டின் வெளிக் கதவுகளையும் ஒழுங்கான முறையில் பூட்டாததாலேயே இவ்வாறு மாடுகள் களவாடப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

கால்நடை வளர்ப்பாளர்களின் அவதான குறைபாடே இவ்வாறு கால்நடைகள் திருடப்படுவதற்கு காரணமாக அமைவதுடன் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான கால்நடைகள் இவ்வாறு இறைச்சி வியாபாரிகளினால் திருடப்படும் செல்கின்றது.

தமது வாழ்வாதாரத்துக்கு உறுதுணையாக இருக்கும் கால்நடைகளை ஒழுங்கான முறையில் பராமரித்து வளர்ப்பதன் மூலம் இவ்வாறு திருட்டுக்களை கட்டுப்படுத்த முடியும் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அண்மைக்காலமாக கோப்பாய், அச்சுவேலி கரவெட்டி, நீர்வேலி, கோப்பாய் பகுதிகளில் கால்நடைகள் திருட்டு சம்பவம் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. இந்த திருட்டு சம்பவத்துக்கு பயன்படுத்தப்படும் இரண்டு வாகனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அந்த நபர்களை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக யாழ். மாவட்ட மூத்த பொலிஸார் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ)



# அதிசொகுசு பயணிகள் கப்பல் நேற்று கொழும்பை வந்தடைந்தது

கொழும்பு, மார்ச் 12

சுற்றுலாப்பயணிகள் 1,894 பேர் மற்றும் 906 ஊழியர்களுடன் பிரின்ஸஸ் குரூஸ் அதிசொகுசு சுற்றுலா பயணக் கப்பல் நேற்று சனிக்கிழமை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

இக்கப்பல் தாய்லாந்திலிருந்து வருகை தந்துள்ளது. இக்கப்பலில் வருகை தந்துள்ள சுற்றுலாப் பயணிகளில் 159 பேர் கொழும்பு துறைமுகத்தில் இறங்கினர். இவர்கள் கண்டி, பின்னவல, நீர்கொழும்பு மற்றும் இங்கிரிய ஆகிய பிரதேசங்களுக்கு செல்லவுள்ளனர்.

இந்தக் கப்பல் சனிக்கிழமை மாலை கொழும்பு துறைமுகத்திலிருந்து டுபாய் நோக்கி திரும்பிச் சென்றது. இந்த ஆண்டில், நாட்டுக்கு வருகை தந்துள்ள முதலாவது அதிசொகுசு சுற்றுலாப்பயணக் கப்பல் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதே வேளை கோவிட் தொற்றின் பின்னர் சீனாவின் ஷங்காய் நகரிலிருந்து 180 சீன சுற்றுலாப்பயணிகள் கொண்ட குழு வெள்ளிக்கிழமை நாட்டை வந்தடைந்துள்ளது. இவர்கள் 7 நாட்கள் நாட்டில் தங்கியிருந்து வெவ்வேறு பகுதிகளுக்கு பயணமாகவுள்ளனர். (ஐ)

# வெவ்வேறு விபத்துகளில் சிறுவன் உட்பட இருவர் பலி!

கொழும்பு, மார்ச் 12

நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்துகளில் சிறுவன் ஒருவன் உட்பட இருவர் உயிரிழந்தனர்.

இரத்தினபுரி - நிவித்திகல பொலிஸ் பிரிவின் தெலவத்த பிரதேசத்தில் மோட்டார் சைக்கிள் வேக கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மின்கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

இதில், மோட்டார் சைக்கிளை செலுத்தியவரும், அவருடன் பயணித்த சிறுவனும் படுகாயமடைந்து வத்துப்பிட்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இரத்தினபுரி ஆதார மருத்துவமனைக்கு சிறுவன் மாற்றப்பட்டபோதும் 14 வயதேயான சிறுவன் உயிரிழந்தார்.

மேலும், களுத்துறை தெற்கு பொலிஸ் பிரிவில் களுத்தறை-மதுகம பிரதான வீதியின் கடுகுருந்த பிரதேசத்தில் வீதியை கடப்பதற்கு முயற்சித்த நபர் வாகனத்தில் மோதுண்டு உயிரிழந்தார். உயிரிழந்தவர் இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கொள்வனவான கண்ணீர் குண்டுகள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படவில்லை

கொழும்பு, மார்ச் 12

இலங்கை பொலிஸ் சேவைக்கு கண்ணீர் புகை குண்டுகளை கொள்வனவு செய்த போது அவற்றின் உள்ளடக்கம் தொடர்பில் இரசாயன ஆய்வு கூட பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை என தகவல்கள் வெளியாகியுள்ளன.

கண்ணீர் புகை குண்டுகள் தொடர்பில் சமூகம் மற்றும் அமைதிக்கான மையத்தின் குழுவொன்று மேற்கொண்ட ஆய்விலேயே இந்தத் தகவல் வெளியானது.

இந்த ஆய்வின்படி, 2022 ஆம் ஆண்டில் ஆர்ப்பாட்டங்களை கலைக்க காலாவதியான கண்ணீர் புகைக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், அவற்றில் 2000ஆம் ஆண்டு முதல் தயாரிக்கப்பட்ட கண்ணீர்ப்புகை குண்டுகளும் உள்ளடங்குகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

2012 முதல் 2019 வரையான காலப்பகுதியில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கொண்டு வரப்பட்ட 40 ஆயிரம்கண்ணீர் புகைக் குண்டுகள் காலாவதியானவை. அத்துடன், 2022 ஆம் ஆண்டு ஜூலை 20 ஆம் திகதி வரை 8ஆயிரத்து 265 கண்ணீர்ப்புகைக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

துப்பாக்கிகளுக்கு அருகில் கண்ணீர்புகையை பயன்படுத்தக்கூடாது என கண்ணீர் புகை குண்டு தயாரிப்பாளர்கள் அறிவுறுத்தியுள்ள போதிலும், 2022 ஆம் ஆண்டில் துப்பாக்கிகளுக்கு அருகிலேயே அதிகளவான கண்ணீர்ப்புகை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டன என்றும் அந்த ஆய்வுக்குழு கூறியுள்ளது.

நாட்டில் கடுமையான நிதி நெருக்கடி காணப்பட்ட 2022 மார்ச் 31 முதல் ஜூலை 20 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் பொலிஸார் 84 சந்தர்ப்பங்களில் 6 ஆயிரத்து 722 கண்ணீர்ப்புகை குண்டுகளை பயன்படுத்தப்பட்டன. இவற்றின்பெறுமதி 2.6 கோடி ரூபாயாகும்.

ஒரே நாளில் அதிகளவான கண்ணீர் புகை பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பம் 2022 ஆம் ஆண்டில் பதிவாகியிருந்ததுடன், அந்நாளில் 100 கண்ணீர்ப்புகைக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்றும் தெரிவிக் கப்பட்டது. (ஐ)

# மட்டக்களப்பில் விபத்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

மட்டக்களப்பு, மார்ச் 12

மரணவீட்டுக்கு உணவு கொடுக்க மோட்டார் சைக்கிளில் சென்றவரை பின்னால் வந்த பட்டா ரக வாகனம் மோதியதில் ஒருவர் உயிரிழந்தார்.

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதான வீதியின் பிரதேச செயலகம் முன்பாக நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த விபத்தில், விநாயகபுரத்தைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான கோ. முருகன் (52) என்பவரே உயிரிழந்தார்.

விபத்தில் படுகாயமடைந்தவரை உடனடியாக வாழைச்சேனை ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டபோதும் அங்கு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

சம்பவ இடத்துக்கு சென்ற வாழைச்சேனை மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதில் நீதிபதி எம். தயாபரன் விசாரணைகளை மேற்கொண்டார். (ஐ)

# சிறுமியை தாக்கிய மாற்றாந்தாய் கைது

கொழும்பு, மார்ச் 12

சமூக ஊடகங்களில் பரவிய காணொலியின் அடிப்படையில் 17 வயது சிறுமியை கொடூரமாக தாக்கிய பெண்ணை ராகமை பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

கம்பஹா - ராகமை - குருகுலாவ பிரதேசத்தில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில், சந்தேக நபர் சிறுமியின் 39 வயதான மாற்றாந்தாய் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறுமி பொலிஸாரால் ராகமை போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சிறுமியின் தாய் இறந்துவிட்டார். சிறுமி, தனது தந்தையின் இரண்டாவது தாரமான இந்த பெண்ணுடன் அவர் வசித்து வந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இரண்டாவது திருமணத்தில் 9 வயதான மகள் உள்ளார். தந்தை தற்போது கொரியாவில் தொழில் புரிகிறார்.

வீட்டில் பொருத்தப்பட்டிருந்த சி. சி. ரி. வி. கமெராக்களில் பதிவான காட்சிகளை பாதிக்கப்பட்டவரின் தந்தை தனது கைபேசியில் எடுத்து, சிறுமியை தாக்கும் காணொலியை முகநூலில் வெளியிட்டுள்ளார் என்று பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் நேற்றுமுன்தினம் மாலை வத்தளை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# 50 கோடி டொலர்களை வாங்கியது மத்திய வங்கி!

கொழும்பு, மார்ச் 12

கடந்த சில நாட்களாக இலங்கையில் டொலர் பெறுமதி சடுதியாக வீழ்ச்சியடைந்திருந்தது. எனினும், இந்த சடுதியான சரிவைக் கட்டுப்படுத்தும் வகையில் இலங்கை மத்திய வங்கி தலையிட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி நாணயச் சந்தையில் இருந்து கடந்த சில தினங்களில் 50 கோடி டொலர்களை கொள்வனவு செய்திருந்தது.

அவ்வாறு கொள்வனவு செய்யாமல் இருந்திருந்தால் டொலர் பெறுமதி மேலும் வீழ்ச்சியடைந்திருக்கும் என்று இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆய்வுப்பிரிவின் பணிப்பாளர் பி. கே. ஜி. ஹரிச்சந்திர தொலைக்காட்சி நிகழ்வு ஒன்றில் தெரிவித்தார். (ஐ)

# எரிபொருள் விற்பனை 13 மாதங்களில் வீழ்ச்சி!

கொழும்பு, மார்ச் 12

நாட்டில் கடந்த 13 மாதங்களில் எரிபொருள் விற்பனை வீழ்ச்சியடைந்துள்ள தாக கனியவள கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய ஓட்டோ டீசலின் விற்பனை 50 சத வீதத்தாலும் பெற்றோலின் விலை 30 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்துள்ளதான என்று தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம், மண்ணெண்ணெய் விற்பனையும் 70 சத வீதத்தால் குறைவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
12.03.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், மாசி 28

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## முஸ்லிம்களை குற்றம்சாட்டுவதில் பொருளில்லை?

போர் காலத்தை பயன்படுத்தி நன்மையடைந்த முஸ்லிம் அரசியல்வாதிகள் - போருக்கு பின்னரான சூழலையும் பயன்படுத்துகின்றனர். ஆனால், தமிழ் மக்களின் அரசியல் பிரச்னைகள் தீர்க்கப்படாமல் இழுபட்டுச் செல்கின்றது. இவ்வாறு, அம்பாறை மாவட்ட தமிழரசு கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கலையரசன் பேசியிருக்கின்றார். இந்தக் குற்றசாட்டை உண்மையில் யாரை நோக்கி முன்வைக்க வேண்டும்? முஸ்லிம்களை நோக்கியா அல்லது கலையரசனின் கட்சித் தலைமையை நோக்கியா? முஸ்லிம் அரசியல்வாதிகள் புத்திசாலித்தனமாக செயல்படுகின்றார்கள் என்றால் அது அவர்களின் திறமை - அதனை எவ்வாறு ஒரு குற்றச்சாட்டாக முன்வைக்க முடியும்?

போர் இடம்பெற்ற காலத்தில், தமிழ் மொழி பேசும் பிறிதோர் இனமென்னும் வகையில் அரசாங்கத்தோடு இணைந்து முஸ்லிம்கள் தங்களை பெரியளவில் வளர்த்துக் கொண்டனர். குறிப்பாக, கிழக்கு மாகாணத்தில் ஒரு பலமான முஸ்லிம் மத்தியதர சமூகம் உருவாகியிருக்கின்றது. இந்த பின்னணியில் கிழக்கு மாகாணத்தில் தங்களை தனித்துவமானதோர் இனமாக நிறுவும் முற்சியில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். மத்தியில் ஆட்சியமைக்கும் அரசாங்கங்களோடு இணைந்து செயல்படுவதையே முஸ்லிம்கள் தங்களின் பிரதான அரசியல் தந்திரோபாயமாக வைத்திருக்கின்றனர். இதனை தமிழர்கள் எவ்வாறு எதிர்கொள்வது?

கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் - குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களை பொறுத்தவரையில் தமிழ் பேசும் மக்களாக இருந்தாலும்கூட தமிழ் - முஸ்லிம் மக்கள் இணைந்து பயணிப்பதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவாகவே இருக்கின்றது. கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸும் மாகாண சபையில் இணைந்து ஆட்சி அமைத்திருந்தாலும் அதனைக் கொண்டு, தமிழ் - முஸ்லிம் சமூகங்களுக்கு இடையில் உறவு வலுவடையவில்லை. மாறாக மேலும் விரிசல்களுக்கே வழிவகுத்தது. கல்முனை பிரதேச செயலாளர் பிரிவு தொடர்பான பிரச்னை பல வருடங்களாக நீண்டு செல்கின்றது. மைத்திரி - ரணில் அரசாங்கத்துடன் தேனிலவில் இருந்த காலத்தில், பிரச்னையை தீர்ப்பதற்கு சம்பந்தன் - சுமந்திரன் முயற்சிக்கவில்லை. மாறாக வரமுடியாத மாயமான் அரசியல் யாப்புக்கு பின்னால் இழுபட்டுத் திரிந்தனர். இறுதியில் மீண்டும் பழைய நிலைக்கு திரும்பியிருக்கின்றனர்.

கடந்த பாராளுமன்ற தேர்தலின் போது, அம்பாறை மாவட்ட ஆசனத்தை தமிழரசு கட்சி இழந்தது. வழக்கமாக தமிழரசு கட்சிக்கு வாக்களித்த மக்கள் விடுதலைப் புலிகளின் முன்னாள் மட்டு. - அம்பாறை தளபதி கருணாவுக்கு அதிகமாக வாக்களித்தனர். வாக்குகள் சிதறியதில் ஆசனம் பறிபோனது. முஸ்லிம்களால் ஏற்படும் அச்சுறுத்தல்களை பிரசாரமாக்கியே கருணாவால் வாக்குகளை பெறமுடிந்தது. அடுத்த தேர்தலிலும் அம்பாறையில் பாராளுமன்ற ஆசனத்தை தக்கவைப்பது மிகவும் சவாலானது.

இதேபோன்று திருகோணமலையிலும் பாராளுமன்ற ஆசனத்தை தக்கவைப்பது மிகவும் சவாலானது. இவ்வாறான மாவட்டங்களில் அனைவரும் ஓரணியாகி ஆளுமைமிக்க வேட்டபாளர்களை நிறுத்துவதன் மூலம் மட்டுமே ஓரளவாவது வெற்றிக்கு முயற்சிக்கலாம். - ஆனால், தமிழரசு கட்சியோ, அவ்வாறான தூரநோக்குடன் செயல்படுவதாகத் தெரியவில்லை. ஏற்கனவே, கட்சிகள் மத்தியிலிருந்த ஐக்கியத்தையும் தமிழரசு கட்சி சீர்குலைத்திருக்கின்ற நிலையில், இவ்வாறான பலவீனமான மாவட்டங்களில் வாழும் மக்களின் அரசியல் இருப்பைப் பாதுகாப்பதற்கு தமிழரசு கட்சி எவ்வாறான அணுகுமுறையை கொண்டிருக்கின்றது? இதுபற்றி ஏனைய கட்சிகளோடு எவ்வாறான கலந்துரையாடல்களை முன்னெடுக்கின்றது?

எனவே, பாராளுமன்ற உறுப்பினர் கலையரசனுக்கு தனது தொகுதி மக்கள் தொடர்பில் உண்மையிலேயே கரிசனையிருந்தால் முதலில் கட்சியின் தலைமையை நோக்கி கேள்வியெழுப்ப வேண்டும். மற்றவர்களை குற்றம்சாட்டுவது இலகுவானது ஆனால் சொந்த கட்சியின் தலைமையின் தவறுகளை சுட்டிக்காட்டுவதுதான் சவாலானது. முஸ்லிம் அரசியல்வாதிகளை நோக்கி கேள்வியெழுப்புவதில் பயனில்லை. ஏனெனில், அவர்கள், அவர்களின் மக்களின் நலனைப்பற்றித்தான் சிந்திப்பார்கள்.

# டொலர் சந்தைக்கு வந்தமையே ரூபாய் வலுவடையக் காரணம்!

கொழும்பு, மார்ச் 12

டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி வலுவடைவதற்கு பல காரணங்கள் இருக்கின்றன என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பிரிவின் பேராசிரியர் பிரியங்க துனுசிங்க தெரிவித்துள்ளார். பொருளாதார செயல்பாட்டின் சில செயல்பாடுகளுடன் அதுவரை டொலர்களை வைத்திருந்த தரப்பினர் அந்த டொலர்களை சந்தையில் விடுவித்தமையும் இந்த நிலைமைக்கு மற்றொரு காரணம் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், இந்த வருட இறுதிக்குள் டொலரின் பெறுமதி மீண்டும் உயரலாம் என பிட்ச் ரேட்டிங் நிறுவனம் தெரிவித்திருந்த கணிப்பையும் அவர் ஏற்றுக் கொண்டார்.

(ஐ)

# தேர்தலை காலம்தாழ்த்துவது இனியும் வெற்றியளிக்காது!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



கொழும்பு, மார்ச் 12

தேர்தலை காலம் தாழ்த்துவதற்கான முயற்சி இனியும் வெற்றியளிக்காது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசார கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை காலம் தாழ்த்துவதற்கு அரசாங்கத்தால் எவ்வகையான சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டாலும் மக்கள் பலம் அவை அனைத்தையும் விட வலுப்பெற்றதாகும். நாட்டின் நிலைமை மிகவும் மோசமானதாக இருப்பதாகவும் மக்கள் பொறுமையுடன் இருக்க வேண்டும் என்றும் அரசாங்கம் தொடர்ச்சியாகக் கூறி வருகின்றது.

220 இலட்சம் மக்கள் எதிர்கொண்ட துன்பத்தை ஆட்சியாளர்கள் எதிர்கொள்ளவில்லை. ஆட்சியாளர்கள் சுகபோக வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

ஊழல், மோசடிகளால் நாட்டை சீரழித்த ராஜபகஷ குடும்பத்தின் ஆட்சியே இன்றும் தொடர்கின்றது. ராஜபக்ஷ குடும்பத்தை பாதுகாப்பதே தற்போதைய அரசாங்கத்தினதும் நோக்கமாகும்.

நாட்டை வங்குரோத்தடைய செய்த ராஜபக்ஷ குடும்பத்துக்கு முன்னுரிமையளித்து மக்கள் கைகளில் கடும் பொருளாதார கொள்கையைத் திணிக்கும் இந்த அரசாங்கம் நிச்சயம் தோற்கடிக்கப்படும் - என்றார்.

# நாட்டின் அரசாங்கத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கையில்லை

## கீன்ஸ் நெல்சன் எம்.பி

கொழும்பு, மார்ச் 12

தற்போதைய அரசாங்கம் தொடர்பில் நாட்டு மக்கள் நம்பிக்கை இழந்தவர்களாகவே காணப்படுகின்றனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கின்ஸ் நெல்சன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

"பொலநறுவை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் விவசாயிகள் பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர். சீன அரசாங்கத்தால் பெற்றுக் கொடுக்கப்பட்ட டீசலை விவசாயிகளுக்கு வழங்க முடியாத நிலையில் அரசாங்கம் உள்ளது.

சீனாவிடமிருந்து பெற்றுக்கொண்ட டீசலை தலா 20 லீற்றர் என்ற முறையில் விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுப்பதாக அரசாங்கம் கூறியிருந்தது. இந்த அந்தத் தொகை 15 லீற்றர் என்றளவில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

5 லீற்றருக்கு என்ன நடந்தது? ஒரு ஹெக்ரெயருக்கும் குறைந்தளவில் நெற்செய்கையை மேற்கொள்பவர்களுக்கு மட்டுமே டீசல் விநியோகிக்கப்படும் என்றும் தற்போது கூறுகின்றனர். ஆரம்பத்தில் இவ்வாறு கூறவில்லை.

நாடளாவிய ரீதியில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. இரண்டு ஏக்கருக்கும் மேற்பட்ட தொகையில் நெற்செய்கையை மேற்கொள்பவர்களும் இருக்கின்றனர். அரசாங்கமானது எந்த விவசாயிக்கும் டீசல் மானியத்தை வழங்கப் போவதில்லை - என்றார்.

(ஐ-கே)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பகிர்வு -71

# பகிர்வதில் சுகம் உண்டு....

கணபதி சர்வானந்தா

திருவள்ளுவர் அருளிய திருக்குறளில் ஈகை என்ற அதிகாரத்தல் பொருள் தேடலின் இறுதி ஈகையில் முடிவதுதான் சிறப்பு என்று கூறுவதன் மூலம் தமிழனின் பகிர்வு பற்றிய சிந்தனை மிகவும் தொன்மையானதும் செழுமைமிக்கதும் என அறியலாம்.

அதேபோல அறிவைப் பகிர்வதன் மூலம் நாம் பெறும் இன்பமும் மகிழ்ச்சியும் அளப்பரியது. அறிவு பகர்வதன் மூலம் பெருகுமேயொழியக் குறைவடைவதில்லை. அதே போலச் செல்வமும் கொடுக்கக் கொடுக்கக் குறையாது என்றும் சொல்லுவர். கடந்த காலத்தே எம்மிடையே வாழ்ந்த செல்வந்தர்களில் சேர்.பொன்.இராமநாதன், அவரது சகோதரர் சேர்.பொன்.அருணாசம் ஆகியோர் பகிர்ந்து உண்ண வேண்டும் என்று எண்ணியதால்தான் பல கல்விச்சாலைகள் தோன்றி இன்றும் பல ஆயிரக் கணக்கான மாணவர்கள் கற்கக் கூடிய பல்கலைக் கழகமாக மாறியிருக்கிறது. அதே போல இராமநாதன் அவர்களின் துணைவியாரும் பலவற்றை எமது சமூகத்திற்கெனப் பகிர்ந்துவிட்டுச் சென்றிருக்கிறார்.





பொதுவாக ஒரு இசைக் கலைஞன் பாடும்போது பிறரை மகிழ்விக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு பாடுவதை அவதானித்திருப்பீர்கள். அத்தருணத்தில் அவன் தானும் மகிழ்ந்து பிறறோடு அம்மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற சிந்தனையும் அவனுள் மேலோங்கி நிற்கும்.

ஒரு சாதாரண மனிதன் கூட ஒரு மரத்தை நடும்போது பகிர்வு என்ற நல்லெண்ணமே அவனுள் மோலோங்கி நிற்கும். பல வருடங்களுக்கு முன் யாரோ ஒரு மனிதன் நட்டுவைத்த ஆலமரங்களும் அரச மரங்களும் இன்று ஆழ வேரூன்றி பாரிய விருட்சமாகப் பலருக்கு நன்மையளித்துக் கொண்டிருப்பது எமது முன்னோரி டையே இருந்த நல்லெண்ணத் தையே காட்டுகின்றது. அன்று அவ் விதையை நடுவதற்கு அவரிடம் பணம் இருந்திருகாது. பகிரவேண்டும் என்ற எண்ணம் இருந்திருக்கும்.



எனவே நல்லகாரியங்களைச் செய்யச் செல்வம் தேவை இல்லை. பகிர்ந்து உண்ண வேண்டும் என்ற நல்லெண்ணம் இருந்தாலே போதும் விதையை விருட்சமாக்கிக் கொடுக்க.

செல்வத்தைத் தேடும் திறன் என்பது ஒருவனுக்கு ஆண்டவன் கொடுத்த பரிசு எனலாம். அதனால்தான் எல்லோராலும் அத னைத் தேட முடிவதில்லை. எனவே அப்பரிசை எனக்கு ஆண்டவன் கொடுத்திருப்பதை ஒரு வரப்பிரசாதமாக எண்ணுகிறேன். பணம் பண்ணுவதை எனது கடமை என்றும் எண்ணுகிறேன். அதனால் தான் பணம் பண்ணுவதில் எனது நேரத்தை அதிகம் செலவிடுகிறேன்.மேலும் எனது மனச் சாட்சி சொல்லும்படி அதனை எனது சக மனிதனின் நன்மைக்காகப் பயனபடுத்த வேண்டும் எனவும் எண்ணு கிறேன்.ஒரு இசைக் கலைஞன் தான் பாடும்போது தானும் மகிழ்ந்து பிறரையும் மகிழ்விப்பதைப்போல செல்வந்தனும் தன்னிடமுள்ள செல்வத்தைத் தானும் அனுப வித்துப் பிறரோடும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்கிறார் அமெரிக்கச் செவ்வந்த ரான றொக்பெலர். எனவே செல்வத்தைத் தேடுவதன் பயன் அதனைப் பகிர்ந் துண்ணுவதிலேயே தங்கியுள்ளது.பெருமையும் அதுவே. ஒருவன் தேடிய பெரும் செல்வத்தின் பயன் என்ன வெனில் அதனைப் பலர் பகிர்ந்து உண்ணுவதாக சிந்தித்துச் செயலாற் றுவதே. பலர் செல்வந்தர்களின் பகிர்ந்து உண்ண வேண்டும் என்ற நற்சிந்தனையால் தான் ஆண்டுதோறும் அவர்கள் நினைவாக நினைவுப் பரிசில்கள் வழங்கப் பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# இந்தவார ராசிபலன் 12.03.2023 - 18.03.2023

நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 12.00 - 01.30 திதி : பஞ்சமி

மார்ச் 12 ஞாயிற்றுக்கிழமை
சுபகிருது வருடம் - மாசி 28

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

பல வகையிலும் நற்பலன்கள் ஏற்படும். தெய்வ பக்தி அதிகரிக்கும். பயணங்கள் மகிழ்ச்சி தரும். வேலையில் மாற்றம் உண்டாகலாம். மருத்துவ செலவு உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் எதிர் பாராத சிக்கலை சந்திக்க வேண்டி இருக்கலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதல் பணி சுமையை ஏற்க வேண்டி இருக்கும். கணவன், மனைவி இருவரும் மனம் விட்டு பேசி எடுக்கும் முடிவுகள் நன்மை தரும். பிள்ளைகளின் கல்வியில் கவனம் தேவை.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

மனதில் ஏதாவது குழப்பம் ஏற்பட்டு நீங்கும். சாமர்த்தியமான பேச்சு கை கொடுக்கும். பணவரத்து திருப்தியாக இருக்கும். வீண் பிரச்னைகள் நீங்கும். வெளிநாட்டு பயணங்கள் கைகூடும். தொழில் வியாபார சிக்கல்கள் நீங்கி நன்கு நடைபெறும். தொழில் வியாபாரம் விரிவாக்கம் செய்ய முயற்சி மேற்கொள்வீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவி கூடுதல் பொறுப்புகள் கிடைக்கலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி காணப்படும். உறவினர், நண்பர்கள் மத்தியில் மதிப்பு உயரும். காரிய தடைகள் நீங்கும்.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

வீண் அலைச்சல் ஏற்படும். உழைப்பு அதிகரிக்கும். உடல் ஆரோக்கியத்தவில் கவனம் தேவை. பயணங்களால் வீண் செலவு உண்டாகும். தொழில் வியாபாரத்தில் திடீர் தடைகள் ஏற்பட்டு நீங்கும். வாடிக்கையாளர்களை திருப்திபடுத்த கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமாக பணிகளை மேற்கொள்வது நல்லது. மேலதிகாரிகள் மற்றும் சக ஊழியர்களை அனுசரித்து செல்வது நன்மை தரும். குடும்பத்தில் சந்தோஷமான சூழ்நிலை காணப்படும்.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

பிரதிபலன் எதிர்பார்க்காமல் காரியங்களை செய்யும் குணமுடைய உங்களுக்கு இந்த வாரம் எதிர்ப்புகள் விலகும். செய்யும் காரியங்களால் பெருமை ஏற்படும். காரிய தடைகள், கூடுதல் செலவு உண்டானாலும் பணவரத்து அதிகரிக்கும். புத்திசாதூரியம் கூடும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றமான நிலை காணப்படும். வியாபார நிமித்தமாக பயணங்கள் செல்ல வேண்டி இருக்கும்.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

எதைக்கண்டும் கலங்காமல் மன துணிவுடன் செயல்படுவீர்கள். எதிர்பாராத செலவு ஏற்படும். முயற்சிகளில் சிறு தடைகள் ஏற்படும். உஷ்ணம் சம்பந்தமான நோய் உண்டாகலாம். இருக்கும் இடம் விட்டு வெளியில் தங்க நேரிடும். தொழில், வியாபாரத்தில் போட்டியை சந்திக்க வேண்டி இருக்கும். வாடிக்கையாளர்களிடம் கடுமையான பேச்சை தவிர்ப்பது நல்லது. உத்யோகத்தில் கவனமாக பணிகளை மேற்கொள்வது நல்லது.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

நன்மை தீமை அறிந்து செயல்படுவீர்கள். திட்டமிட்டபடி காரியங்கள் நடந்து முடியாமல் இழுபறியாக இருக்கும். வீண் வாக்குவாதங்கள் ஏற்படும். வாகன லாபம் ஏற்படும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறி வேகம் பிடிக்கும். தேங்கி இருந்த சரக்குகள் விற்பனையாகும். லாபம் அதிகரிக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் சிறப்பான பலன் கிடைக்க பெறுவர். புதிய பொறுப்புகள் சேரும். வேலை தேடியவர்களுக்கு வேலை கிடைக்கும். கணவன் மனைவிக்கியே அன்யோன்யம் அதிகரிக்கும்.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

மனதில் உறுதி பிறக்கும். எடுத்த முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். உடல் ஆரோக்கியம் உண்டாகும். எதிர் பாலினத்தாரால் நன்மை உண்டாகும். வீண் செலவு உண்டாகும். வீட்டை விட்டு வெளியில் தங்க நேரிடும். தொழில் வியாபாரம் தொடர்பான முக்கிய முடிவுகள் எடுப்பதில் தடுமாற்றம் உண்டாகும். லாபம் குறையக்கூடும். உத்யோகத்தில் இருப்பவர்கள் நீண்ட நேரம் பணியாற்ற வேண்டி இருக்கும்.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

எதை செய்தாலும் அதில் உள்ள லாப நஷ்டங்களை கணக்கிட்டு செயல்படுவீர்கள். மனதில் உற்சாகம் ஏற்படும். நெருப்பு, ஆயுதங்களை கையாளும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் தேவையற்ற இடர்பாடுகள் ஏற்படலாம். பார்ட்னர்களை அனுசரித்து செல்வது நல்லது. கடன் கொடுக்கும்போது கவனம் தேவை. உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு குறிக்கோளற்ற வீண்அலைச்சல், கூடுதல் உழைப்பும் இருக்கும்.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

மனதில் ஒன்று வைத்து வெளியில் ஒன்று பேசாத குணமுடைய உங்களுக்கு தன்னம்பிக்கை வளரும். வாக்கு வன்மை அதிகரிக்கும். சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். அறிவுத்திறன் அதிகரிக்கும். பெயரும், புகழும் கூடும். தொழில் வியாபாரம் வளர்ச்சி பெறும். இது வரை இருந்த தொய்வு நீங்கும். லாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் தீரும். கணவன், மனைவிக்கிடையே அன்பு அதிகரிக்கும்.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

எதிலும் பின்வாங்காத அஞ்சா நெஞ்சம் உடைய உங்களுக்கு வீண் செலவு ஏற்படும். காரியங்களில் தாமதம் உண்டாகும். மிகவும் வேண்டியவரை பிரிய நேரிடும். கண்மூடித்தனமாக எதையும் செய்யாமல் யோசித்து செய்வது நல்லது. தாய், தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் அதிகரிக்கும். எதிர்பார்த்த லாபம் தாமதப்படும்.

## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

துன்பத்தையும், இன்பமாக மாற்றும் வல்லமை பெற்ற உங்களுக்கு எல்லா வகையிலும் நன்மை உண்டாகும். குறிக்கோளற்ற பயணங்கள் உண்டாகும். விழிப்புடன் இருப்பது நல்லது. சுப செலவுகள் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் போட்டிகளை சந்திக்க வேண்டி இருக்கும். பார்ட்னர்களுடன் சுமூகமாக செல்வது நல்லது. பழைய பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். கணவன், மனைவிக்கிடையே திடீர் மனஸ்தாபம் ஏற்படலாம். மனம் தளராமல் இருப்பது நல்லது.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

காரிய அனுகூலங்கள் ஏற்படும். மனோதிடம் அதிகரிக்கும். பயன் தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள். செல்வம் சேரும். வாகனம் வாங்க எடுத்த முயற்சி கைகூடும். பயணங்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் நீங்கி முன்னேற்றம் உண்டாகும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். லாபம் அதிகாரிக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு சம்பள உயர்வு உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். பிள்ளைகளின் செயல்கள் சந்தோஷத்தை தரும்.

# ஆபத்தை விஞ்சிய வாழ்வின் ஏக்கம்




தமிழகத்தின் அகதி முகாம்களில் தங்கியுள்ள ஆறு இலங்கைத் தமிழர்கள் இரகசியமாக நியூசிலாந்து செல்ல முயன்றபோது பிடிபட்ட செய்தி கேட்டு மிகுந்த மன வேதனையடைந்தேன். கைது செய்யப்பட்டவர்க ளில், கிருஷ்ணகிரி மாவட்டம் ஹோசூர் கெலவரப்பள்ளி யில் உள்ள அகதிகள் முகாமில் தங்கியிருந்த நாற்பது வயதான புவனேஸ்வரி என்ற பெண்மணியும், அதே முகாமைச் சேர்ந்த பதினெட்டு வயது இளைஞன் தினே ஷும் அடங்குவர். வேளாங்கன்னி கடற்கரையில் ஒரு மோட்டார் படகில் அவர்கள் பயணிக்கப்போவதாகக் கிடைத்த துப்பின் அடிப்படையில், புதனன்று இரவு, தமிழ்நாடு காவல் துறையின் கியூ பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்களுக்கு வெற்றிகரமான பயணத்தையும் நியூசி லாந்தில் நல்ல வேலைகளையும் பெற்றுத் தருவதாக உறுதியளித்துப் பெரும் தொகையை விலைபேசியிருந்த மூன்று முகவர்களும் கைதாகியுள்ளனர். அந்த முகவர்க ளும் தமிழகத்தின் வெவ்வேறு அகதி முகாம்களைச் சேர்ந்த ஈழத் தமிழர்கள் என்றும், இந்தப் பயணத்துக் காகப் பதிவு செய்யப்படாத ஒரு படகின் சொந்தக் காரரான, பூம்புகாரைச் சேர்ந்த செல்வம் என்பவரைத் தொடர்பு கொண்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின் றன. செல்வத்திடம் வழங்க, இந்த ஆறு அகதிகள் வைத்திருந்த ரூ.17 இலட்சத்தைக் காவல் துறை கைப்பற்றியுள்ளது. அவரையும் கைதுசெய்துள்ளது. இந்த ஆறு பேரும் சில நாட்களுக்கு முன்னர், தங்கள் முகாம்களைவிட்டு வெளியேறி, வேளாங்கன்னியிலுள்ள ஒரு விடுதியில் தங்கியுள்ளனர். விசாரணையில், மாதா கோயிலுக்கும் நாகூர் தர்காவிற்கும் பெயர்போன அந்த ஊரிலேயே இன்னொரு விடுதியில் அந்த முகவர்கள் தங்கியிருப்பது தெரியவந்தது.



அந்த ஆறு அகதிகளும் எதிர்காலத்தில் இதுபோன்ற சாகசச் செயல்களில் ஈடுபடவேண்டாம் என்ற கடும் எச்சரிக்கையுடன் அவரவர் முகாம்களுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர் என்றும், அந்த மூன்று முகவர்களும் காவல் துறையினரின் பிடியில் உள்ளதாகவும் இவர்கள் வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களா என்றும், மனிதர்களைக் கடத்தும் கும்பலுடன் தொடர்பு இருக்கிறதா என்றும் விசாரணை செய்துவருவதாகக் கூறப்படுகிறது.

“கடல் கடந்து செல்ல ஆபத்தான படகுகளை நம்பிப் பயணிக்கும் போக்கும், அவுஸ்திரேலியாவில் வளமான எதிர்காலத்தை எதிர்பார்த்துச் செல்லும் ஆர்வமும் முகாம்களில் நடத்தப்படும் விழிப்புணர்வுப் பிரச்சாரங்க ளுக்குப் பிறகு, அகதிகளிடையே பெருமளவு குறைந்துள் ளன. ஆனால், இப்போதைய சம்பவம், இந்த முகவர்கள் மீண்டும் செயல்படத் தொடங்கியிருப்பதைக் காட்டு கிறது.” என்கிறார் சென்னை எழும்பூரில் உள்ள ஈழ அகதிகள் மறுவாழ்வு அமைப்பான (OfERR - Organisation for Eelam Refugees Rehabilitation) - ‘ஒபரை’ச் சேர்ந்த பத்மநாதன்.

தமிழினப் படுகொலையை அடுத்து, இலங்கையை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்தில் இருந்த, தந்தை செல்வாவின் மகனும் வழக்கறிஞருமான எஸ். சி. சந்திரஹாசனால், 1984இல் தொடங்கப்பட்டது இந்த ‘ஒபர்’ அமைப்பு. தமிழீழ மக்களின்மீது கொண்ட பற்றால் சந்திரஹாசன் இலங்கை அரசு, விடுதலைப் புலிகள் இயக்கம் இரண்டாலும் வெறுக்கப்பட்டவர். தமிழக அரசால் மாநிலம் முழுவதும் அமைக்கப்பட் டுள்ள 110இற்கும் அதிமான அகதி முகாம்களில் தங்கியிருக்கும் ஆயிரக்கணக்கான அகதிகளுக்கு ‘ஒபர்’ அமைப்பு உதவியுள்ளது.

ஒரு பத்திரிகையாளனாக நான் பல முறை சந்திர ஹாசனைச் சந்தித்துள்ளேன். இலங்கைத் தமிழர்களின் துயரங்கள் குறித்த உண்மையான கவலைகொண்டவர் அவர். முகாம்களில் தங்கியிருக்கும் அகதிகளின் வாழ்க் கைத் தரத்தை உயர்த்தவும் உணவு, சுகாதாரம், கல்வி ஆகியவற்றுக்கான வாய்ப்புகளை மத்திய, மாநில அரசுக ளிடமிருந்து பெற்றுத் தருவதிலும் அவர் பெரும் பங்காற்றி யுள்ளார். “ஒவ்வோர் அகதியும் தாயகம் திரும்பவே விரும்புகிறார்” என்று அவர் ஒருமுறை கூறியிருக்கிறார்.

அதேநேரத்தில், பெருங்கடலின் ஆபத்தைத் தாண்டிய வளமான வாழ்வுக்கு ஏங்குவோரும் உள்ளனர் என்பதையும் அவர் கவலையுடன் சுட்டிக்காட்டியுள் ளார். அகதி முகாம்களில் தங்கியிருந்த பல இளைஞர்கள் பொறியியல் மற்றும் மருத்துவக் கல்வி பெறவும் பெண்களுக்குக் கூடுதல் வருவாய் ஈட்டித் தரக்கூடிய சவர்க்காரம் மற்றும் ஸ்பைருலினா தயாரிப்பு முறை களைக் கற்றுக்கொண்டு சிறுதொழில் செய்யவும் உதவி யுள்ளார். இலங்கையில் நிலைமை சற்று சீரடைந்த போதெல்லாம் அகதிகள் மீண்டும் தாயகம் திரும்பவும் உதவியுள்ளார்.

கடல் கடந்து வளமான வாழ்வுக்கு ஆசைப்பட்டு, அபாயத்தில் சிக்கிக்கொள்வதிலிருந்து அகதிகளைப் பாதுகாக்க அவர் எடுத்த முயற்சிகளில் தமிழக, அவுஸ்தி ரேலிய அரசாங்கங்களின் சட்ட அமலாக்க அமைப்பு களுடன் கைகோர்த்துப் பணியாற்றியதைக் குறிப்பி டவே இங்கு ‘ஒபர்’ அமைப்பைப் பற்றிக் கூறினேன்.

இந்த ஆபத்தான பயணங்கள், கைதுகள் பற்றிய செய்திகளைச் சேகரிக்கும் பணியில் ஒருமுறை நான், படகு கவிழ்ந்ததாலோ அல்லது உணவு மற்றும் தண்ணீர்த் தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் அளவுக்கு எஞ்சின் செயலிழப்பாலோ 600க்கும் மேற்பட்ட அகதி கள் கடலிலேயே மடிந்துள்ளனர் என்று குறிப்பிட்டேன். இந்த அபாயங்களையும் தாண்டி, அக்கரையில் உள்ள வளமான வாழ்வின் விருப்பம் உந்த, ஏற்கெனவே சென்ற வர்களின் வெற்றிக் கதைகள் உந்த, இந்த ஆசைக்கு அடிபணிந்து அந்த நாடுகளில் குடியுரிமை பெற முயற்சிகள் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன.

## இலங்கையில் மௌனம் கொணர்ந்த பேரழிவு!

எளிதில் ஏமாந்துவிடக்கூடிய இந்த எளியவர்களை ஏமாற்றிப் பிழைப்பு நடத்தும் முகவர்களும் இதில் பாதுகாப்பான பயணத்துக்கான உறுதிய ளித்து, மிகப் பெரிய பங்காற்றுகின்றனர். அவுஸ்திரேலியா மற்றும் கனடாபோன்ற நாடுகளிலிருந்து பேசுவதுபோலப் போலி யாக நடித்து, அகதிகளின் நம்பிக்கையைக் கூட இந்த முகவர்கள் பெறுவதுண்டு என்று காவல் துறையினர் கூறக் கேட்டிருக்கிறேன்.

அப்போதுதான் அவர்கள் தங்கள் சொத்துகளை விற்றோ, கடன் வாங்கியோ அதிக தொகை செலுத்து வார்கள் என்பது அவர்கள் திட்டம். கடந்த ஆண்டு ஒக்ரோ பர் - நவம்பரில் சட்டவிரோதமாக கனடா செல்ல விரும்பிய 303 இலங்கை யினர் புறப்பட்ட ‘லேடி ஆர் 3’ என்ற கப்பலுக்கு நேர்ந்த கதி உங்களுக்கு நினை விருக்கலாம். வியட்நாம் அருகே மோச மான வானிலை மற்றும் எஞ்சின் செயலி ழப்புக் காரணமாகக் கப்பலை விட்டு ஓடி விட்டனர் அதன் கப்டனும் குழுவினரும். நடுக்கடலில் தத்தளித்த கப்பலில் பசி, தாகம், உயிர் பயத்துடன் தவித்த மக்களை சர்வதேச முயற்சிகள்தாம் காத்தன.



அப்போதிலிருந்து, அவுஸ்திரேலியா அல்லது கனடா செல்வதற்கான மேலும் சில குழுக்களின் முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன. இலங்கையில் 2021 பிற்பகுதியில் ஏற்பட்ட பொருளாதாரச் சீர்கேட் டுக்குப் பிறகு, கனடா,

## “விழிமின் எழுமின்”

அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இந்தியா மற்றும் இந்தியப் பெருங்கடலின் பிரெஞ்சு, பிரிட்டிஷ் பிராந்தியங்களுக்குச் செல்லும் சட்ட விரோதமான முயற்சிகள் அதிகரித்து வருவதாக இலங்கை அதிகாரிகள் கூறுகின்றனர்.

இலங்கையில் நிலைமை சீராக இருந்திருந்தால், இப்படி ஆபத்தான பயணங்களை மேற்கொண்டு நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் குழந்தை களும் கடலில் மூழ்கி மாண்டிருப்பார்களா? நாட்டின் ஒவ்வொரு குடிமகனையும் சிங்களத் தலைவர்கள் சமமாக நடத்தி, சம வாய்ப்பளித்திருந்தால், ஆயிரக் கணக்கான ஈழத் தமிழர்கள், ஈழப்போரில் மடிந்தும், தமிழகத்தின் அகதி முகாம்களில் அடைக்கப்பட்டும் இருப்பார்களா?

இந்தியாவில் முதலீடுகளை ஈர்க்க இந்திய அரசு அமைத்த ஓர் அமைப்பான ‘இன்வெஸ்ட் இந்தியா’- வின் தலைவரான தீபக் பக்ளாவின் ஒரு காணொலியை அண்மையில் பார்த்தேன். உள் நாட்டு, வெளிநாட்டுச் சவால்களைத் தாண்டி, கடந்த பல ஆண்டுகளில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) எப்படி வளர்ந்து வந்துள்ளது என்பதற்கான புள்ளி விவரங்களை அவர் அதில் அடுக்குகிறார். இறுதியில், எதிர்காலம் இந்தியாவினுடையது என்று முடிக்கிறார். “எங்கள் ஜி. டி. பி.-யின் கதையை உங்களுக்குச் சொல்கி றேன்” என்று தொடங்குகிறார் இன்வெஸ்ட் இந்தியா வின் தலைவர்.

“முதல் ட்ரில்லியனை எட்ட 67 ஆண்டுகளாயின, இரண்டாவது ட்ரில்லியனை எட்ட எட்டு ஆண்டுகளா யின. மூன்றாவது ட்ரில்லியனை எட்ட ஐந்து ஆண்டுக ளாயின. நான் (இந்தியா) எப்படி முன்னேறு கிறேன் என்று தெரிகிறதா? சுவாரஸ்யமான ஒரு விஷயத்தை உங்களுக்குச் சொல்கிறேன். 2015 முதல் இப்போது வரை, எங்கள் ஒன்பது ஆண்டுகள். ரஷ்யா, இத்தாலி, பிரேசில், பிரான்ஸ், இங்கிலாந்து ஆகியவற்றை முந்திக்கொண்டு பத்தாம் இடத்திலிருந்து ஐந்தாம் இடத்துக்கு எங்களது ஜி. டி. பியை முன்னேற்றி யுள்ளோம். இந்த ஆண்டு இறுதியில் அல்லது அடுத்த ஆண்டு தொடக்கத்தில், நான்காம் இடத்துக்கு வர, ஜெர்மனியைக் குறி வைத்துள்ளோம்.

பெருந்தொற்றுக் காலத்துக்கு முன்னர், இந்த பூமியி லேயே மிக வேகமாக வளரும் பொருளாதாரமாக நாம் இருந்தோம். பெருந்தொற்றுக்குப் பிறகு, பூமியிலேயே மிக வேகமாக வளரும் பொருளாதாரமாக நாமே இருக்கிறோம். பெரியோர்களே, தாய்மார்களே, இந்தக் கதை இப்போதுதான் தொடங்கியுள்ளது. இன்றிலிருந்து 9,000 நாட்களில் நான் (இந்தியா) 100 வயதை எட்டி விடுவேன். 2047 ஒகஸ்ட் 15. பூமியின் மிகப் பழைமை யான நாகரிகம், ஆனால், மிகவும் இளமையான ஜனநாயகம். அதை அடிக்கடி மறந்து விடுகிறோம். அன்றைய தினம், உலகின் உழைக்கும் வர்க்கத்தினரில் 21 சதவிகிதம் இந்தியர்களாக இருப்போம். உலகின் நடுத்தர வர்க்கத்தினரில் 20 சதவிகிதம் இந்தியர்களாக இருப் போம். இதுதான் புதிய இந்தியா.” மும்பையில் ஸ்ரான் டர்ட் சார்டர்ட் வங்கியால் ஏற்பாடு செய்யப் பட்ட ‘ட்ரெஷரி லீடர்ஷிப் போரம் 2023’ நிகழ்ச்சியில், இந்தியாவின் வணிக, தொழில்துறை ஜாம்பவான்களி டையே தீபக் பக்ளா ஆற்றிய உரையின் பகுதி இது.

இதையெல்லாம் எதற்காக இங்கு குறிப்பிடுகிறேன் என்று நீங்கள் கேட்கலாம். பக்ளாவின் உரையை இங்கு எதற்கு நான் நினைவு கூருகிறேன்? நாம், அதாவது நீங்களும் நானும் வெறும் அண்டை நாட்டவர் மட்டு மல்லர். பண்டைய தொப்புள்கொடி உறவால் பிணைக் கப்பட்ட இரட்டையர்கள் நாம். சில காலம் முன்னர் வரை, சிங்கப்பூரை முந்தும் அளவுக்கு வளரக்கூடிய ஒரு வளமான நாடாக இலங்கையை நாங்கள் பார்த்தோம். ஆனால், இன்று நேர்ந்திருக்கும் அவலத்துக்கு யார் காரணம் என்று நினைக்கிறீர்கள்? இல்லை, இல்லை, நிச்சயமாக இல்லை. பழியனைத்தையும் அரசியல் தலைவர்கள் மீதே போடாதீர்கள். மக்களாகிய நீங்களும் இதில் பொறுப்பேற்கவேண்டும். நீங்கள் அமைதியாக இருந்தீர்கள். உங்கள் கண்ணெதிரில் நடந்த சீரழிவைக் கண்டுகொள்ளாமல் இருந்தீர்கள். உங்கள் மௌனம் மிகப் பெரிய பேரழிவைக் கொண்டுவந்தது.

ஆனால், இப்போது, இப்போதாவது விழித்துக் கொண்டு, வடக்கில் இருக்கும் உங்கள் அண்ணனைப் பார்த்து வளரக் கனவு காணுங்கள். அதை அடைய முய லுங்கள். அனைவரும் ஒன்று கூடி, நாட்டுக்காக உழைத் தால், சுயநலத்தை விட்டு உழைத்தால் இது சாத்தியமே.

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

# உள்ளூராட்சி தேர்தல்களுக்கு எதிராக கெடுபிடிகளை செய்வதில் சளைக்காத அரசாங்கம்



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

ஆட்சியாளர்கள் விரும்பவில்லையென்றால் ஜனநாயக செயன்முறைகளுக்கு இடைஞ்சல்களை ஏற்படுத்துவதற்கு பாராளுமன்ற நடைமுறைகளிலும் அரசாங்க நிருவாகத்திலும் எத்தனையோ வழிமுறைகள் இருக்கின்றன என்பதற்கு உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு முன்னெடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு எதிராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் இடையறாது செய்துவருகின்ற கெடுபிடிகள் சிறந்த உதாரணமாகும்.

தேர்தல் ஒன்றை, அதுவும் உள்ளூராட்சி தேர்தல்களை தடுப்பதற்கு தற்போதைய இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுவருகின்ற ஜனநாயக விரோத நடவடிக்கைகள் போன்று உலகின் வேறு எந்த நாட்டிலும் அரசாங்கம் ஒன்று செய்திருப்பதாக இதுவரையில் நாம் அறியவில்லை.

உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துவதற்கென்று 2023 பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை திறைசேரி நிறுத்திவைப்பதை தடுத்து உயர்நீதிமன்றம் அண்மையில் பிறப்பித்த உத்தரவை அரசாங்கம் மதித்துச் செயற்படும் என்று முதலில் அதன் தரப்பில் தெரிவிக்கப்பட்டபோதிலும், உள்ளூராட்சி தேர்தல்களுக்கான புதிய திகதியை தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருக்கின்ற போதிலும் அந்த தேர்தல்கள் தொடர்பிலான நிச்சயமற்ற தன்மை தொடரவே செய்கிறது.

உள்ளூராட்சி தேர்தல்கள் எதிர்வரும் ஏப்ரில் 25 ஆம் திகதி நடைபெறும் என்று மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்கள் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருக்கிறார்கள். தபால் மூல வாக்குப்பதிவுக்கான வாக்குச்சீட்டுக்களை ஐந்து தினங்களுக்குள்ளும் தேர்தல் தினத்துக்கான வாக்குச்சீட்டுக்களை 20 -- 25 நாட்களுக்குள்ளும் அச்சிட்டு தருவதற்கு அரசாங்க அச்சகர் இணங்கியிருப்பதாகவும் அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க வாக்குச்சீட்டுக்களை அச்சிடும் பணிகளுக்கு பாதுகாப்பு வழங்க போதியளவில் பொலிசாரை கடமையில் அமர்த்துவதற்கு தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் உறுதியளித்திருப்பதாகவும் தேவையான எரிபொருட்களை சில தினங்களுக்குள் வழங்குவதற்கு சக்தி, வலு அமைச்சும் பெட்ரோலியம் கூட்டுத்தாபனம் இணங்கியிருப்பதாகவும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்திருக்கிறது.

தேர்தல் நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட சகல தரப்புகளுடனும் வெள்ளியன்று தேர்தல் ஆணைக்குழு நடத்திய சந்திப்பில் இந்த இணக்கப்பாடுகள் காணப்பட்டன.

ஆனால், உயர்நீதிமன்றத்தின் உத்தரவு பாராளுமன்றத்தின் அதிகாரங்களையும் சிறப்புரிமைகளையும் மீறுவதாக அமைந்திருக்கிறது என்று ஆளும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் தொலவத்த கடந்தவாரம் பாராளுமன்றத்தில் சிறப்புரிமை மீறல் பிரச்சினையொன்றை கிளப்பியதை காணக்கூடியதாக இருந்தது.

தேர்தல்களுக்கு நிதியை விடுவிப்பதில் உள்ள சாத்தியமின்மை குறித்து திறைசேரி செயலாளர் சமர்ப்பித்த சத்தியக்கடதாசியை உயர்நீதிமன்ற நீதிபதிகள் அலட்சியம் செய்திருப்பது பாராளுமன்றத்தின் சிறப்புரிமையை மீறிய ஒரு செயலாகும். அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதியமைச்சு அரசாங்க நிதியைக் கட்டுப்படுத்தும் பாராளுமன்றத்துக்கே பொறுப்புக்கூறவேண்டும். உயர்நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவு நிதி அதிகாரங்களை பாராளுமன்றத்துக்கு வழங்கும் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை தடுக்கும் ஒரு முயற்சியாக அமைகிறது என்று தொலவத்த சபையில் குறிப்பிட்டார்.

அவர் கிளப்பிய சிறப்புரிமை மீறல் பிரச்சினை குறித்து சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன விசாரணையொன்றை நடத்தவிருப்பதாக அரசாங்கம் வெள்ளியன்று சபையில் அறிவித்தது. இந்த பிரச்சினை பாராளுமன்ற சிறப்புரிமைகள் குழுவின் பரிசிலனைக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் அந்த குழு ஒரு தீர்மானத்தை எடுக்கும்வரை உயர்நீதிமன்றத்தின் உத்தரவை நடைமுறைப்படுத்துவதற்கு எடுக்கப்படக்கூடிய எந்த நடவடிக்கையும் பாரதூரமான குற்றச்செயலாக அமையும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க கூறினார்.

இன்னொரு நிதி இராஜாங்க அமைச்சரான ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய ஒரு சில தினங்களுக்கு முன்னர் நிதியமைச்சாக இருந்தாலென்ன அரசாங்கத்தின் வேறு எந்த நிறுவனமாக இருந்தாலென்ன நீதிமன்றத்தின் தீர்மானத்தை மதித்து அதற்கேற்ப செயற்படவேண்டிய பொறுப்புக்குரியவை என்று குறிப்பிட்டதை இங்கு நினைவுபடுத்துவது பொருத்தமானதாகும்.

அதேவேளை, பாராளுமன்ற சிறப்புரிமைகள் குழுவின் தலைவராக ராஜபக்ச குடும்பத்தின் மூத்தவரான முன்னாள் சபாநாயகர் சமால் ராஜபக்ச நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

சகல பாராளுமன்ற குழுக்களிலும் ஆதிக்கம் செலுத்தும் கட்சி அல்லது கூட்டணி அதன் நலன்களுக்கு உதவக்கூடிய முறையில் அவற்றைப் பயன்படுத்துவதே வழமை என்பது எல்லோருக்கும் தெரியும்.

பாராளுமன்ற சிறப்புரிமைப் பிரச்சினையை பயன்படுத்தி அரசாங்கம் உள்ளூராட்சி தேர்தல்களை காலவரையறையின்றி ஒத்திவைப்பதற்கு முயற்சிப்பதாக



குற்றஞ்சாட்டியிருக்கும் எதிரணி கட்சிகள் இந்த பிரச்சினை நீதித்துறைக்கும் பாராளுமன்றத்துக்கும் இடையில் அநாவசியமான முரண்பாட்டை தோற்றுவிக் கும் ஆபத்தைக் கொண்டுள்ளது என்றும் எச்சரிக்கை செய்திருக்கின்றன.

உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துவதற்கென்று 2023 பட்ஜெட்டில் 1000 கோடி ரூபாவை பாராளுமன்றம் ஒதுக்கீடு செய்தது. பாராளுமன்றத்தின் அந்த தீர்மானத்தை மீறிச் செயற்பட்டு நிதியை விடுவிக்காமல் இருப்பதற்கு எந்த அரசாங்க அதிகாரிக்கும் அதிகாரம் கிடையாது. பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்களின் தீர்மானத்துக்கு அரசாங்க அதிகாரிகள் கட்டுப்பட்டு செயற்படவேண்டும் என்று உயர்நீதிமன்றம் வழங்கிய உத்தரவு எவ்வாறு பாராளுமன்ற சிறப்புரிமையை மீறுவதாக அமையமுடியும் என்பது விளங்கவில்லை.

பாராளுமன்ற சிறப்புரிமை குழு இந்த பிரச்சினையில் ஒரு தீர்மானத்துக்கு வருவதற்கு எவ்வளவு நாட்கள் எடுக்குமோ எவருக்கும் தெரியாது. புதிய தேர்தல் திகதியை அறிவித்திருக்கும் தேர்தல் ஆணைக்குழு தொடர்ந்து அதன் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் முட்டுக்கட்டைகளை போடுவதில் முயற்சிகளைக் கைவிடப்போவதில்லை என்பது மாத்திரம் நிச்சயம்.

இலங்கையில் இதுகாலவரையில் பதவியில் இருந்திருக்கக்கூடிய எந்தவொரு அரசாங்கமும் தேர்தல் ஒன்றுக்கு முகங்கொடுக்க இந்தளவுக்கு அஞ்சியதாக கூறமுடியாது. அது போக ஒரு லிபரல் ஜனநாயகவாதியாக இதுகாலவரை தன்னைக் காட்டிக்கொண்ட நீண்டகால பாராளுமன்ற அனுபவத்தைக் கொண்ட ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் ஆட்சியில் மக்களின் வாக்குரிமைக்கும் ஜனநாயக செயன்முறைகளுக்கும் இந்தளவுக்கு முட்டுக்கட்டைகள் போடப்படுகின்றன என்பது அவரின் இதுகாலவரையான அரசியல்வாழ்வுக்கு பெரும் களங்கமாகும். ஆனால் அரசியல் அதிகாரம் களங்கத்தைப் பற்றியோ அல்லது நெறிமுறையைப் பற்றியோ எல்லாம் சிந்திப்பதற்கு இடந்தருவதில்லை. அல்லாவிட்டால் மக்கள் கிளர்ச்சியினால் ஆட்சியதிகாரத்தில் இருந்து விரட்டப்பட்ட இலங்கையின் முதல் ஆட்சியாளர்கள் என்ற அவமானத்துக்கு உள்ளான ராஜபக்சாக்கள் மீண்டும் தங்களுக்கு ஒரு அரசியல் எதிர்காலம் இருக்கிறது என்ற நினைப்புடன் செயற்படுவார்களா?

இலங்கை அதன் வரலாற்றில் காணாத படுமோசமான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அவலப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பது உண்மையே. ஆனால், உளூராட்சி தேர்தல்களை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு அரசியலமைப்பின் பிரகாரம் முன்னெடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் முட்டுக்கட்டைகளை போடுவதற்கு பிரதான காரணம் பொருளாதார நெருக்கடிதான் என்று என்று கூறிவிட முடியாது.

உள்ளூராட்சி தேர்தல்களில் ஏற்படக்கூடிய படுதோல்வி ஏற்கெனவே பதவியில் இருப்பதற்கான நியாயப்பாட்டைப் பொறுத்தவரை பெரும் சவாலை எதிர்நோக்கும் தங்களது அரசாங்கத்துக்கு மேலும் சிக்கலை ஏற்படுத்தும் என்பதை ஜனாதிபதி விக்கிரமசிங்கவும் அவருக்கு பாராளுமன்ற ஆதரவை வழங்கிக்கொண்டிருக்கும் ராஜபக்சக்களும் நன்கு அறிவார்கள்.

உள்ளூராட்சி தேர்தல்கள் ஆட்சியை மாற்றுவதில்லை. 2018 பெப்ரவரியில் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தல்களில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன - பிரதமர் விக்கிரமசிங்க தலைமையிலான “நல்லாட்சி” அரசாங்கம் படுதோல்வியடைந்த போதிலும் அன்றைய பராளுமன்றத்தின் பதவிக்காலம் முடிவடையும்வரை பதவியில் இருந்தது. அந்த உள்ளூராட்சி தேர்தல்களில் பெருவெற்றி பெற்ற பொதுஜன பெரமுன பிறகு ஜனாதிபதி தேர்தலிலும் பாராளுமன்ற தேர்தலிலும் பிரமாண்டமான வெற்றிகளைப் பெற்றது வேறு கதை.

தற்போது அதுவும் கடந்த வருடத்தைய மக்கள் கிளர்ச்சிக்கு பிறகு மக்களின் மனநிலை எவ்வாறு இருக்கிறது என்பதை அறிய உள்ளூராட்சி தேர்தல்கள் ஒரு வாய்ப்பாக அமையும் என்று எதிர்பார்க்கப்பட்டது. எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) தலைமையிலான தேசிய மக்கள் சக்தியும் அவற்றுக்கு மக்கள் மத்தியில் அதிகரித்திருப்பதாக நம்பும் ஆதரவை நிரூபிப்பதற்கான ஒரு உடனடி சந்தர்ப்பமாக உள்ளூராட்சி தேர்தல்களை நோக்குகின்றன.

இவ்விரு சக்திகளும் உள்ளூராட்சி தேர்தல்களில் பெரு வெற்றியடையும் பட்சத்தில் பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய பொதுத்தேர்தலில் மக்களின் ஆணை பெறப்படவேண்டும் என்று அவற்றிடம் இருந்து கோரிக்கை கிளம்பி வீதிப்போராட்டங்கள் தீவிரமடையக்கூடிய சூழ்நிலை உருவாகும் என்பதில் சந்தேகமில்லை. இதை அரசாங்கம் நன்கு அறியும்.

அதன் காரணத்தினால்தான் அண்மையில் திருகோணமலை விமானப்படை தளத்தில் இடம்பெற்ற வைபவமொன்றில் உரையாற்றிய ஜனாதிபதி விக்கிரமசிங்க பாராளுமன்ற தேர்தல்கள் போன்ற உகந்த வழிமுறைகள் மூலமாக மாத்திரமே அரசாங்கத்தை மாற்ற முடியும் என்றும் வீதிப்பேராட்டங்கள் பாராளுமன்றத்துக்கான மாற்றுத் தெரிவு அல்ல. ஏற்றுக்கொள்ளப்பட்ட செயன்முறைகளை சீர்குலைப்பதற்கு மேற்கொள்ளப்படக்கூடிய எந்த ஒரு முயற்சியும் இலங்கையின் அரசியலமைப்பையும் சட்டத்தின் ஆட்சியையும் மீறுவதாக அமையும் என்றும் ஒரு எச்சரிக்கைத் தொனியில் கூறினார்.

பாராளுமன்ற தேர்தல் மாத்திரமே அரசாங்கத்தை மாற்றமுடியும் என்ற ஜனாதிபதியின் கூற்று உள்ளூராட்சி தேர்தல்கள் நடைபெற்று அரசாங்க கட்சிகள் அதில் பெருந்தோல்வியைச் சந்தித்தாலும் கூட உரிய காலத்துக்கு முன்னதாக பாராளுமன்றம் கலக்கப்பட்டு பொதுத்தேர்தல் நடத்தப்படப்போவதில்லை என்று எதிரணி கட்சிகளை நோக்கி அவர் விடுக்கும் ஒரு எச்சரிக்கை என்று அரசியல் அவதானிகள் கருதுகிறார் கள்.

அதேவேளை மீண்டும் “அறகலய” மக்கள் கிளர்ச்சிக்கு இடமளிக்கப்போவதில்லை என்பதிலும் விக்கிரமசிங்க உறுதியாக இருக்கிறார். எந்தவொரு வீதிப் போராட்டத்தையும் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்குவதற்கு பொலிசாரும் படையினரும் தொடர்ந்து மேற்கொள்கின்ற நடவடிக்கைகள் இதை உணர்த்துகின்றன. ஆனால், மக்கள் கிளர்ந்தெழுவதென்பது எந்தவொரு அரசியல்வாதியினதும் விருப்புவெறுப்பில் தங்கியிருப்பதில்லை. கடந்த வருடத்தைய மக்கள் கிளர்ச்சி பல பாடங்களை புகட்டியிருக்கிறது.

இறுதியாக, வீதிப் போராட்டங்களினால் அல்ல பாராளுமன்ற தேர்தலினால் மாத்திரமே அரசாங்கத்தை மாற்றமுடியும் என்று கூறிய ஜனாதிபதி அரசாங்கத்தை மாற்றுவது வேறுவிடயம். ஆனால் மாற்றவேண்டிய நிர்ப்பந்தச் சூழ்நிலையை மக்களின் வீதிப்போராட்டங்களினால் தோற்றுவிக்கமுடியும் என்பதை நன்கு அறிவார். மூன்று தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக தன்னிடமிருந்து நழுவிக்கொண்டிருந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை இறுதியில் அவர் அடைவதற்கான அரசியல் சூழ்நிலையை உருவாக்கியது மக்கள் வீதிகளுக்கு இறங்கி நடத்திய கிளர்ச்சியேயயாகும். ஆனால் மக்கள் போராட்ங்களை அடக்கியொடுக்குவதில் மூர்க்கமான உறுதிப்பாடு கொண்ட ஆட்சியாளராக அவர் இன்று மாறியிருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

# தேர்தல் அறிவிப்பது ஆணையாளர்! வாக்குப் பெட்டிகள் ரணில் வசம்!

**பனங்காட்டான்**

மார்ச் மாதம் 9ம் திகதி தேர்தல் நடைபெறுமென ஆணைக்குழுவின் தலைவரால் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் காணாமல் போய் விட்டது.

நடக்கும் ஆனால் நடக்காது - இல்லையில்லை, நடக்காது ஆனால் நடக்கும் என்ற பாணியில் பேசப்பட்டு வந்த இந்தத் தேர்தல், ஏப்ரல் 25ம் திகதி நடைபெறுமென சிறப்பு வர்த்தமானி ஊடாக தேர்தல் ஆணைக்குழுத் தலைவரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

வாக்குச் சீட்டுகளை அரசாங்க அச்சகம் அடித்துக் கொடுக்குமாம். அதற்கான பாதுகாப்பு வழங்கப்படுமென காவற்துறை மேலிடம் கூறியுள்ளதாம். தேர்தல் பணிக்கென எரிபொருளை வழங்க மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு உறுதி அளித்துள்ளதாம்.

இப்படியெல்லாம் அரசாங்கமோ அல்லது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியோ கூறவில்லை. தேர்தல் ஆணைக் குழுவின் தலைவரான நிமால் புஞ்சி ஹேவதான் அறிவித்துள்ளார். தேர்தல் குழுவுக்கு புதிய தலைவர்களையும் உறுப்பினர்களையும் அரசியலமைப்புச் சபை நியமித்து, அவர்கள் பதவி ஏற்பதற்கு முன்னர், முடிந்தளவுக்கு ஆட்சித் தரப்புக்கு தலையிடியைக் கொடுப்பது என்ற முடிவுடன் இவர் செயற்படுவதாக கூறப்படுகிறது. அதேசமயம், அரசாங்கம் தேர்தலை பின்போடுவதற்குச் சாதகமாக இவரது நடவடிக்கைகள் இருப்பதாக எதிர்க்கட்சிகள் சந்தேகம் தெரிவிக்கின்றன.

கடந்த 3ம் திகதி உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பொன்று, உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு கதவுகளைத் திறந்துவிட்டதாகவும், இதனால் ரணிலின் அரசு இக்கட்டுக்குள் சிக்கியுள்ளதாகவும்கூட சில அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரசியலமைப்புக்கு உட்பட்டதாக சட்டங்களை இயற்றுவது நாடாளுமன்றம். இதனால் இதனை சட்டசபை என்றும் அழைப்பர். இந்தச் சட்டங்களை நீதி பிறழாது செயற்பட அனுமதிப்பது நீதிமன்றங்களின் தலையாய பணி. அப்படியென்றால் நீதிமன்றத் தீர்ப்பு நாடாளுமன்ற நடவடிக்கைகளை கட்டுப்படுத்தாது என்ற கருத்தியல் அடிப்படையில், நிறைவேற்று அதிகாரங்கள் பயன்படுத்தப்படுகிறது என்பது நன்றாகத் தெரிகிறது.

2023ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் இத்தேர்தலுக்கென ஒதுக்கப்பட்ட நிதியை அதற்குச் செலவிடு வதை தடுக்கக்கூடாதென்பதுதான் கடந்த 3ம் திகதிய உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு.

அதாவது, அந்த நிதியை தேர்தலுக்கு வழங்க வேண்டுமென்பது இதன் அர்த்தம். வரவு செலவுத் திட்டத்தில் இதற்கென நிதி ஒதுக்கப்பட்டது உண்மை. உத்தேச மதிப்பீடுகளின் அடிப்படையில் வரவு செலவுத் திட்டம் வரையப்படும். ஒதுக்கப்படும் நிதிக்குரிய பணத்தை கட்டுக்கட்டாக ஒரு பெட்டிக்குள் போட்டு அதன்மேல் பெயர் ஒட்டி (வணிக நிறுவனங்கள் போன்று) வைக்கப்பட்டுள்ளது என்று இதற்கு அர்த்தப்படாது.

இதற்கு நல்லதொரு உதாரணத்தைக் கூறலாம். 1965 - 1970 வரை டட்லி சேனநாயக்க தலைமையிலான தேசிய அரசு ஆட்சியில் இருந்தது. தமிழரசுக் கட்சியின் பிரதிநிதியாக எம்.திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சராகவும், தமிழ் காங்கிரஸின் பிரதிநிதியான உடுப்பிட்டி நாடாளுமன்ற உறுப்பினர் மு.சிவசிதம்பரம் உபசபாநாயகராகவும் இந்த அரசில் இருந்தனர்.

தமிழருக்கான பல்கலைக்கழகம் ஒன்றை அமைப்பதற்காக தேசிய அரசின் ஐந்து வரவு செலவுத் திட்டத்திலும் நிதி ஒதுக்கப்பட்டது. தமிழரசுக் கட்சி திருமலையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் கேட்டது. தமிழ் காங்கிரஸ் யாழ்ப்பாணத்தில் இந்து பல்கலைக்கழகம் கேட்டது. இரு தரப்பினரும் இணைந்து வந்தால் (இது நடைபெறாது என்பது தெரிந்து கொண்டு) ஒரு பல்கலைக்கழகம் தருவேன் எனக் கூறி வந்த டட்லி,



தமிழ் தலைகளின் ஒற்றுமை இன்மையால் பல்கலைக்கழகத்தை 'கோவிந்தா' ஆக்கிட்டார்.

தமிழருக்கான பல்கலைக்கழகத்துக்கு என ஒதுக்கப்பட்ட நிதி என்னாச்சு என்று எவரும் கேட்க முடியாது. இதனை இங்கு சுட்டிக்காட்டுவதற்கான காரணம் வரவு செலவுத் திட்டம் என்பது உத்தேச செலவினத்துக்கான ஒரு வரைபு என்பதற் காகவே. இது உயர் நீதிமன்றத்துக்கு தெரியாததல்ல. அதனால்தான் உள்ளூராட்சித் தேர்தலுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை உடன் வழங்குமாறோ அல்லது குறிப்பிட்ட காலவரையறைக்குள் விடுவிக்கப்பட வேண்டுமென்றோ உயர் நீதிமன்ற நீதிபதிகள் உத்தரவிடவில்லை.

உயர் நீதிமன்ற தீர்ப்பு வெளியான அடுத்தடுத்த நாட்களில், இந்த வருடத்தில் எந்தத் தேர்தலும் நடைபெறாது என்று ரணில் பகிரங்கமாகக் கூறியதிலிருந்து அவரது நிலைப்பாட்டை புரிந்து கொள்ளலாம். இவரது அறிவிப்பை நீதிமன்ற அவமதிப்பாக கருத இடமில்லை என்பது சட்ட அறிஞர்களின் வாதம். எடுத்ததற்கெல்லாம் நீதிமன்ற படியேறும் தமிழரசின் பேச்சாளர் சுமந்திரன் இவ்விடயத்தில் அமைதி காப்பதிலிருந்து இதனை அறிந்து கொள்ள இடமுண்டு.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் தம்பாட்டில் தேர்தல் திகதியை அறிவிக்கிறார். இது தொடர்பான திணைக்களங்களின் அதிகாரிகளை கூட்டத்துக்கு அழைக்கிறார். மாவட்ட அத்தாட்சி அதிகாரிகளுக்கு உத்தரவுகள் வழங்குகிறார். தேர்தலில் போட்டியிட கட்டுப்பணம் செலுத்தி விடுப்புப் பெற்ற அரசாங்க ஊழியர்களுக்கு இடைக்காலத்துக்கு அடிப்படைச் சம்பளத்தை வழங்கலாமென ஆலோசனை வழங்குகிறார்.

ஆனால், இந்த நடவடிக்கைகள் எதுவுமே தமது முடிவை மாற்றாது என்ற தோரணையில் ரணில் ஓரங்க நாடகத்தை அரங்கேற்றிக் கொண்டிருக்கிறார். இதன் அடிப்படையில் மூன்று விடயங்கள் வெவ்வேறு மட்டங்களில் ஒன்றுடனொன்று சம்பந்தப்படாதது போன்று மேற்கொள்ளப்படுவதை இங்கு சுட்ட முடியும். இவை மூன்றுமே தேர்தலை இப்போதைக்கு எவரும் எண்ணிப் பார்க்கக்கூடாதென்பதை தெட்டத்தெளிவாக தெரியவைப்பவை.

1. மகிந்த தேசப்பிரிய தலைமையில் இயங்கும் தேர்தல் எல்லை நிர்ணயக்குழு அதன் அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு இந்த மாதம் 31ம் திகதிவரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது நாடு முழுவதுமுள்ள உள்ளூராட்சிச் சபைகளின் 8,200 உறுப்பினர்களின் எண்ணிக்கையை 4,850 ஆகக்குறைக்க இடைக்கால அறிக்கையை இக்குழு தயாரித்துள்ளது. ரணில் பல தடவை தெரிவித்த அவரது விருப்பத்தின் அடிப்படையில் இந்த எண்ணிக்கை குறைக்கப்படுகிறது. இந்த எண்ணிக்கையின் அடிப்படையிலேயே தேர்தல் நடைபெறுமாயின் வேட்பு மனுக்கள் புதிதாக கோரப்பட வேண்டும். தேர்தல் வட்டார எல்லைகளும் மாற்றியமைக்கப்படும். இதற்கு ஆகக்குறைந்தது ஒரு வருடமாவது தேவைப்படும்.

> **அடுத்த மாதம் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறும் என்ற நம்பிக்கையை அதிகரிக்கச் செய்யும் நடவடிக்கைகளில் தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் ஈடுபட்டு வருகிறார். அதனை தடுத்து நிறுத்தும் மும்முனைச் செயற்பாடுகளில் ஜனநாயக சோசலிஸ அரச இயந்திரம் இயங்குகிறது. வாக்களிப்புப் பெட்டிகள் ரணிலிடம் இருக்கும்வரை தேர்தல் ஆணையாளரால் என்ன செய்ய முடியும்?**

2. இனி நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைகளின் தேர்தலுக்கான திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் இளையோருக்கு இருபத்தைந்து வீதம் ஒதுக்கப்பட வேண்டுமென்பது கட்டாயமாக்கப்படவுள்ளது. நாடாளுமன்ற உபசபாநாயகர் அஜித் ராஜபக்ச தலைமையிலான சட்ட நிலையியற் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட இந்த ஆலோசனை சட்ட மாஅதிபர் அலுவலகத்துக்கு கையளிக்கப்பட்டுள்ளது. சட்ட வரைஞர் திணைக்களம் இந்த ஆலோசனையை உள்வாங்கி 126ம் இலக்க சட்டத்தயாரிப்பில் இதனை உள்ளடக்க அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களென 16 பேர் ஒப்புதல் வழங்கியுள்ளனர்.

3. அதிமுக்கியமான ஓர் அம்சமாக, தேர்தல் தொடர்பாக மார்ச் 3ம் திகதி உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை நாடாளுமன்ற சிறப்புரிமைக் குழுவுக்கு உட்படுத்தி இடைநிறுத்த சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிதி ராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க இந்த முன்மொழிவை அரசாங்கத்தின் சார்பில் கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் முன்வைத்தார். சிறப்புரிமையை பயன்படுத்தி நீதிமன்றத்தையும் அதன் தீர்ப்பையும் கேள்விக்குட்படுத்தும் நடவடிக்கை இதுவென எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்தன.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குள்ள உரிமையின் அடிப்படையிலேயே சிறப்புரிமை பயன்படுத்தப்படுவதாக குறிப்பிட்ட செஹான் சேமசிங்க, இவ்விடயத்துக்கு உபசபாநாயகர் உத்தரவிட வேண்டுமெனவும் வேண்டினார். நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கிருக்கும் சிறப்புரிமையை இன்னொரு உறுப்பினர் கேள்விக்குட்படுத்த முடியாது என்று பதிலளித்த உபசபாநாயகர், இவ்விடயம் சிறப்புரிமைக் குழுவுக்கு சமரப்பிக்கப்பட்டுள்ளது என்று கூறி முடிவு கட்டினார். இனி, சிறப்புரிமைக் குழுவின் முடிவு எவ்வாறு அமையுமென்பதை சொல்ல வேண்டியதில்லை.

ஆக, ஒன்றுமட்டும் வெட்டவெளியில் நன்றாகத் தெரிகிறது. எந்தக் காரணம் கொண்டும் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை இப்போதைக்கு ரணில் அரசு நடத்த மாட்டாது. யார் எப்படித்தான் தலையால் மண் கிண்டினாலும், இத்தேர்தல் இப்போதைக்கு இடம்பெறாது என்றே சொல்லலாம். சிலவேளை ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் கைகூடலாம்.

80,720 வேட்பாளர்கள் இத்தேர்தல் நடைபெறுமெனச் செலுத்திய பதினெட்டுக் கோடி நானூற்றி அறுபது லட்சம் ரூபா இப்போதைக்கு அரச கல்லாப் பெட்டிக்கு சுவீப் பணமாகச் சேரும்.

தேர்தலுக்கான திகதியை நிர்ணயிப்பது, வர்த்தமானியில் அறிவிப்பது, வாக்குச்சீட்டுகளை தயாரிப்பது தேர்தல் ஆணைக்குழுத் தலைவரின் வேலை. ஆனால், தேர்தலுக்கான வாக்குப் பெட்டிகள் ரணிலிடம்தான் உள்ளன. கடந்த வாரம் எழுப்பிய அதே கேள்விதான் - வெல்லப் போவது யார்?

# "ஆணாகப் பிறந்த நான் பெண்ணாக வாழ்கிறேன்"

## ஒரு பெண்ணின் வாழ்க்கைப் போராட்டம்

அ. ரோகினி

**உங்களைப் பற்றிய சிறிய அறிமுகம்....**

வணக்கம் நான் பிரியா (பெயர் மாற்றப்பட்டுள்ளது) யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் தற்போது வசித்து வருகின்றேன். யாழ்ப்பாணத்திலுள்ள கல்வி நிறுவனம் ஒன்றில் (பெயர் குறிப்பிட விரும்பவில்லை) பணி புரிகின்றேன்.

**சமூகத்தில் உங்களை எவ்வாறாக அடையாளப் படுத்திக்கொள்ள விரும்புகிறீர்கள்?**

இந்தச் சமூகத்தில் நான் ஓர் திருநங்கையாக இருந்தாலும் கூட என்னை ஓர் பெண்ணாகவே அடையாளப்படுத்திக்கொள்ள விரும்புகின்றேன். ஒரு பெண்ணாக உணர்ந்தமையால் தான் இவ்வளவு பிரச்னைகள் - எதிர்ப்புகள் என்பவற்றைக் கடந்து வந்திருக்கின்றேன். ஆகவே, என்னை ஓர் திருநங்கையாக அடையாளப்படுத்துவதிலும் பார்க்க பெண்ணாகவே அடையாளப்படுத்த விரும்புகின்றேன்.

**உங்களை எப்போது பெண்ணாக உணர்ந்து கொண்டீர்கள்?**

நாங்கள் யாழ்ப்பாணம் - குருநகர் பகுதியில் ஒரு கூட்டுக் குடும்பமாக வசித்தோம். என்னுடைய பெற்றோருக்கு நான் தனி ஒரு பிள்ளை. என்னுடைய அப்பாவுக்கு 5 பெண் சகோதரிகள். அவர்களது பிள்ளைகளும் பெரும்பாலும் பெண் பிள்ளைகள் தான். நான் தனிப் பிள்ளை ஆகையால் சிறு வயதில் என்னுடன் சேர்ந்து விளையாடுவதற்கு யாரும் இல்லை. அப்போது நான் அப்பாவின் சகோதரிகள் பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடுவேன். அப்போதிலிருந்தே என்னை நான் ஒரு பெண்ணாகவே உருவகித்துக்கொள்ள ஆரம்பித்தேன். எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து நான் ஆண் பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடியதாடு இல்லை. யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர கல்லூரியில் உயர்தரம் படித்தேன். அப்போது 3 பெண் நண்பிகள் எனக்கிருந்தார்கள். அவர்களுடன் தான் சேர்ந்து திரிவேன் - படிப்பேன். உடல் அளவில் ஆணாக இருந்தாலும் உணர்வு ரீதியாக நான் ஒரு பெண் என உயர்தரம் முடித்த பின்னர் என்னை முழுமையாக உணர்ந்து கொண்டேன்.

**உங்களைப் பெண்ணாக உணர்ந்த காலத்திலிருந்து உங்கள் உடல் மொழியிலும் மாற்றம் ஏற்பட்டிருக்கும் அவற்றைப் பார்த்து பெற்றோர் எதுவும் கேட்கவில்லையா?**

நிச்சயம் எனது நடை உடை பாவனை பேச்சு வழக்கு போன்றவற்றிலும் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கியது. அதனை அவதானித்து ஏன் பெண் பிள்ளைகள் போன்று இருக்கின்றாய்? எனக் கேட்டு சண்டைகள் ஏற்பட்டது. அப்பா என்னை அடித்திருக்கின்றார். நான் வீட்டிற்கு ஒரே ஒரு பிள்ளை என்பதால் இந்த மாற்றத்தை அப்பா அம்மாவால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. ஆகவே வீட்டில் பல ஒடுக்குமுறைகள் எனக்கு ஏற்பட்டது. இருந்தும் அவர்களைக் குறை சொல்ல முடியாது. அவர்களுக்கு இது பற்றிய விழிப்புணர்வு இல்லாமல் இருந்தது. மேலும் இந்தச் சமூகம் பற்றியதான பாரிய பயமும் அவர்களிடமிருந்தது. பக்கத்து வீட்டுக்காரர் சொந்த பந்த உறவினர்கள் என்ன சொல்லுவார்களோ என்ற பயம் அவர்களிடத்தே அதிகமாக இருந்தது. ஆகவே நான் பெண்ணாக மாறிவிடுவேனோ என்று அவர்கள் அதிகளவிலான அடக்குமுறைகளை என்மீது திணித்தார்கள்.

**அந்தக் காலகட்டத்தில் உங்கள் அயலவர்கள் சமூகத்தவர்கள் எவ்வாறான கண்ணோட்டத்தில் உங்களைப் பார்த்தார்கள்?**

முகத்துக்கு நேராக எதையும் சொல்லாமல் போக விட்டுக் கதைப்பது என்பது யாழ்ப்பாணத்துச் சமூகத்தின் ஒரு சாபக்கேடாகக் காணப்படுகின்றது. என்னதான் சமூகவலைதளங்கள் மூலம் விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டாலும் அவற்றை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் உள்வாங்கும் தன்மை என்பன எமது சமூகத்திற்கு இல்லை.

அயலவர்கள் சுற்றத்தார்களால் தான் அதிகளவு அவமானங்களைச் சந்தித்தேன். யாழ்ப்பாணம் குருநகர் பகுதி என்பது மக்கள் செறிந்து இருக்கும் பிரதேசம். நான் வெளியில் வந்தாலே கேலி கிண்டல் செய்வது வார்த்தைகளால் துன்புறுத்துவது உருவக்கேலி செய்வது போன்ற பல கஷ்டங்களை எதிர்கொண்டேன்.

**பெண்ணாக உணர்ந்த பின்னர் உங்களை எப்பொழுது பெண்ணாக அடையாளப்படுத்த தொடங்கினீர்கள்?**

உயர்தரம் படித்து முடித்த உடனேயே 2013ம் ஆண்டு கல்வி நிறுவனம் ஒன்றில் வேலை கிடைத்தது. 3 வருடங்களின் பின்னர் தான் அந்த வேலை உத்தியோக பூர்வமாக உறுதியானது. அதன் பின்னர் தான் நானும் என்னைப் பெண்ணாக அடையாளப்படுத்தி அதற்கான படிமுறைகளைச் செய்ய ஆரம்பித்தேன். ஆணாக வேலைக்கு வந்து பின்னர் பெண்ணாக மாற்றிக் கொள்வது என்பது சாதாரண விடயமல்ல. பெரும் சவாலுக்குரியது.

**எவ்வாறான படிமுறைகளின் ஊடாக உங்களை அடையாளப்படுத்தினீர்கள்?**

ஒரு சரியான ஒழுங்கு முறைப்படி மாறுவது என்பது ஓர் சிறிய விடயமல்ல. மிகப்பெரிய படிநிலைகளை உள்ளடக்கியது. இவ்வாறு ஆணாகப் பிறந்து பெண்ணாக மாறுவதால் ஏற்படும் பிரச்னைகள் தொடர்பில் தொலைக்காட்சி, சமூக வலைத்தளங்கள் மூலம் அதிகளவில் பார்த்திருக்கின்றேன். இதிலே என்னுள் திடமான கொள்கை ஒன்றை வைத்திருந்தேன். எனக்கென்று ஒரு சொந்த வேலை எடுத்து சம்பாதித்த பின்னரே என்னைப் பெண்ணாக மாற்ற வேண்டும் என்று. ஏனென்றால் இவற்றால் எதிர்காலத்தில் ஏற்பட இருக்கும் பிரச்னைகளை நான் அறிந்தது உண்டு. அதே போல் சிறிதளவு சம்பாதித்த பின்னர் அதற்கான படிமுறைகளைத் தொடர்ந்தேன்.

படிக்கும் காலத்திலிருந்தே என்னுள் தேடும் ஆற்றல் அதிகளவில் இருந்தது. ஆகவே, நூலகம், இணையத்தில் இதுபற்றி தேட ஆரம்பித்தேன். இதன் மூலமாக இலங்கையில் LGBTIQA+ Community தொடர்பாகச் செயல்படும் Heart to Heart எனும் அமைப்பின் தொடர்பு எனக்கு கிடைத்தது. எந்தெந்த படிமுறைகளின் வாயிலாக மாற்றத்தை வெளிப்படுத்தலாம் என்பதை அறிந்தேன்.

அதற்கமைய யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் மருத்துவர் சிவயோகன் அவர்களைச் சந்தித்து என் சார்ந்த பிரச்னையைக் கூறினேன். அதன் முதற் கட்டமாக அவரிடம் 6 மாதங்கள் உளவியல் கிளினிக் சென்றேன். அதாவது அந்தக் காலத்தில் மனதளவில் எங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் சமூகத்தினிடையே எங்களைக் கொண்டு செல்வதற்கும் பழக்கப்படுத்திக் கொள்வதற்கும் அந்த கிளினிக் சென்றேன். யாழ்ப்பாணத்தில் அக்காலப்பகுதியில் திருநர்கள் தொடர்பான மருத்துவ வசதிகள் விழிப்புணர்வுகள் இல்லாத காரணத்தால் அதற்கு அடுத்த கட்ட hormone replacement therapy க்காக கொழும்பு வைத்திய சாலை ஒன்றிக்கு மருத்துவர் கபில ரணதுங்க என்பவரிடம் சென்றேன். அவரிடமும் 6 மாதங்கள் கிளினிக் சென்றேன். அப்போது பெண்மை உணர்வுகளை அதிகரிப்பதற்கான மருந்துகளை உட்கொண்டேன். இதன் போது என்னுடைய வெளித்தோற்றத்தையும் பெண்களைப் போலவே மாற்றிக்கொண்டேன்.

அடுத்த கட்டமாக 2019ம் ஆண்டு பாலின மாற்று சிகிச்சைக்காக இந்தியா மும்பைக்குச் சென்றேன். 16 மணித்தியால அறுவைச் சிகிச்சையின் பின்னர் தோற்றத்திலும் உணர்விலும் ஒரு பெண்ணாகவே மாறிவிட்டேன். சிகிச்சையின் பின்னர் 6 மாதங்கள் வைத்திய சாலையில் தான் தங்கி இருந்தேன். உடல் உளம் அனைத்தும் பூரணமான பின்னர் இலங்கைக்குத் திரும்பி வந்தேன்.

**பெற்றோரின் அனுமதியுடன் தான் உங்கள் சிகிச்சைகளை செய்தீர்களா?**

இல்லை. Hormone replacement therapy செய்யும் வரைக்கும் இவ்வாறான சிகிச்சைக்குச் செல்வது பற்றி யாருக்கும் கூறவில்லை. என்னுடைய நடத்தை மாற்றங்கள் வெளியில் தெரியத் தொடங்கிய காலத்திலேயே பெற்றோரிடமிருந்து பல எதிர்ப்புகள் வந்தன. எனினும் அவற்றைச் சமாளித்து ஆரம்பகட்ட தெரபிக்காக சென்றேன். அப்போது என்னுடைய அம்மா மட்டும் எனக்குப் பக்கபலமாக இருந்தார். அப்பாவுக்கு விடயம் தெரியவந்ததுடன் என்னை வீட்டை விட்டு வெளியேற்றி விட்டார். 2 ஆண்டுகள் என்னுடைய நெருங்கிய நண்பி ஒருவரின் வீட்டில் இருந்தேன். அங்கே இருந்து தான் இந்தியாவுக்கு சென்று பாலின மாற்று சிகிச்சைக்காக சென்றேன்.

காலம் செல்லச் செல்ல உறவினர்களும் என்னைப் புரிந்து கொண்டார்கள். வீட்டுக்கு ஒரே ஒரு பிள்ளை என்பதால் பின்னர் அப்பாவும் என்னைப் ஏற்றுக் கொண்டார். முழுமையாகப் பெண்ணாக மாறிய பின்னர் குருநகர் பகுதியில் வசிக்க முடியாத சூழல் ஏற்பட்டது. அவ்விடத்தை விட்டு வெளியேறி இப்போது கொக்குவில் பகுதியில் வாடகை வீடொன் றில் நான் அம்மா அப்பா மூவருமாக மகிழ்ச்சியாக வாழ்கின்றோம்.

**ஆணாக வேலைக்கு வந்து பெண்ணாக மாறும் போது எவ்வாறான எதிர்ப்புகள் பிரச்னைகளைச் சந்தித்தீர்கள்?**

கல்வி கற்ற சமூகத்தில் வேலை செய்தமையால் பெரிதளவில் எதிர்ப்புக்களைச் சந்திக்கவில்லை. ஆரம்பத்தில் சில எதிர்ப்புக்களைச் சந்தித்தேன் ஆனால், அவற்றை வெளியில் சொல்ல விரும்பவில்லை. ஆனாலும் காலம் செல்ல செல்ல என்னைப் புரிந்து ஏற்றுக் கொண்டார்கள். தற்போது நான் ஒரு முழுமையான பெண் அடையாளங்களுடன் வாழ்கின்றேன்.

**ஊடகங்கள் வாயிலாக எதிர்ப்புக்களை சந்தித்து இருக்கின்றீர்களா? சமூக ஊடகங்களில் எவ்வாறு உங்களை வெளிப்படுத்துகின்றீர்கள்?**

ஒழுங்கு முறையின் கீழ் இயங்கும் நிறுவனம் ஒன்றில் நிரந்தரமான வேலை செய்வதனால் அதனைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்றே நான் விரும்பி னேன். இதனால் நானாகவே சென்று ஊடகங்களில் என்னை அறிமுகம் செய்யவில்லை. எமக்கு ஏதும் பிரச்னைகள் அநீதிகள் ஏற்படும் பட்சத்தில் தான் ஊடகங்களுக்குச் சென்று வாதிட வேண்டி வரும். ஆனால் இதுவரையில் எனக்கு எவ்விதமான அநீதிகளும் ஏற்படவில்லை. வீட்டிலும் சரி வேலை செய்யும் இடத்திலும் சரி எனனைப் புரிந்து ஏற்றுக் கொண்டார்கள்.

சமூகத்தின் வாய்ப் பேச்சால் எனது பெற்றோர்கள் பெரிதும் மன உளைச்சலுக்கு ஆளானார்கள். அதற்கிடையில் நானும் ஊடகங்களில் "நான் இப்படி... அப்படி..." என்று கூறி அவர்களை மேலும் மன உளைச்சலுக்கு ஆளாக்க விரும்பவில்லை. அடுத்ததாக சமூக ஊடகங்களில் போராடுவதற்கு எனக்கு நேரமும் இல்லை. வீட்டு வேலை, அலுவலக வேலை என்று என்னுடைய நாள் பொழுது கழிந்து விடுகின்றது. அதற்காக சமூக ஊடகங்களிலிருந்து விலகி இருக்கவில்லை. சமூக ஊடகங்களில்தான் இருக்கின்றேன்.

**LGBTIQA+ Community தொடர்பாக உங்களுடைய கருத்து?**

என்னைப் போன்று உணர்வுகளை கடந்து வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு என்று ஒரு சமூகம் செயற்படுவது மிகவும் பாராட்டுக்குரிய விடயமாகும். என்னுடைய நண்பர்கள்தான் யாழ்ப்பாணத்தில் அச்சமூகத்தை வழிநடத்திச் செல்கின்றனர். எங்களைப் போன்று இருப்பவர்களை இனங்கண்டு விழிப்புணர்வுகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றது. என்னிடம் வருபவர்களை வழிநடத்துகின்றேன் - விழிப்புணர்வு செய்கின்றேன் அவர்களை அந்த சமூகத்துடன் தொடர்புபடுத்தி விடுகின்றேன். இவ்வாறாக என்னால் முடிந்த உதவிகளைச் செய்கின்றேன்.

**LGBTIQA+ சமூகம் தொடர்பாக ஆரம்ப காலத்திற்கும் தற்போதைக்கும் கூறப்படும் விவாதத்திற்கும் இடையிலான உங்களது கருத்து?**

ஆரம்பத்தில் இருந்த அந்த சமூகத்திற்கு போதியளவு விழிப்புணர்வு இல்லாமல் இருந்தது. நாங்கள் விரும்பியது போலவே எங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம் இவ்வாறாக மாறலாம் இவ்வாறான வைத்திய முறைகள் இருக்கின்றன தொடர்பில் புரிதல் இல்லாமையினால் ஆரம்ப கால மாற்றுப் பாலினத்தவர் தற்போது வரைக்கும் தங்களை மாற்றிக் கொள்ளாமல் போலியாக வாழும் நபர்கள் அதிகளவில் இருக்கின்றனர். ஆனால் தற்காலத்தில் இச் சமூகம் தொடர்பான அதிகளவு விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்படுகின்றன. அதனால் தற்காலத்தில் இவ்வாறானவர்கள் இலகுவாக மாறிக் கொள்கின்றார்கள்.

**இலங்கையிலல் மாற்றுப் பாலினத்தவர் தொடர்பான நிலை பற்றி உங்களின் கருத்து**

தற்காலத்தில் இலங்கையில் அவர்களின் எண்ணிக்கை அதிகரித்துசெல்கின்றது. ஆனால், எமது அயல் நாடான இந்தியாவைப் பார்க்கிலும் இங்கு குறைந்த அளவில் தான் இருக்கின்றார்கள். இந்தியாவில் 6 மாத காலங்கள் தங்கி இருந்தமையால் சில விடயங்களை என்னால் அறிந்து கொள்ள முடிந்தது. அங்கே சமூகங்களிடையேயும் மக்களிடையேயும் திருநர்கள் தொடர்பாக சரியான புரிந்துணர்வுகள் மதிப்புகள் இல்லாவிட்டாலும் அரசாங்கத்திடமிருந்து எல்லா விதமான அங்கீகாரங்களும் சலுகைகளும் வழங்கப்படுகின்றன. ஆனால், இதுவே இலங்கையை எடுத்துக் கொணண்டால் அரசாங்கத்திடம் இருந்து திருநர்களுக்கு எந்த சலுகைகளும் கிடைக்கப்பெறவில்லை. அரசாங்கத் துறைகளில் வேலைக்கு அமர்த்து வது என்பதும் மிக அரிதாகவே காணப்படுகின்றது.

திருநர்கள் தொடர்பில் பாராட்டத்தக்க ஒரு விடயம் உள்ளது. இந்தியா உள்ளிட்ட மேற்கத்தைய நாடுகளில் திருநர்களுடைய அடையாள அட்டைகளைப் பார்த்தோமானால் அவர்கள் 3ஆம் பாலினத்தவர் என்றே அடையாளப்படுத்தப்படுகின்றனர். ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில் ஆணாகப் பிறந்து பெண்ணாக மாறுபவர்களை பெண் என்றும் பெண்ணாகப் பிறந்து ஆணாக மாறுபவர்களை ஆண் என்றுமே அடையாள அட்டைகளில் அடையாளப்படுத்துகின்றனர். ஆண், பெண் ஆகவே எங்களை அடையாளப்படுத்திக் கொள்வது என்பது மிகவும் பாராட்டத்தக்க ஒரு விடயமாகும்.

**உங்களுடைய எதிர்காலம் குறித்து உங்கள் கருத்து**

நான் 6 வருடங்களாக ஆண் ஒருவரைக் காதலிக்கின்றேன். சில பிரச்னைகளைத் தாண்டி இரு வீட்டாரும் சம்மதம் தெரிவித்திருக்கின்றனர். கூடிய விரைவில் நாங்கள் இருவரும் திருமணம் செய்து கொள்ளப் போகின்றோம்.

(கட்டுரையாளர், யாழ். பல்கலைக்கழக ஊடக கற்கைகள் துறை 4ம் வருட மாணவி)

# ஈழ - தமிழக மீனவர் பிரச்னை உண்மைநிலை என்ன?

ஈழத் தமிழர் - தமிழ்நாடு உறவு என்பது நீண்ட - நெடிய பந்தத்தைக் கொண்டது. இந்தப் பந்தத்தை ஒரே வார்த்தையில் சொல்வதானால் 'தாய் - பிள்ளை' உறவைப் போன்றது. ஈழத் தமிழர்களின் நம்பிக்கையாக தமிழ் நாட்டு மக்கள் இருந்து வருகிறார்கள்.

பாரம்பரிய தொழிலை நம்பி வாழும் ஈழத்தின் மீனவர் பெருங் குடிக்கு மிகப்பெரிய பாதிப்பாக அமைவது இந்திய மீனவர்களின் ட்றோலர் படகு களும் இழுவைமடி வலைகளும் தான். இந்திய மீனவர்களின் தொடர் அத்துமீறலால் ஈழ மீனவர்கள் பெரும் பாதிப்புகளை சந்தித்தார்கள்.

பெரும் பொருளாதார இழப்புகளை சந்தித்து வரும் அவர்கள் தமிழ் நாடு மீனவர்களுக்கு எதிராக போராடும் நிலைமையை உருவாக்கியது.

இந்த நிலைமையை சாதகமாக்கிக் கொண்டு ஈழ - தமிழக உறவு நிலையை சதுரங்க களமாக்கி இலங்கை - இந் திய - சீன - தமிழக அரசுகளும் - ஈழத் தமிழ் அரசியல் வாதிகளும் தங்க ளுக்கு சாதகமான விதத்தில் காய் நகர்த்துகின்றனர்.

இந்த நிலையில் -

இந்தப் பிரச்னை யின் ஆழத்தை ஈழ - தமிழக மீனவர் பிரதிநிதிகள் கச்சத்தீவில் நடத்திய பேச்சின் பின்னர் இங்கே பகிர்கிறார்கள்.

## இழுவைமடி படகுகளை இந்திய அரசு பொறுப்பேற்க வேண்டும்!

**அருட்தந்தை சார்ச்சில்**
தெற்காசிய மீனவர் சங்க
பொதுச்செயலாளர் கன்னியாகுமரி.



இந்திய- இலங்கை மீனவர்களுக்கும் மீன்பிடிப்பதில் பல ஆண்டுகளாக இந்த பிரச்னை இடம் பெற்று வருகின்றது. இலங்கை மீனவர்களுக்கு இந்திய மீனவர்களின் இழுவைமடி படகுகளால் பெரும் பிரச்னை காணப்படுகின்றது. குறிப்பாக இந்திய மீனவர்களின் பல படகுகள் இலங்கையில் சிறைப்படுத்தப்பட்டுள்ளன. இதேநேரம் சிறைப்பிடிக்கப்படும் பல மீனவர்கள் படகுகளின் உரிமையாளர்கள் அல்லர். தொழிலுக்காக செல்பவர்கள் மாத்திரமே. அத்தோடு இலங்கையில் இருந்து மீன் பிடிக்க இந்தியாவுக்கு வரும் பலரும் இங்கே சிறை பிடிக்கப்படுகின்றார்கள்.

எனவே, நீண்ட காலமாக இந்த பிரச்னை தொடர்ந்த வண்ணம் உள்ளது. ஏற்கனவே, இழுவைமடி படகு கட்டார் நாட்டில் பாதிப்பை ஏற்படுத்தியதால் அந்த நாட்டில் இழுவைமடிப் படகுகளை அரசாங்கம் பொறுப்பேற்று வேறு தொழில் முறையை அறிமுகப் படுத்தியது. இதேபோல இந்திய அரசாங்கமும் இந்தப் படகுகளை பொறுப்பேற்று மாற்று ஒழுங்கை செய்ய வேண்டும்.

இலங்கை அரசாங்கம் அந்த கோரிக்கையை இந்திய அரசாங்கத்துக்கு விடுக்க முடியும். எனவே, இந்திய இழுவை மடி படகுகள் சட்டவிரோதமாக தொழிலில் ஈடுபடுவதை நிறுத்துவதற்கு இதை ஒரு முறையாக பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும், இந்தப் பிரச்னைக்கு தீர்வு காண இரு நாட்டு அரசாங்கங்களும் பேச்சு நடத்த வேண்டும்.



அறிக்கையிடல்
REPORTING
என். குகராஜ்

## இழுவைமடி படகுகளை குறைப்போம்

**மனோகரன்**
தி. மு. கவின் மீனவர் குழு பிரதிநிதி



இலங்கை - இந்திய மீனவர்கள் இடையேயான பேச்சுகள் பலமுறை இடம்பெற்றுள்ளன. ஆனாலும், இனிவரும் காலங்களில் இலங்கை - இந்திய மீனவர்கள் பிரச்னையில்லாது மீன்பிடிப்பதற்கு இரண்டு நாட்டு அதிகாரி குழுக்கள் உள்ளடக்கப்பட்டு - இரண்டு நாட்டு அமைச்சுகளின் பங்கேற்புடன் இதற்கு நிரந்தர தீர்வை காண்பதற்கு ஒரு குழு ஒன்று அமைக்கப்பட்டு பிரச்னை தீர்க்கப்பட வேண்டும். முதலமைச்சர் ஸ்டாலின் தலை மையில் நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும் நாம் கோரிக்கை விடுத்திருக்கிறோம். இதேபோல கடந்த காலங்களில் பல தடவைகள் இந்த பேச்சுகள் இடம் பெற்றிருந்தன. அந்த பேச்சுகளில் இலங்கையின் கடல்தொழில் அமைச்சரும் பங்கு பற்றி இருந்தார். எனவே இரண்டு நாட்டு மீனவர்களும் பிரச்னை இல்லாது தொழில் செய்வதற்குரிய தீர்வை வழங்க வேண்டும்.

இழுவை தொழில் மூலமாக இலங்கை மீனவர்கள் பாதிக்கப்படுகின்றார்கள் என்ற கருத்தின் அடிப்படையில் தமிழக முதலமைச்சர், இழுவை படகுகளை குறைத்து - பதிவுகள் நிறுத்தி நாட்டுப் படகுகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். தமிழகத்தில் இராமநாதபுரம், புதுக்கோட்டை, நாகப்பட்டினம், கடலூர், தஞ்சாவூர், மாவட்டங்களில் இந்த இழுவைமடி படகுகளை குறைத்து இனிவரும் காலங்களில் தொப்புள் கொடி உறவு என்று சொல்லக்கூடிய இலங்கை மீனவர்களும் தமிழக மீனவர்களும் பிரச்னை இல்லாது தொழில் செய்வதற்கு தமிழக முதலமைச்சர் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கிறார்.

## சட்டவிரோத மீன்பிடியை அனுமதிக்கவே மாட்டோம்

**புனித பிரகாஷ்**
யாழ். மாவட்ட சம்மேளன தலைவர்



எமது தரப்பில் எதிர்நோக்கும் பல பிரச்னைகளை தமிழ்நாட்டு தொப்புள் கொடி உறவுகளுக்கு நாங்கள் தெரிவித்திருக்கின்றோம். அவர்கள் தங்களுடைய அரசாங்கத்துடன் கலந்துரையாடி எங்களுக்கு ஒரு தீர்வைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்திருக்கின் றார்கள் - அதனை நாங்கள் நம்புகின்றோம்.

எமது பகுதிக்குள் ஏற்கனவே கூறுவதைப் போன்றே சட்டவிரோத மீன்பிடி அனுமதி தொடர்பில் எந்தவித கோரிக்கையை முன் வைத்தாலும் நாங்கள் ஏற்கப் போவதில்லை. அதற்கு எதிராக நாங்கள் போர்க்கொடி எழுப்புவோமே தவிர ஆதரவளிக்க மாட்டோம்.

இந்த சமரசப் பேச்சு போல பல பேச்சுகள் இடம் பெற்றுள்ளன. எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்றும் சொல்ல முடியவில்லை - நம்பிக்கை என்றும் சொல்ல முடியவில்லை. ஆனால், குறிப்பிட்டு ஒரு காலம் கூறியிருக்கின்றார்கள் அந்த காலத்திற்குள் சரியான தீர்வு அவசியம். அது தவறும் பட்சத்தில் நாம் போராட்டங்களை செய்வோம்.

## எம்மை வாழ விடுங்கள்

**குருஸ்**
நெடுந்தேவு கடற் தொழிலாளர்
சங்கத் தலைவர்



இலங்கை - இந்திய மீனவர்களின் இழுவை மடி தடை செய்தல் தொடர்பான இந்தப் பேச்சுபோல பல பேச்சுகள் - போராட்டங்கள் - பேரணிகள் என தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன. உண்மையில், இந்த இழுமைமடியானது ஒட்டுமொத்தத்தில் எமது வளங்களை மட்டுமல்ல - எங்கள் வாழ்வாதாரங்களை மட்டுமல்ல - இளம் சந்ததியினரின் எதிர்காலத்தையும் இழுத்துச் செல்கின்றது. நமது மீனவர்களளின் எதிர்கால நம்பிக்கையையும் இழுத்து செல்கின்றது.

உண்மையில் இந்திய இழுவைமடி மீனவர்களிடம் கேட்பது என்னவென்றால் எமது இளம் சந்ததியினரை வாழ விடுங்கள் - எம்மையும் வாழ விடுங்கள். இந்த பேச்சானது எமது அடுத்த தலைமுறைக்கும் கடந்து செல்லக்கூடாது. எம்மை வாழ விடுங்கள் - வழி விடுங்கள்.

## தமிழக மீனவர்களுடன் பேசி விரைவில் முடிவு

**எம். சி. முனுசாமி**
தமிழக பா. ஜ. க.
மீனவ குழு தலைவர்



தொடர்ந்து கொண்டிருக்கும் இலங்கை - இந்திய மீனவர் பிரச்னைக்கு தீர்வு காணும் முகமாக சந்திப்பை மேற்கொண்டிருக்கின் றோம். வெகு விரைவில் தமிழக மீனவர்கள் அனைவரையும் இந்தியாவில் சந்தித்து அதற்கு நடவடிக்கை எடுத்த தயாராக உள்ளோம். இந்த பிரச்னையை தொடர்ந்து விட முடியாது. தமிழ்நாட்டில் உள்ள மீனவர்கள் அனைவரையும் அழைத்து இந்த விடயங்கள் தொடர்பில் நாங்கள் ஆராய்ந்து இந்திய மீனவர்களால் இலங்கை மீனவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு உரிய நடவடிக்கை எடுப்போம்.


இலங்கை மீனவர்கள் கண்ணீர் விடுவதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. எமது தொப்புள்கொடி உறவுகள் அவர்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில் உரிய தீர்வைப் பெற்றுக்கொடுப்போம்.

## போராடி தடுப்போம்

**ச. சிவகுமார்,**
வடமராட்சி கிழக்கு
சமாச தலைவர்



இழுவைமடிப் படகுகள் எமது கடல் பரப்புக்குள் வருமாக இருந்தால் கச்சதீவில் நடந்த சமரசப் பேச்சில் எந்த அர்த்தமும் இல்லை. இனியும் இழுவைமடி படகு ட்றோலர் படகுகள் இங்கே வருமாக இருந்தால் எமது சமாசங்களை ஒன்றிணைத்து பெரும் போராட்டங்களை மேற்கொண்டு அதனை தடுப்பதற்குரிய நடவடிக்கை எடுப்போம்.




# படப்பிடிப்பு ஆரம்பம்

ஐஸ்வர்யா ரஜினி இயக்கும் லால் சலாம் படத்தின் படப்பிடிப்பு ஆரம்பமாகியுள்ளது.

இப்படத்தின் முதல்கட்ட படப்பிடிப்பு திருவண்ணாமலை பகுதியில் நடைபெறுவதாகவும், அங்கு ரஜினி காந்த் மற்றும் அவரின் தங்கையாக நடிக்கும் ஜீவிதா ஆகியோர் சம்பந்தப்பட்ட காட்சிகள் படமாக்கப்படுகின்றன.

மேலும், கிரிக்கெட் விளையாட்டை மையமாகக் கொண்டு உருவாகும் இந்த படத்தில் ரஜினிகாந்த் சிறப்பு தோற்றத்தில் நடிக்க, விஷ்ணு விஷால், விக்ராந்த் ஆகியோர் நாயகர்களாக நடிக்கிறார்கள்.



# தமிழுக்கு புதுவரவு

மும்பை மொடல் அழகியான நேகா சோலங்கி தெலுங்கில் வளர்ந்து வரும் நடிகையாக இருக்கிறார். 90எம். எல். உள்பட பல படங்களில் நடித்துள்ளார். இவர் தற்போது 'கேம் ஒன்' என்ற படத்தின் மூலம் தமிழுக்கு வருகிறார்.

ரவி கஸ்தூரி தயாரிப்பில் உருவாகும் இந்தப் படத்தை தயானந்த் இயக்கி உள்ளார். படத்தின் நாயகனாக கீதானந்த் நடிக்கிறார். முக்கிய வேடங்களில் மதுபாலா, ஆதித்யா மேனன், சுபலேகா சுதாகர், வசந்தி கிருஷ்ணன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

# இணையும் லாரன்ஸ் - நயன்

நடிகர் மற்றும் இயக்குநர் ராகவா லாரன்ஸ் நடிப்பில் உருவாகி வரும் திரைப்படம் ருத்ரன். இப்படம் வரும் ஏப்ரல் 14 அன்று வெளியாகிறது. தற்போது சந்திரமுகி 2 பாகத்தில் இவர் நடித்து வருகிறார். இதைத்தொடர்ந்து ஜிகிர்தண்டா 2, அதிகாரம் போன்ற படங்களிலும் நடிக்கவுள்ளார்.

இந்நிலையில் இன்னொரு புதிய படத்தில் நடிக்க ஒப்பந்தம் ஆகியுள்ளார். இந்த படத்தை மேயாத மான் படத்தின் இயக்குனர் ரத்ன குமார் இயக்குகிறார். பயங்கரம் நிறைந்த - நகைச்சுவை படமாக உருவாகும் இந்தப் படத்தில் நாயகியாக நடிக்க நயன்தாராவிடம் பேச்சு நடக்கிறது. விரைவில் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாகும்.









**திரைப்படம் - கொன்றால் பாவம்**
**இயக்கம் - தயாள் பத்மநாபன்**
**இசை - சாம் சிஎஸ்**
**நடிப்பு - வரலட்சுமி சரத்குமார், சந்தோஷ் பிரதாப்**

மலையாள திரைப்படங்களில் வருவது போன்ற கதைகளும், கதா நாயகர்களுக்கு முக்கியத்துவம் இல்லாத படங்களும் தமிழிலும் வருவதில்லை என்ற ஒரு குறையை இந்தப் படம் தீர்த்து வைக்கிறது.

ரூபர்ட் ப்ரூக் என்பவர் 1900களின் தொடக்கத்தில் எழுதிய நாடகத்தை மையமாக வைத்து கன்னடத்தில் ஒரு நாடகத்தை உருவாக்கியிருந்தார்கள். அந்த நாடகத்தை மையமாக வைத்து கன்னடத்தில் 2018இல் எடுக்கப்பட்ட படம் 'ஆ கரால ராத்ரி'. தயாள் பத்மநாபன் இயக்கிய அந்தப் படத்தை அவரே பின்னர் தெலுங்கில் 2020இல் 'அனகனகா ஓ அதிதி' என்ற படமாக மீளுருவாக்கினார். இதைத் தற்போது தமிழில் 'கொன்றால் பாவம்' என்ற பெயரில் அவரே இயக்கியிருக்கிறார். தமிழரான தயாள் பத்மநாபன் கன்னடத்தில் பல படங்களை இயக்கியவர். தமிழில் இதுதான் அவரது முதல் படம்.

தர்மபுரி அருகே 1981இல் நடக்கும் கதை. சார்லி அவரின் மனைவி ஈஸ்வரி ராவ், அவர்களின் மகள் வரலட்சுமி என கிராமத்தின் ஒதுக்குப்புறத்தில் வசித்து வருகிறார்கள். மிகவும் ஏழ்மையான ஒரு குடும்பம். முதிர்கன்னியாக இருக்கிறார் வரலட்சுமி. ஊர் ஊராகச் சுற்றித் திரிகிறேன் என்று சொல்லி சந்தோஷ் பிரதாப் அவர்களின் வீட்டில் ஒரே ஓர் இரவு மட்டும் தங்கிக் கொள்ள அனுமதி கேட்டு தங்குகிறார். சார்லியின் ஏழ்மையைப் பார்த்து அவரிடம் இருக்கும் பணம், நகைகளைத் தர நினைக்கிறார். ஆனால், சார்லி மறுத்துவிடுகிறார். இந்நிலையில், சந்தோஷைக் கொன்று அந்த பணம், நகைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என வரலட்சுமி நினைக்கிறார். அவரின் பெற்றோர் மனதையும் மாற்றுகிறார். அதன்பின் என்ன நடக்கிறது என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

படத்தின் முதல் பாதி மட்டும் கொஞ்சம் மெதுவாக, அழுத்தமில்லாத காட்சிகளால் நகர்கிறது. ஆனால், இரண்டாம் பாதிதான் மொத்த படமே. சந்தோஷை கொல்ல நினைத்தபின் வரலட்சுமியால் அதை செய்ய முடிந்ததா இல்லையா என்பதை பரபரப்புடன் கொடுத்திருக்கிறார். அதிலும் உச்சக் காட்சி நாம் சிறிதும் எதிர்பாராத ஒன்றாக அமைந்து அதிர்ச்சியைக் கொடுக்கிறது. அதுதான் படத்தைத் தாங்கியும் நிற்கிறது.

தமிழில் அழுத்தமான பல கதாபாத்திரங்களில் நடித்த வரலட்சுமி சரத்குமாரை தமிழ் திரை உலகம் இதுவரை சரியாகப் பயன்படுத்தாமலே இருக்கிறது. அவர் தெலுங்கு பக்கம் சென்று அங்கு பலவிதமான கதாபாத்திரங்களில் நடித்து அவரது திறமையை வெளிப்படுத்தி வருகிறார். ஒரு மறை கதாபாத்திரத்தைக் கொடுத்து அவரை கதையின் நாயகியாக்கி இந்தப் படத்தை அவரைப் பற்றி பேச வைத்திருக்கிறார் இயக்குநர் தயாள். இதற்கு முன்பு கதாநாயகியாக வரலட்சுமி பல படங்களில் நடித்திருந்தாலும் இந்தப் படத்தை அவரின் முக்கிய படங்களில் முதல் படமாக சொல்லும்படியான படமாக அமைந்திருக்கிறது.

சார்லி, ஈஸ்வரி ராவ் சிறந்த குணசித்திர நடிகர்கள். அவ்வப்போது கிடைக்கும் வாய்ப்பை சரியாகப் பயன்படுத்துபவர்கள். இந்தப் படத்தில் இருவரது நடிப்பும் அவர்களது அனுபவத்தைப் பேசியுள்ளது. சந்தோஷ் பிரதாப் கதாபாத்திரம் மீது நமக்கு பரிதாபம் வருவதே அவரது நடிப்புக்கு கிடைத்த வெற்றி.

சாம் சிஎஸ் பின்னணி இசை, செழியன் ஒளிப்பதிவு படத்துக்கு சரியான பலமாக இருக்கிறது. ஒரே ஒரு வீட்டுக்குள் இரவு நேரக் காட்சி களுக்கான ஒளிக்கலவையில் தனி கவனம் செலுத்தி ஓர் இயல்பு தன் மையை உருவாக்கியிருக்கிறார் செழியன்.

ஆர்ப்பாட்டமில்லாத, அழுத்தமான -அதிர்ச்சியான ஒரு திரைப்படம் இது. பணம், பொன், மண் மீதான பேராசை ஒருவரது வாழ்க்கையை எப்படி மாற்றும் என்பதற்கு இப்படம் ஒரு உதாரணம். அந்தக் காலத்தில் என்ன இந்தக் காலத்திலும் இப்படியான சில விஷயங்கள் இன்னமும் நடந்து கொண்டுதான் இருக்கிறது.

# புஷ்பாவில் இணைந்த சாய் பல்லவி

கடந்த 2021ஆம் ஆண்டு அல்லு அர்ஜூன், ராஷ்மிகா மந்தனா, பகத் பாசில் உட்பட பலரது நடிப்பில் வெளியாகி வெற்றி பெற்ற படம் புஷ்பா.

தற்போது புஷ்பா படத்தின் இரண்டாம் பாக படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்த இரண்டாம் பாகத்திலும் முதல் பாகத்தில் நடித்த அல்லு அர்ஜூன், ராஷ்மிகா மந்தனா, பகத் பாசில் ஆகியோர் நடித்து வரும் நிலையில், தற்போது சாய் பல்லவியும் இணைந்திருக்கிறார். கதைக்கு திருப்புமுனை தரக்கூடிய ஒரு கதாபாத்திரத்தில் அவர் நடிக்கிறார்.



# ஜோதிகாவின் தெரிவு

திருமணத்தின் பின்னர் சிறிது இடைவெளியின் பின்னர் ஜோதிகா நாயகியை மையமாகக் கொண்ட படங்களில் நடித்து வருகிறார்.

தற்போது மலையாளத்தில் மம்முட்டி ஜோடியாக 'காதல்: தி கோர்க்' என்ற படத்தில் நடித்து முடித்துள்ளார். இந்த படம் விரைவில் திரைக்குவர உள்ளது.

இந்த நிலையில், ஹிந்தியில் 'தாபா கார்டல்' என்ற பெயரில் உருவாகும் இணையத் தொடரில் நடிக்கவுள்ளார். இந்தத் தொடர் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னட மொழிகளிலும் வெளியாகவுள்ளது. இதில் ஜோதிகாவுடன் ஷபானா ஆஸ்மி, சுஜ்ராஜ் ராவ் ஆகியோரும் நடிக்கின்றனர்.



# ரொனால்டோவின் கோபம்



ரசிகர்கள் மெஸ்ஸிக்கு ஆதரவாக கோஷம் எழுப்பிய தால் கோபம் அடைந்த ரொனால்டோ தண்ணீர் போத்தல்களை உதைத்து தள்ளினார்.

போர்த்துக்கல் உதைபந்தாட்ட அணியின் தலைவர் கிறிஸ்டியானோ ரொனால்டோ 38. சமீபத்தில் 6,960 கோடி (இலங்கை) ரூபாய்க்கு சவுதி அரேபியாவின் அல் நாசர் அணியில் இணைந்தார். தற்போது சவுதி புரோபசனல் லீக் தொடரில் பங்கேற்றுள்ளார். ஜெட்டாவில் நடந்த போட்டியில் அல் நாசர், அல் இட்டிஹாத் அணிகள் மோதின. இதில் ரொனால்டோவின் அல் நாசர் அணி 0:1 என தோல்வியடைந்தது.

ரொனால்டோ வருகைக்கு பின் முதல் தோல்வியடைந்த அல் நாசர் அணி, புள்ளிப் பட்டியலில் இரண்டாவது இடத்துக்கு தள்ளப்பட்டது. பார்வையாளர் பகுதியிலிருந்து ரசிகர்கள், ரொனால்டோவுக்கு போட்டியாளராக கருதப்படும் ஆர்ஜென்ரீனாவின் மெஸ்ஸிக்கு ஆதரவாக ‘மெஸ்ஸி... மெஸ்ஸி’ எனக் கோஷம் எழுப்பினர். இதனால், ரொனால்டோ கோபமடைந்தார்.

கையில் கட்டியிருந்த ‘கப்டன்’ பட்டியை கழற்றி எறிந்தார். சக வீரர்கள் சமாதானம் செய்த போதும் அங்கு கிடந்த தண்ணீர் போத்தல்களை காலால் எட்டி உதைத்தார்.

ரொனால்டோ வெளியிட்ட செய்தியில்,‘ போட்டி முடிவு ஏமாற்றம் தருகிறது. அடுத்து வரும் போட்டிகளில் கவனம் செலுத்துவோம். ரசிகர்கள் ஆதரவுக்கு நன்றி,’ என தெரிவித்துள்ளார்.



# தாமதம் ஏன்?

பதினாறாவது ஐ. பி. எல். கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 31ஆம் திகதி தொடங்குகிறது. இதற்கு 2 நாட்கள் முன்பாக தென்னாபிரிக்க வீரர்கள் ரபடா, மார்க்ரம், மில்லர், நோரட்ஜே, குயின்ரன் டி கொக் உள்ளிட்ட தென்னாபிரிக்க வீரர்கள் தங்கள் ஐ.பி.எல். அணிகளுடன் இணைவார்கள் என்று முன்பு தெரிவிக்கப்பட்டு இருந்தது. தற்போது இந்த முடிவில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்க அணி சொந்த மண்ணில் மார்ச் 31 மற்றும் ஏப்ரல் 2ஆம் திகதி நெதர்லாந்துக்கு எதிராக இரண்டு ஒரு நாள் போட்டிகளில் மோதுகிறது. இதில் வெற்றி பெற்றால்தான் தென்னாபிரிக்க அணியால் 50 ஓவர் உலகக் கிண்ணப் போட்டிக்கு நேரடியாக தகுதி பெற முடியும் என்ற நிலை உள்ளது.

இதனால் தென்னாபிரிக்க முன்னணி வீரர்கள் அனைவரும் இந்த தொடரில் விளையாட உள்ளனர். இதன் காரணமாக, சற்று தாமதமாக ஏப்ரல் 3ஆம் திகதியின் பின்னரே தென்னாபிரிக்க வீரர்கள் ஐ. பி. எல். அணிகளில் இணைவார்கள் என்று தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.



# ஷோன் மார்ஷ் ஓய்வு

அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரரான ஷோன் மார்ஷ் முதல்தர கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறப்போவதாக அறிவித் துள்ளார்.

தனது 17 வயதில் கிரிக்கெட் பயணத்தை தொடங்கிய ஷோன் மார்ஸ் மேற்கு அவுஸ்திரேலியா அணிக்காக விளையாடி 12,032 ஓட்டங்களை எடுத்திருக்கிறார்.

2011 ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிரான தனது முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஆடிய ஷோன் மார்ஷ் 2019 ஆம் ஆண்டு இந்திய அணிக்கு எதிரான சிட்னி டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணிக்காக கடைசியாக விளையாடினார்.

இதுவரை 15 சர்வதேச இருபது - 20 போட்டிகளில் விளையாடி இருக்கிறார். 2008 ஆம் ஆண்டு ஐ. பி. எல். முதல் தொடரில் பஞ்சாப் அணிக்காக 11 போட்டிகளில் ஆடிய இவர் 616 ஓட்டங்களை எடுத்து ஒரேஞ் நிற தொப்பியை வென்றிருந்தார்.

இந்நிலையில், தற்போது முதல்தர கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறப்போவதாக ஷோன் மார்ஸ் அறிவித்துள்ளார். ஓய்வு குறித்து பேசிய ஷோன் மார்ஷ்,

ஹசிறுவயதில் என் அப்பா விளையாடியதைப் பார்த்துக் கொண்டிருந்த போதுதான் எனக்கு கிரிக்கெட் மீது ஆர்வம் இருக்கிறது என்பதை உணர்ந்தேன். இது ஓர் அற்புதமான பயணம். 22 ஆண்டுகள் கிரிக்கெட்டில் நான் பயணிப்பேன் என்று என் கனவில்கூட நினைக்கவில்லை. இதை நினைத்து நான் மிகவும் பெருமைப்படுகிறேன்” என்று தெரிவித்திருக்கிறார்.

# கார்த்திக்கை பின்பற்ற விரும்புகிறேன்

நடப்பு மகளிர் பிறீமியர் லீக் தொடரில் தினேஷ் கார்த்திக்கை போல அதிரடியாக ஆடி ஆட்டத்தை முடித்துக் கொடுக்க விரும்புவதாக தெரிவித்துள்ளார் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் வீராங்கனை ஸ்ரேயங்கா பாட்டீல். 20 வயதான சகலதுறை வீரரான அவர், அதற்காக வேண்டி தினேஷ் கார்த்திக்கை (டி. கே.) போலவே ரேம்ப் ஷொட் ஆடி பயிற்சி எடுத்து வருகிறாராம்.

“டி. கே. பாணியில் ஆட்டத்தை வெற்றிகரமாக முடித்து வைக்க நான் விரும்புகிறேன். இதை நான் எனது சக அணியினரிடம் தொடர்ந்து சொல்லி வருகிறேன். அதற்கான வாய்ப்பு எனக்கு அமைய வேண்டும். அது நடந்தால் நிச்சயம் நான் டி. கேவை போல ஆடுவேன். அவரின் ஆட்ட நுணுக்கத்தை பிரதி எடுத்து நான் பயிற்சி செய்து வருகிறேன். அழுத்தம் மிகுந்த நேரத்தில் விளையாட நான் அதிகம் விரும்புவேன். கிரேஸ் ஹாரிஸின் ஆட்டம் அபாரமாக இருந்தது. எனக்கு பிடித்தது” என ஸ்ரேயங்கா தெரிவித்துள்ளார்.

கடந்த 8ஆம் திகதி குஜராத் ஜெயண்ட்ஸ் அணிக்கு எதிராக நடைபெற்ற போட்டியில் 4 பந்துகளில் 11 ஓட்டங்கள் மற்றும் 2 விக்கெட்களை ஸ்ரேயங்கா கைப்பற்றியிருந்தார். இதையடுத்து ருவிற்றர் தளத்தில் அவரை வாழ்த்தி இருந்தார் தினேஷ் கார்த்திக். இந்திய அணியில் அவர் இடம்பிடிப்பார் என தான் நினைப்பதாகவும் அதில் டி. கே. சொல்லி இருந்தார். இந்தப் போட்டியில் 202 ஓட்டங்களை விரட்டி 190 ஓட்டங்கள் எடுத்திருந்தது பெங்களூர். அதற்கு முன்னதாக மும்பை அணிக்கு எதிராக 15 பந்துகளில் 23 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

“அந்த ருவீற்றை நான் பார்க்கும் போது. இதைவிட வேறென்ன நான் கேட்க முடியும். இதுவே எனக்கு போதும் என நான் எண்ணினேன்” என ஸ்ரேயங்கா தெரிவித்துள்ளார்.



அ. ரோகினி

# யாழ்ப்பாணத்தின் அடையாளம்: தூய மரச்செக்கு எண்ணெய்!

ஆரம்ப காலம் தொட்டே தொழில்நுட்பம் என்பது தமிழர்கள் முன்னேறி வந்த துறையாக இருந்து வந்தது. இன்று இயந்திரங்களின் துணை யோடு ஆற்றப்படும் பல பணிகள் அன்று அவை ஏதுமின்றியே செய்யப்பட்டு வந்தன. சூத்திரக் கிணற்று முறை நீர் நிலையம் எடுத்தல் துலாமுறைக் கிணறு செக்கு முறைமை என்பன அக்காலத்தில் பாரிய இயந்திரங்களின் பொறியியல் இல்லாமல் சாதாரணமாக மேற்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப முறைகளாகும். அந்த வகையில் செக்கு என்பது விதை களில் இருந்து எண்ணெய் வடிப்பதற்காகப் பயன்ப டுத்தப்பட்ட தொழில்நுட்பம் ஆகும். அதற்காக வேப்பம் விதை ஆமணக்கு விதை இலுப்பம் விதை எள்ளு தேங்காய் என்பன பயன்படுத்தப்பட்டன.



வேப்பெண்ணெய் இலுப்பெண்ணெய் ஆமணக்கு எண்ணெய் என்பன செக்கிலிருந்து ஊற்றப்பட்டாலும் எள்ளில் இருந்து எடுக்கப்படும் எண்ணெய்க்கே அதிக மவுசு காணப்படுகிறது. அதனையே நல்லெண்ணெய் எனவும் கூறுகிறோம். அதிலும் குறிப்பாக மரச்செக்கில் ஊற்றப்படும் எண்ணெய்க்கே அதிகளவிலான கிராய்க்கி காணப்படுகிறது. ஆரம்பத்தில் மாடுகளைப் பயன் படுத்தி மரச்செக்கில் எண்ணெய் ஊற்றப்பட்டது. பின் னர் காலம் செல்லச் செல்ல நேர விரயம் அதிக மனித வலுவின் தேவை காரணமாக அம்முறை இல்லாது ஒழிந்து இயந்திர மரச்செக்கு முறை பாவனைக்கு வந்தது. அதிலும் மரச்செக்கைப் பயன்படுத்தும் முறை யில் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை. அங்கு பயன்படுத்தப்படும் மாடுகளுக்குப் பதிலாக மாத்திரமே ஆளற்ற சிறிய ரக உழவு இயந்திரங்கள் பயன்படுத்தப் பட்டன. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் மாடுக ளைப் பயன்படுத்தி ஆரம்பத்தில் செக்கு எண்ணெய் வடிக்கப்பட்டது. 1995 களின் பின்னர் மாட்டுச் செக்கு மரபானது அருகி மாடுகளிற்குப் பதிலாக சிறிய ரக உழவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. அதே போல் இன்றும் பயன்படுத்தப்பட்டுக் கொண்டி ருக்கின்றன.

இந்தச் செக்கு முறையானது 3ம் வகை நெம்புகோல் தத்துவத்திற்குரியதாகும். அங்கு பயன்படுத்தப்படும் செக்கானது புளியமரத்திலானது ஆகும். அதற்காக உரிமையாளர்களினால் உறுதியான புளியமரங்கள் தெரிவுசெய்யப்படுகின்றன. செக்கிற்குப் பயன்படுத்தப் படும் உலக்கையானது வேப்பமரத்தினால் செய்யப் படும். செக்கை இயக்குவதற்குப் பயன்படும் நெம்பு கோலானது வாகை மரத்தினால் செய்யப்படுவதாகும். இவ்வாறு செக்கினுடைய ஒவ்வொரு பாகங்களும் ஒவ்வொரு மரங்களில் இருந்து அதன் வடிவத்திற்கு ஏற்றவாறாகக் கடைந்தெடுக்கப்படுகின்றன. செக்கிற்குப் பயன்படுத்தப்படும் புளியமரமானது வெறும் ஒரு வருட காலம் மாத்திரமே பாவிக்கக்கூடிய மாதிரி இருக்கும். பின்னர் காலம் செல்லச் செல்ல அதன் தன்மையிழந்து விடும். அதன் பின்னர் அது விறகிற்காகப் பயன்படுத்தப் படுகிறது.

யாழ்ப்பாணத்தில் சில பாரம்பரியப் பொருட்களுக்கு அதிகளவு முக்கியத்துவம் கொடுக்கப்படும். அந்த வகை யில் செக்கில் இருந்து எடுக்கப்படும் எண்ணெய்க்கும் இங்கு அதிகளவு மவுசு காணப்படுகிறது. யாழ்ப்பாணத் தைப் பொறுத்தவரையில் எல்லா இடங்களிலும் செக்கு எண்ணெய் ஊற்றுவதில்லை. குறிப்பாக ஆனைக் கோட்டை சாவகச்சேரி பண்டத்தரிப்பு போன்ற இடங் கள் செக்கு எண்ணெய்க்குப் பெயர் போன இடங்க ளாகக் காணப்படுகின்றன. இடத்தின் பெயரைக் கூறினாலே செக்கு எண்ணெய் என்று கூறும் அளவிற்கு பிரபல்யம் பெற்ற இடங்களாகக் காணப்படுகின்றது. செக்கு எண்ணெயை நிறுவனமயப்படுத்தப்பட்ட குடி சைக் கைத்தொழிலாக செய்து வருகின்றனர். யாழ்ப்பா ணத்தை அடிப்படையாகக் கொண்டு விஎஸ்.பி., ரிகேரி போன்ற பிரபலமான எண்ணெய் நிறுவனங்கள் இன்று வரையிலும் தொழிற்பட்டுக்கொண்டிருக்கின்றன. மேலும் அச் சுற்றுவட்டார கிராமத்தில் உள்ளவர்களும் அந் நிறுவனங்களுக்கு கூலிக்கு எண்ணெய் வடித்துக் கொடுக்கின்றனர்.

அதாவது அந் நிறுவனங்களிடமிருந்து எள்ளினைப் பெற்றுக் கொண்டு தமது வீட்டிலுள்ள செக்கில் ஆட்டி பெறப்படும் எண்ணெயையும் பிண்ணாக்கையும் நிறுவ னங்களிடம் கையளிக்கின்றனர். நிறுவன உரிமையா ளர்களும் அதற்கேற்ற ஊதியத்தையும் கொடுக்கின்றனர். அதனை அவ் ஊர் மக்கள் ஜீவனோபாயத் தொழிலாக செய்து வருகின்றனர்.

பாரம்பரிய முறையிலான மரச் செக்கு மூலம் பெறப் படும் எண்ணெயில் அதிகளவு மருத்துவக் குணங்கள் காணப்படுகின்றன. பூப்பெய்த பெண்கள் குழந்தை பெற்ற பெண்கள் போன்றோர் அதிகளவில் செக்கு எண்ணெயைப் பயன்படுத்துகின்றனர். சத்து நிறைந்த செக்கு எண்ணெயைப் பெறுக் கொள்ளுவதற்காக உள்ளூரில் உள்ளவர்கள் தொடக்கம் வெளியூரில் வசிப்பவர்களும் நல்லெண்ணெய் வேண்டுவதற்காக வருவார்கள். அந்த அளவிற்கு மக்கள் மத்தியிலே நல்லெண்ணெய்க்கான தனி இடத்தை யாழ்ப்பாணம் பெற்றுள்ளது.

கலப்படமற்ற மருத்துவக் குணங்கள் நிறைந்த பாரம்பரியமான மரச் செக்கு எண்ணெயானது உடலுக்கு நன்மை பயப்பது மட்டுமல்லாது அதிலிருந்து கிடைக்கின்ற பிண்ணாக்கும் கால்நடைகளுக்கு உணவாகின்றது. கால்நடைகளுக்கான தீவனங்களின் தற்காலத்தில் அதிகரித்துச் செல்லுகின்றமையால் கால்நடை உரிமையாளர்கள் தற்பொழுது பிண்ணாக்கை அதிகளவில் கால்நடைகளுக்கு உணவாகக் கொடுக்கின் றனர். இதன் மூலம் கால்நடை வளர்ப் போரின் ஜீவனோபாயமும் அதிகரித்துச் செல்லுகின்றது.

பலரின் ஜீவனோபாயத்தை அதிகரிக்க உதவினாலும் கூட பாரிய சவால்களுடன் தரன் மரச் செக்கு கைத் தொழில் இன்று வரையிலும் இயங்கிக் கொண்டிருக் கின்றன என்பதில் மாற்றுக் கருத்துகள் கிடையாது. இது தொடர்பாக ஆணைக்கோட்டை மூத்தநயினார் கோயிலடியைச் சேர்ந்த செக்கு உரிமையாளரான தங்கராசா என்பவரைச் சந்தித் வேளையில் "வீட்டிலே கூலிக்கு எண்ணெய் ஊற்றிக் கொடுப்பவர்கள் பல சவால்களை எதிர்கொள்ளுகின்றோம். அதாவது ஒரு தடவையில் 20மப எள்ளை செக்கினுள் இட்டு எண் ணெய்யாக்க முடியும். அவ்வாறு செய்வதற்கு குறைந்தது 3 மணித்தியாலங்கள் தேவைப்படும். அதற்கு அதிகள வான எரிபொருள் தேவைப்படுகிறது. எரிபொருட் செலவானது எண்ணெய் ஆட்டிக் கொடுக்கும் எங்களுடைய பொறுப்பாகும். மற்றும் வேலைக்கேற்ற கொடுப்பனவுகள் எங்களுக்குக் கிடைப்பதில்லை. இருப்பினும் பரம்பரையாகவே எண்ணெய் ஆட்டிக் கொடுப்பதை தொழிலாக செய்து வரும் எமக்கு வேறு தொழில்கள் செய்வதற்குச் சிரமம். அதனால் தான் சவால்களை எதிர்கொண்டாலும் இத் தொழிலை கைவிடாமல் தொடர்ந்து செய்து வருகின்றோம்..." என்று கூறினார்.

அவர் கூறியதைப் போன்றே பாரிய சவால்களுடன் இயங்கி வருகின்ற குடிசைக் கைத்தொழிலான மரச் செக்கு எண்ணெய் பற்றிய விழிப்புணர்வுகள் மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட வேண்டும். இத் தொழிலைத் தொடர்ந்து செய்வதற்கான வசதிகள் மேற்கொள்ளப் பட்டு ஊக்கப்படுத்தப்பட வேண்டும். இவ்வாறான வழிமுறையின் மூலம் தான் எமது பாரம்பரியத் தொழிலை அழிய விடாமல் பாதுகாக்க முடியும்.

*(கட்டுரையாளர், யாழ்.பல்கலைக்கழ 4ஆம் வருடம் ஊடகக்கற்கைகள் துறை மாணவி)*

---



உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி

வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

## வியுக்தியார் பதில்கள்

**க. காண்டீபன் தும்பளை, பருத்தித்துறை.**

**கேள்வி:** இன்னும் ஒரு பத்து ஆண்டுகளில் யாழ்ப்பா ணத்தில் கிட்டத்தட்ட 50 பாடசாலைகள் மூட வேண்டி வரும் என கணிப்பு ஒன்று செய்யப்பட்டுள்ளது என சிவ பூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் தெரிவித்திருக்கிறரே. கல்வியே எமது சொத்து என்று வாழ்ந்த யாழ்ப்பாண சமூகத்தில் இப்படியொரு நிலைமை என்றால் எதிர் காலம் எப்படியிருக்கப்போகின்றது?

**வியுக்தியார்:** உங்களுக்கும் ஆறு. திருமுருகன் போன்ற சிலருக்கும் இருக்கும் அக்கறை நமது அரசியல்வாதிக ளுக்கு இல்லையே என்பதுதான் முதலில் கவலை தரு கின்ற விசயம். ஆறு திருமுருகனார் இப்படி சொன்ன செய்தி வெளிவந்ததை பார்த்ததும் மறுநாள் யாராவது அரசியல் தலைவர்கள் இதுகுறித்து எதிர்வினையாற்று கின்றார்களா என்று நானும் எதிர்பார்த்திருந்தேன். ஆனால் ஏமாற்றம்தான் மிஞ்சியது. யாழ்ப்பாணத்தில் பாடசாலைகள் மூடப்படுவது மாத்திரமல்ல, தீவுப்பகுதி யில் ஒட்டுமொத்த பாடசாலைகளையும் மூடிவிட்டு கத்தோலிக்க பாடசாலை ஒன்றுக்கு அடித்தளமிடப்படு வதாக கிடைக்கும் செய்தி அதைவிட பாரதூரமானது. கல்வி மாத்திரமல்ல, நமது சைவமும் எங்கே காணாமல் போய்விடுமோ என்ற அச்சமே ஏற்படுகின்றது. சமூக அக்கறையுள்ள ஆறு. திருமுருகனார் போன்றவர்கள் தான் இந்த நிலைமை குறித்து ஒன்றுகூடி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

**எஸ் தேவசிலன், ரூட்டிங், லண்டன்.**

**கேள்வி:** இலங்கையில் நிலவும் இனப்பிரச்னை இன்ன மும் தீர்க்கப்படாமல் இருப்பதற்கு அரசியல் விவகாரங்களில் பௌத்த தேரர்களால் மேற்கொள்ளப் படும் தலையீடுகளே காரணம். தமிழ் மக்களின் பிரச்னைகள் என்னவென்பதைக் கண்டறிவதற்கு ஆங்கி லம் அல்லது தமிழ்மொழி பேசக் கூடிய பௌத்த தேரர்கள் தமிழ் தலைவர்களுடன் கலந்துரையாடுவது இன்றியமையாததாகும் என்று யாழ். மாவட்ட எம்.பி. க.வி.விக்னேஸ்வரன் வலியுறுத்தியுள்ளாரே. அவர் ஒருவர்தான் சரியாக விசயங்களை சொல்கிறார் போல் தெரிகிறது. உங்களுக்கு?

**வியுக்தியார்:** அவர் சொல்வது எது சரி என்கிறீர்கள் என்பது தெரியவில்லை. அதாவது இனப்பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படாமல் இருப்பதற்கு பௌத்த தேரர்களால் மேற்கொள்ளப்படும் தலையீடுகள் தான் காரணம் என்பதைத்தான் சொல்கிறீர்கள் என்று நினைக்கிறேன். அதுவும் ஒரு காரணம் தான். அதற்காக அதுதான் காரணம் என்றில்லை. பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படாமல் இருப்பதற்கு அவர் போன்ற நமது அரசியல் தலைவர்களும்தான் காரணம் என்றுதான் நான் நினைக்கின்றேன். அவரே சொல்வதுபோல ஆங்கிலம், தமிழ் பேசக்கூடிய பௌத்த தேரர்கள் தமிழ் தலைவர் களுடன் கலந்துரையாடவேண்டும் என்று சொல்கின்ற அவரே பௌத்த தேரர்களைத் தேடிச் சென்று தனக்குத் தெரிந்த சிங்களத்திலேயே நமது பிரச்சினைகளை எடுத்துச் சொல்லலாமே. அவர் எதற்காக அவர்கள் வந்து அறியவேண்டும் என்கின்றார். இதுதான் நமது பிரச்சினையே. பிரச்சினையை நாங்கள் வைத்துக் கொண்டு அவர்கள் மீது பழி போட்டுக் கொண்டி ருக்கின்றோம்.

**எஸ் றொசாறியன், வலப்பாடு, மன்னார்.**

**கேள்வி:** அரசாங்கத்தின் வரிக்கொள்கைக்கு எதிராக ஒரு வாரம் தொடர்ச்சியாக பணிப் புறக்கணிப்பில் ஈடுபட 40 தொழில் சங்கங்களின் கூட்டமைப்பு முடிவெடுத்தது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர் கள்?

**வியுக்தியார்:** அரசாங்கத்தின் வரிக்கொள்கைக்கு எதிராக போராடுகின்ற அந்தத் தொழிற்சங்கங்கள், வரி அதிகரிப்பு வேண்டாம் என்றுதானே போராட்டம் நடாத்துகின்றன. அவ்வாறு போராட்டம் நடாத்துப வர்கள் யார் என்றால், அவர்கள் ஒரு லட்சம் ரூபாவிற்கு ம் அதிகமாக வருமானம் பெறுபவர்கள்தான்.

மாத சம்பளம் பெறும் பணியாளர்களில் எண்பது வீதத்திற் கும் அதிகமானவர்கள் ஐம்பது ஆயிரம் ரூபாவிற்கும் குறைவான சம்பளம் பெறுபவர்கள். அவர்கள் அந்த சம்பளத்திலேயே வாழ்க்கையை நடாத்தும்போது ஒரு லட்சம் ரூபா சம்பளம் பெறுபவர் ஆறாயிரம் ரூபாவை வரியாக செலுத்தவும் தயாராக இல்லாதபோது, இந்த நாடு எப்படி உருப்படப் போகின்றது என்பதுதான் தெரியவில்லை.

# இமைப்பொழுதும் என் நெஞ்சில்

கே.எஸ்.சுதாகர்

நீண்ட நாட்களுக்குப் பிறகு சினிமாப்படம் ஓடியது. வேலையிலிருந்து அரை நாள் லீவு எடுத்து, 'யாழ்' தியேட்டர் போயிருந்தேன். படம் மூடுபனி. தியேட்டருக்குள் புகுந்ததும் கண்களில் விஞ்ஞானமாற்றம் - ஒரே இருளாக இருந்தது. 'ரோச் லைட்' உதவியுடன் எனக்கு இடம் தேடித்தர ஒருவன் முயன்றான். திடீரென்று என் முதுகில் ஒரு கை பதிந்தது.

"அட செந்தில்! ஆளே மாறிப் போய்விட்டாய். எப்பிடி இருக்கிறாய்?"

"பரவாயில்லை. நீ எப்படி?"

"சுமாராகப் போகுது."

அவனுக்குப் பக்கத்தில் ஓர் இடம் காலியாகவிருந்தது. அதற்கடுத்ததாக மூக்கும் முழியுமாக செந்திலைப் போல, அவனைவிட அழகான ஏழு அல்லது எட்டு வயதுப் பையன்.

"உன் மகனா?"

"ஓம். மனைவி ரொயிலற் போய்விட்டாள். வந்து விடுவாள். நீ திருமணம் செய்து விட்டியா?"

"இன்னமும் இல்லை. இதிலை நிண்டு கன நேரம் கதைக்கேலாது. இன்ரேவலுக்கு சந்திப்போமே!"

நழுவிக் கொண்டேன். படம் தொடங்கியது.

படிக்கும்போது செந்தில் ஒரு பெண்ணை விரும்பினான். அவளுக்கு விருப்பமில்லை. பாடசாலையில் நடந்த ஒரு சம்பவத்தினால் மாணவர்கள் பிளவுபட்டார்கள். பாடசாலை குழம்பியது. ஊர் இரண்டு பட்டது. என் வாழ்விலும் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது. இது நடந்து இரண்டு வருடங்களுக்குள் செந்தில் இன்னொருத்தியை மணந்துவிட்டான். நேரத்துக்கு நேரம் மனதை மாற்றி, பெண்ணை மாற்றி வாழ இவனைப் போன்றவர்களால் எப்படி முடிகிறது?

நான் பன்னிரண்டாம் வகுப்பறைக்குள் நுழைகின்றேன்...

அவள் மெல்லச் சிரித்தாள். சிரிப்பதைக் காட்டிலும் புன்னகை சிந்தும் போது மிகவும் அழகு. ஒவ்வொரு முறை சிரிக்கும் போதும் நெஞ்சினுள் ஒரு பயம் வந்து விட்டுப் போகும். நானும் அபர்ணாவும் முரளியும் சிறு வயதிலிருந்தே ஒன்றாகப் படித்து வருகின்றோம். போட்டி போட்டுக் கொண்டு படிப்போம். இது எமக்கு இரண்டாவது பள்ளிக்கூடம். ஆறாம் வகுப்பு வரைக்கும் ஊரிலுள்ள சின்னப் பள்ளிக்கூடம் தான்.

"யசோ! லபோரட்டரியிலை கொப்பியள் திருத்தி வைச்சிருக்கிறன். போய் எடுத்து வாரும்" மிடுக்கான குரலில் சோதிலிங்கம் மிஸ் சொன்னா. வகுப்பில் உள்ளவர்கள் அனைவரும் யசோவைத்தான் அழகு என்று சொல்கின்றார்கள். எனக்கென்னவோ அபர்ணாவைத்தான் பிடிக்கும்.

யசோ வெள்ளை, மிடுக்கான தோற்றம். எதற்குமே பயப்படமாட்டாள். சின்னச்சின்ன விஷயங்களுக்கெல்லாம் சண்டைக்குப் போவாள். அழகான ராட்சசி.

அபர்ணாவுக்கு நல்ல முகவெட்டு. பொது நிறம். குடும்பப்பாங்கான தோற்றம். நால்வகைக் குணங்களுமுடையவள். இதற்கும் மேல் சந்திரவதனா என்றொரு மாணவி வந்தும் போய்க் கொண்டும் இருக்கின்றாள். அவளைப் பார்ப்போரும் இல்லை, தேடுவோரும் இல்லை.

எங்கள் வகுப்பில் பத்துக்கு ஒன்று என்ற விகிதத்தில் பெண்கள் இருந்தது பெரும்பாலும் எல்லோருக்கும் கவலையையே தந்தது. கட்டாந்தரையில் புல் மேய்வது போல இருக்கும். ஏன் தான் இந்தப் பெண்களுக்கு கணிதம் என்றால் பிடிக்காதோ?

கொப்பிகள் வந்ததும் "சமா" தொடங்கி விடும். பத்து நிமிடங்களுக்கு ரீச்சரின் தனி ஆவர்த்தனம்தான். நாங்கள் பெரிய வகுப்புப் படிப்பதால் எங்களில் ஒருவருக்கும் அடி விழுவதில்லை. பேச்சு மட்டும்தான். சிறு வயதுப் பருவங்களில் ஆண்களும் பெண்களுமாக வகுப்பில் இருப்போம். விஷயம் தெரியாத, விருப்பமில்லாத வேளைகளில் இப்படி இருக்க விட்டுவிடுவார்கள். வேண்டும் போது விடமாட்டார்கள். நாலாம் வகுப்பின் போது நானும் அபர்ணாவும் பக்கத்துக்குப் பக்கம். ஆறாம் வகுப்பின் பின் அந்த யோகம் ஒருவருக்கும் கிட்டவில்லை. கூப்பிடு தூரம்தான். "பருவத்தே பயிர் செய்" என்று உரக்க கூப்பாடு போடுவதெல்லாம் வெறும் ஏட்டுச் சுரக்காய் தான்.

செந்தில் மாத்திரம் கொக்கு மாதிரி தலையை நீட்டி யசோ வருகிறாளா என எட்டிப் பார்த்தான். அவனுக்கு அவள் மீது ஒரு கண். சோயா என்று அவளின் பெயரை அடி தலை மாற்றி, அவனைக் கூப்பிடுவோம். அவனுக்கும் அதில் இன்ப மகிழ்ச்சி.

உயர்தரப் பரீட்சை நெருங்கிக் கொண்டிருந்ததால் வகுப்பில் எல்லாப் பாடங்களுக்கும் பரீட்சை வைத்திருந்தார்கள். ஒருவரும் இரசாயனவியல் பாடத்தில் எண்பது புள்ளிகளைத் தாண்டுவதில்லை. மனம் திக்குத் திக்கென்று எல்லாருக்கும் அடித்தது.

யசோ கொப்பிகளைக் கொண்டு வந்து மேசைமீது வைத்து விட்டு, தனது கொப்பியை எடுத்துக் கொண்டு இருக்கையில் அமர்ந்தாள். எல்லாரும் முண்டியடித்துக் கொண்டு தங்கள் தங்கள் கொப்பிகளை எடுத்துக் கொண்டார்கள்.

வகுப்பு களை கட்டத் தொடங்கியது. யசோ மேசை மீது குப்புறப் படுத்துக் கொண்டாள். அபர்ணா என்னை ஒருதடவை பார்த்து விட்டு கொப்பியில் பார்வையைச் செலுத்தினாள். செந்தில் ஒட்டகச்சிவிங்கி போல கழுத்தை நீட்டி யசோவைப் பார்த்துவிட்டு மௌனமானான்.

சோதிலிங்கம் மிஸ் எழுந்து நின்று மேசைமீது ஓங்கி ஒரு தட்டுத் தட்டினா. வகுப்பு நிசப்தமாகியது. பார்வையை வகுப்பு மீது ஓடவிட்டா. யசோ மட்டும் மேசைக்குள் புதைந்து கிடந்தாள். நெஞ்சுக்கூடு மேலும் கீழும் எழுந்து அசைவது தெரிகிறது.

"யசோ!" என்று ஒரு தடவை கூப்பிட்டா. அதற்கு ஒரு வித சலனமுமில்லை. அவவுக்குக் கோபம் தலைக்கேறியது. முகத்தில் வியர்வை வடியத் தொடங்கியது. பத்திரகாளி போலானா. பாடசாலைக்குப் பக்கத்திலை அவவின்ரை வீடு இருக்கிறதாலை மத்தியானம் வீட்டை போய் சாப்பிட்டிட்டு வருவா. வருகிற அவசரத்திலை முகத்துக்குப் பவுடரும் அப்புவா. வரும்போது வடிவாகத்தான் இருப்பா. அப்புறம் தான் வேஷம் கலையும். முகத்திலை அப்பிய பவுடர் திட்டுத் திட்டாகக் கரைந்து கிடக்கும். இப்போது அது புலப்பட்டது.

"யசோ!!" பேய் போலக் கத்தினா. அதற்கும் பதிலில்லாது போக, கிட்டப்போய் முகத்தை தூக்கி நிமிர்த்தினா. அவள் முகம் சிவந்து, கண்களிலிருந்து கண்ணீர், தாமரை இலைத் தண்ணீர் போல, வழிந்து கொண்டிருந்தது. எதற்குமே துணிந்தவள் இன்று எதற்கோ ஆட்டம் கண்டு, கல்லுக்குள் ஈரம் போலாகி விட்டாள்.

"யசோ! உனக்கு நல்ல மார்க்தானே வந்திருக்கு. பிறகு ஏன் அழுகிறாய்?"

"ரீச்சர்... இஞ்சை பாருங்கோ ரீச்சர்!"

அவள் கைகளிலிருந்து ஒரு கடதாசித் துண்டு படபடத்து மேசைமீது விழுந்தது. சோதிலிங்கம் மிஸ் அதை எடுத்து பிரித்துப் படித்தா. அது ஒரு சுவாரஷ்யமான, மயிர்க்கூச்செறியும் கடிதம். எச்சிலை மிடறு விழுங்கி, எழுத்துக் கூட்டி வாசிச்சா. அவவின் நாற்பது வருட வாழ்க்கையில் இப்படியொரு கடிதத்தை வாசிக்கும் பாய்க்கியம் கிட்டவில்லை. இப்படி ஒரு கடிதம் அவவின் இளமைக் காலத்தில் கிடைத்திருந்தால் - ஒருவேளை அவ கூட இப்ப திருமதியாக இருந்திருக்கலாம்.

அப்படியே திரும்பி செந்திலை முழுசிப் பார்த்தா. கடிதத்தைக் கையில் எடுத்துக் கொண்டு, பாய்ந்து, வகுப்பறையை விட்டு வெளியேறினா. கடுகதி வேகத்தில் அப்படியே அடுத்த வகுப்பறையை நோக்கி நடந்தா. சொதி வடியும் கோலத்தில் நின்ற "சந்நிதி கோயில் அவியலைக்" கண்டவுடன் நடையைப் பாதியில் நிறுத்தி, எதிர்ப்புறமாக நடையின் வேகத்தைக் கூட்டினா. சண்முகம் வாத்தியார் வகுப்பறையை விட்டு வெளியே வந்து வேடிக்கை பார்த்தார். அவவின் நடை அவருக்குச் சிரிப்பை யூட்டியது.

மதியத்திற்கு முதல் வரும் பாடத்தை சண்முகம் வாத்தியார் எந்த வகுப்பிற்கு எடுக்கின்றாரோ, அவர்கள் வாழ்க்கையில் பெரும்பேறு கொண்டவர்கள். "லஞ் பெல்" அடிப்பதற்கு பத்து நிமிடங்களுக்கு முன்பதாக, "சந்நிதி கோயில் அவியல் இப்ப வீட்டிலை முடிஞ்சிருக்கும்" என்று சொல்லி வகுப்பை நிறுத்துவார். அந்த வாக்கியம் எப்பவடா அவர் வாயில் இருந்து புறப்படும் என்று வீட்டிற்குப் போவதற்காக ஏங்கி நிற்பர் மாணாக்கர்.

"முரளி! உனக்கு எத்தினை மார்க்?"

"இதுவாடா இப்ப முக்கியம்!"

அபர்ணா திரும்பி கையில் ஆறு விரல்களைக் காட்டி, பின்பு "ஓ" போட்டுக் காட்டினாள். நான் பதிலுக்கு இரண்டு - ஏழு போட்டேன்.

பின் வரிசையில் இருந்த குகநேசன், மேசையில் குப்புறப் படுத்திருந்த யசோவைச் சீண்டும் வகையில் "ராதை உனக்குக் கோபம் ஆகாதடீ" என்று ஆலாபனை செய்தான். "எங்கள் வகுப்பு மேசையும் சோயாப்பால் குடிக்கும்" வெடி வெடித்தால் ஓடுவதற்குத் தயாராக நின்றபடி மற்றவன் கத்தினான்.

மிஸ் சோதிலிங்கமும் மிஸிஸ் கமலாகரனும் வகுப்பறைக்கு வந்து யசோவைக் கூட்டிக் கொண்டு போனார்கள். அவர்கள் பின்னால் அவள் தேம்பிக் கொண்டே போனாள். இந்தக் கண் கொள்ளாக் காட்சியை பெரும்பாலான மாணவர்கள் பார்த்து இரசித்தார்கள்.

"டேய் செந்தில்! உனக்கு துண்டு கிழியப் போகுது."

"யசோவுக்கு என்ன சித்து விளையாட்டுக் காட்டினாயப்பா!"

அவன் எல்லாரது நையாண்டியையும் பார்த்துக் கொண்டு வாளாவிருந்தான்.

மாணவர்கள் ஏதோ பூகம்பம் வரப் போகின்றது என்பதை உணர்ந்தார்கள். அதிபரின் அறையிலிருந்து கமலாகரன் ஆசிரியை மாத்திரம் வெளியே வந்தா. எங்களுக்குரிய அடுத்த பாடத்தை அவதான் எடுக்க வேண்டியிருந்தது.

"இண்டைக்கு அடுத்த பாடம் நடக்காது. முந்திச் செய்த கணக்குகளை றிவிசன் செய்யுங்கோ." யசோவின் புத்தகம் கொப்பிகளைத் தூக்கிக் கொண்டு போய்விட்டா.

கொஞ்ச நேரத்தில் மிஸ் சோதிலிங்கம், யசோவைக் கூட்டிக் கொண்டு பாடசாலையை விட்டு வெளியேறுவது தெரிகிறது. "இனி அடுத்தது என்ன?" என்று எல்லாரும் பதட்டப் பட்டுக் கொண்டிருக்கும் போது, அதிபரின் அறையிலிருந்து செந்திலுக்கு அழைப்பு வந்தது. எல்லாவற்றையும் தூக்கிக் கொண்டு அழுவாரைப் போல போனான். அதன் பின்பு ஆசிரியர்கள் தங்களுக்குள் முறுகிக் கொண்டார்கள். வகுப்பறைக்குள் கூட்டம் கூட்டமாக கூடி நின்று மாணவர்கள் குசுகுசுத்தனர். பாடசாலை இரண்டுபட்டது.

செந்தில் கிரிக்கட் பிளேயர். அவனை இழக்க ஒரு சில ஆசிரியர்களுக்கு விருப்பமில்லை. வாக்குவாதங்கள் பலத்தன. மாணவர்களும் இரண்டாக அணி வகுக்கத் தொடங்கினர்.

"டேய் வாங்கடா! கார்ட்ஸ் விளையாடுவம்" என்றார்கள் பின் வரிசையில் இருந்தவர்கள்.

"நாங்கள் என்ன செய்வம்?" - முரளி.

"எக்ஸாம் வரப்போகுது. படிப்பம்."

"உனக்கு எப்பவுமே படிப்புத் தான்."

ஆனாலும் ஒருவருக்கும் படிக்க மனம் வரவில்லை.

"வா, ஒரு புது விளையாட்டு விளையாடுவோம்!" -

"என்ன விளையாட்டு?"

"நான் உன்னுடைய முதுகிலை, சட்டைக்கு மேலாலை என்ரை விரலாலை எழுதுவன். நீ அது என்னண்டு கண்டுபிடிச்சு சொல்ல வேணும்."

விளையாட்டு தொடங்கியது. ஸ்பரிச விளையாட்டு. "படம்" என்று எழுத, படம் என்றேன். அப்புறம் பாடம். "தமிழ்" சரியாக வர மறுத்தது. "ழ்" பிசகியது. அப்புறம், "அ - ப - ர் - " என்று முரளி பாதி எழுதிக் கொண்டிருக்கும் போதே, அவனது கைகளை உதறிவிட்டு கோபத்துடன் எழுந்து கொண்டேன். விளையாட்டு வினையில் முடிந்தது. அவன் கை கொட்டிச் சிரித்தான். அப்புறம் அவனுடன் கதைக்காமல் விட்டுவிட்டேன்.

"வெறிநாய்" வருகிறது என்று வகுப்பறைக்கு முன்பாக ஒருவன் சத்தமிட்டுக் கொண்டு கோமாளி போல ஓடினான். அதிபர் வகுப்பறைக்குள் நுழைந்தார். கோபத்தில் கர்ச்சித்தார். "யாராவது படிக்கிற நோக்கமில்லாமல் வேறை எண்ணத்தோடை இஞ்சை வருகிறதெண்டால், தயவு செய்து வீட்டிலையே இருங்கோ! வந்து பள்ளிக்கூடமானத்தை வாங்காதையுங்கோ!" என்று முழங்கினார். "அப்ப வெளியிலை இதுகளை வைச்சுக் கொள்ளலாமோ?" என்று முணுமுணுத்தது ஒரு தறுதலை. அபர்ணா திரும்பிப் பார்த்தாள். "இனிமேல் வேண்டாமே!" என்பது போன்றிருந்தது அந்தப் பார்வை.

செந்தில் அதன்பிறகு வகுப்பறைக்கு வரவில்லை. அவனும் வீட்டிற்குப் போய்விட்டான். ஒரு கிழமைக்கு ஸ்கூல் வரப்படாது என்பது அவனுக்கு வழங்கப்பட்ட தண்டனை.

வீட்டிற்குப் போய் சேர்ந்தவுடன் அம்மா பள்ளிகூடத்தில் நடந்தவற்றைப் பற்றி விசாரித்தாள். அவ்வளவு வேகத்தில் வீடு போய்ச் சேர்ந்திருந்தது அந்தச் செய்தி.

மூன்று நாட்களின் பின் யசோவின் பெற்றோர்கள் பாடசாலைக்கு வந்து, அதிபருடன் கதைத்து, யசோவை ஊரின் அடுத்த பெரிய பாடசாலைக்கு மாற்றிவிட்டார்கள். யசோ பள்ளிக்கூடம் மாறுவாள் என்று ஒருவரும் எதிர் பார்க்கவில்லை. எல்லாருக்கும் அது அதிர்ச்சிதான். அதற்கப்புறம்தான் செந்தில் படிக்க வந்தான். மிகவும் அமைதியாகிப் போய்விட்டான். ஒருவரிடமும் முகம் கொடுத்துப் பேசுவதில்லை. சில காலைப் பொழுதுகளில் பாடசாலைக்கு பிந்தியும் வந்தான். என்றாலும் படிப்பில் முன்னரைவிட கூடுதல் முன்னேற்றம் தெரிந்தது. இப்படியெல்லாம் நடந்து போய்விட்டதே என்று உள்ளுக்குள் ஊமையாக அழுது கொள்வது போலவும், எதையோ பறிகொடுத்து விட்டது போலவும் இருந்தான்.

அந்தச் சம்பவத்தின் பின்பு, அபர்ணாவுக்கும் எனக்குமிடையே இருந்த தொடர்பு குறைந்து போய்பிட்டது. அவளது அழகான பேச்சு, சிரிப்பு எல்லாம் போய் விட்டது. எனது பள்ளிகூடத்துக் கனவுகள் இப்படிச் சிதைந்து போய் விட்டன.

படம் ஓடிக்கொண்டிருந்தது. மனம் ஏனோ அதில் லயிக்கவில்லை. எனக்கு முன்பாக இருளினுள் மூவரினதும் பின்புறம் தெரிந்தன. அவனது மனைவியைப் பார்த்து விடவேண்டும் என்று மனம் உந்தியது.

"இன்ரேவலுக்கு" எங்காவது ஓடித் தப்பி விட வேண்டும். அவனைக் கண்டால் மீண்டும் எனது பழைய நினைவுகள் வந்து விடும். சிறுகச் சிறுகக் கட்டிய கூட்டைக் குழப்பியவன் அவன். கோபம் கோபமாக வந்தது.

பள்ளிக்கூட வாழ்க்கையின் பின்பு எல்லாருமே திக்குத் திசை தெரியாது போய் விட்டோம். இனப் பிரச்சினை காரணமாக, ஒரு நடு இரவில் கிராமமே அள்ளுண்டு போயிற்று.

முரளிக்கும் எனக்கும் சிறுவயதில் இருந்தே படிப்பில் போட்டி இருந்தது உண்மைதான். ஆனால் அது ஆறாம் வகுப்பு வரைக்கும் தான் நிலைத்திருந்தது. அதன் பின்பு, அவன் படிப்பில் எங்கோ வெகுதூரம் பின் தங்கி விட்டான். அவனுக்கு என் மீது ஒரு பொறாமை உள்ளே தீயாக வளர்ந்திருக்க வேண்டும். தெரிந்து கொண்டே செய்திருக்கின்றான். தனது பெற்றோர்கள் மூலம் அபர்ணா வீட்டுக்காரரை அணுகி, அவளைத் திருமணம் செய்து கனடாவிற்கும் கூட்டிக் கொண்டு போய் விட்டான்.

இடைவேளையின் போது தலையைக் குனிந்து இருக்கையில் புதைந்தேன்.

செந்தில் மகனைக் கூட்டிக் கொண்டு வெளியேறுவது தெரிகிறது. செந்திலின் மனைவி மாத்திரம் தனியே இருக்கின்றாள். அவளுக்கு என்னைத் தெரிய வாய்ப்பில்லை. ஒரு "ரவுண்ட்" போய் வந்தால் அவள் யாரென்று புரிந்து விடும்.

மெதுவாக எழுந்து நடந்து ஒரு சுற்று சுற்றி வந்தேன். அவளின் இருக்கை வந்ததும் பார்வையை அவள் மீது சுழல விட்டேன். எனது துர்அதிர்ஷ்டம். அவளும் என்னைக் கண்டுகொண்டாள். அவள்......

யசோ!

எங்களுடன் படித்து, அன்றொருநாள் பாடசாலையில் பிரளயத்தை ஏற்படுத்தியிருந்த அதே யசோதான்.

●

# பஞ்சாப்பின் வாரிசா ‘அம்ரித் பால் சிங்’?

## மீண்டும் முளைவிடும் காலிஸ்தான் தீவிரவாதம்

## சீக்கிய தனிநாடு கோரிக்கையின் பின்னணி என்ன?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

கடந்தாண்டு ஆகஸ்ட் மாதம் துபாயிலிருந்து இந்தியா திரும்பிய அம்ரித்பால் சிங் எனும் சீக்கிய மத பிரமுகர், நாடு திரும்பிய ஒரு மாத காலத்தில், “வாரிஸ் பஞ்சாப் டி” (பஞ்சாப்பின் வாரிசுகள்) என்ற அமைப்பிற்கு தலைவராக நியமிக்கப்பட்டார்.

1984இல் கொல்லப்பட்ட ஜர்னைல் சிங் பிந்த்ரன் வாலே சீக்கிய தலைவரை பார்த்து உத்வேகம் அடைந்த வர் தற்போது அம்ரித்பால் சிங் எனும் இளம் சீக்கிய பிரமுகர்.
சீக்கியர்களுக்கென தனி தேசம் வேண்டுமென கூறி வந்த ஜர்னைல் சிங் பிந்த்ரன்வாலே, 1980ஆம் ஆண்டு இந்திய அரசாங்கத்தால் கைது செய்யப்பட் டார். பின் 1984ஆம் ஆண்டு ‘ப்ளூ ஸ்டார்’ என்னும் இந்திய ராணுவத்தின் ஆப்ரேஷன் மூலம் அவர் கொல்லப்பட்டார்.

ஆனால், பஞ்சாபில் இப்போது ‘ஆம் ஆத்மி கட்சி’ ஆட்சி நடத்தும் நிலையில், காலிஸ்தான் பிரிவினை வாதம் மீண்டும் தலைதுக்கியுள்ளதாக இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது. இதனால் பிரதமர் மோடி மிக வும் கவலை அடைந்துள்ளார். மத்தியில் பா.ஜ.க ஆட்சி வந்தவுடன், இந்தியாவில் செயல்பட்டு வரும் பிரிவினை வாத சக்திகளுக்கு வெளிநாட்டிலிருந்து பணம் வருவதை தடுத்தது.

இந்நிலையில், காலிஸ்தான் தீவிரவாதம் மீண்டும் தலைதுக்கினால் பல பிரச்னைகள் எழுந்து, பஞ்சாபிலும், அகில இந்திய அளவிலும் சட்டம் - ஒழுங்கு பிரச்னை கெட்டுவிடும் என இந்திய மத்திய அரசு ஊகிக்கின்றது.

### காலிஸ்தானுக்காக பிரசாரம்

பிந்தரன்வாலேவிற்கு அடுத்து அம்ரித் பால் சிங் தான் காலிஸ்தானுக்காக தற்போது தீவிரமாக பிரசாரம் செய்து வருகிறார். 30 வயதான அம்ரித்பால் சிங், காலிஸ்தான் இயக்கத்தின் ஆதரவாளர். சீக்கியர்களுக்கென தனி தேசம் உருவாக வேண்டும் என்பதே இந்த இயக்கத்தின் நோக்கம்




பஞ்சாப் மாநிலத்தில் நிலவும் தண்ணீர் தட்டுபாடு, அதிகளவில் பயன்பாட்டில் இருக்கும் போதைப் பொருட்கள் போன்ற பிரச்சனைகளுக்கு, சீக்கியர்களுக்கென தனி தேசம் ஒதுக்கப்படுவதே தீர்வாக அமையும் என அம்ரித்பால் சிங் பேசி வருகிறார்.

### பஞ்சாப்: இந்தியாவின் உணவு கூடை

இந்தியாவின் “உணவு கூடையாக” திகழ்ந்து வரும் பஞ்சாப் மாநிலம், ஒப்பீட்டளவில் வளர்ச்சியான மாநிலமாக விளங்கினாலும், அங்கே தற்போது வேலையின்மை பிரச்சனைகளும், விவசாய பிரச்னைகளும் அதன் சமூக மற்றும் பொருளாதார நிலையை சுருக்கி விட்டதாக நிபுணர்கள் கூறுகின்றனர்.

சமீபத்தில், அம்ரித் பால் சிங்கின் ஆதரவாளர் ஒருவர் பல வழக்குகளில் கைதானார். ஆனால், சிங்கின் ஆதரவாளர்கள் போலீஸ் ஸ்டேஷனை ஆயுதங்களுடன் முற்றுகையிட்ட நிலையில், நீதிமன்றம் வாயிலாக போலீசார் அவரை விடுவித்தனர். மாநில முதல்வர் பகவந்த் சிங் மானால் எதுவும் செய்ய முடியவில்லை.

இந்த அம்ரித்பால் சிங், முன்பு தொழில் நிமித்தம் மேற்காசிய நாடான ஐக்கிய அரபு எமிரேட்ஸ் சென்றார். நிகழ் காலத்தில் இந்தியா திரும்பி வந்து காலிஸ்தான் தீவிரவாதத்தை ஆதரித்து வருகிறார். இவர் தொடர்பாக மத்திய உளவுத்துறை விசாரணை நடத்தி வருவதோடு, இவரால் பெரும் பிரச்னை வரும் என எச்சரிக்கையும் அளித்துள்ளது.

### காலிஸ்தான் தீவிரவாத எழுச்சி

தற்போது பஞ்சாபில் ஆட்சிக்கு வந்துள்ள ஆம் ஆத்மி கட்சி, மறைமுகமாக காலிஸ்தான் பிரிவினை வாதத்தை ஆதரிக்கிறது. அதனால் தான் எந்த நடவடிக் கையையும் எடுக்கவில்லை என



எதிர்க்கட்சிகள் குற்றஞ் சாட்டுகின்றன.

1980களில் சீக்கியர்களுக்கு தனி தேசம் வேண்டுமென எழுந்த இந்த கிளர்ச்சி, பத்தாண்டுகள் வரை நீடித்து வந்தது. இந்த காலகட்டத்தில், பல முக்கிய தலைவர்களும், பொது மக்களும் பாதிக்கப்பட்டனர். பல இளம் சீக்கியர்கள் காவல் துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த வன்முறையால் ஏற்பட்ட காயங்களின் சுவடுகளை பஞ்சாப் மாநிலம் இன்றும் சுமந்து கொண்டு தான் இருக்கிறது.

### சீக்கியர்களுக்கு தனி நாடு

சீக்கியர்களுக்கென தனி தேசம் வேண்டும் என கூறப்படும் கோரிக்கை இன்னும் தொடர்ந்து வந்தாலும், 1990களில் அந்த கோரிக்கை அதன் முக்கியத்துவத்தை இழந்துவிட்டது. பஞ்சாபில் உள்ள அனைத்து மக்களும் அம்ரித்பால் சிங் போன்றோருக்கும், இது போன்ற வன்முறைக்கும் ஆதரவு அளிக்கவில்லை.

குரு நானக் தேவ் பல்கலைகழகத்தில் பேராசிரியராக இருக்கும் பர்மிந்தர் சிங் கூற்றுப்படி இப்போது சீக்கிய தனி தேசம் வேண்டுமென கூறுவோரின் எண்ணிக்கை மிகவும் சொற்ப அளவிலேயே இருக்கிறது என்கிறார் அவர்.

கடந்தாண்டு ஆகஸ்ட் மாதம் துபாயிலிருந்து இந்தியா திரும்பிய அம்ரித்பால் சிங், அவர் அடுத்த ஒரு மாத காலத்தில், ”வாரிஸ் பஞ்சாப் டி” (பஞ்சாப்பின் வாரிசுகள்) என்ற அமைப்பிற்கு தலைவராக நியமிக்கப் பட்டார்.

ஒரு இனப்படுகொலை செய்வதற்கு அவர்களது தேசத்தையோ, கிராமங்களையோ அழிக்க வேண்டும் என்று தேவையில்லை. அவர்களது கலாசார பாரம்பரி யங்களிலிருந்து அந்த மக்களை பிரிப்பதும், பின்னர் அவர்களது மதங்களிலிருந்து பிரிப்பதும் இனப்படு கொலைதான்” என்கிற அம்ரித்பால் சிங்கின் கூற்றால் இந்திய மத்திய அரசின் கண்டனத்துக்கும் உள்ளாகி யுள்ளார்.

### காலிஸ்தான் உருவாக்க பின்னணி

காலிஸ்தான் என்பது சீக்கிய மதம் சார்ந்த தேசியத்தை வலியுறுத்தும் ஓர் அரசியல் இயக்கமாகும். சீக் கிய மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு காலிஸ்தான் என்ற பெயரில் இந்தியாவின் பஞ்சாப் மற்றும் பாகிஸ்தானின் பஞ்சாப் என சீக்கியர்கள் அதிகம் வசிக்கும் மாகாணங் களை இணைத்து தனி நாடு வேண்டும் என்ற நோக்கத் திற்காக ஜர்னையில் சிங் பிந்தரன்வாலாவால் அமைக்கப் பட்டது தான் காலிஸ்தான் இயக்கம்.

பஞ்சாபில் 1970களின் இறுதியில் தொடங்கிய கிளர்ச்சியானது காலிஸ்தான் கோரிக்கையாக எழுந்தது. கிளர்ச்சிக்கான அடிப்படைக் காரணங்கள் மிகவும் சிக்கலா னவை. முதன்மைக் காரணங்களாக சீக்கியத்திற்கும் பஞ்சாபி மொழிக்கும் போதிய அங்கீகாரம் வழங்காததும் 1947 இலிருந்து ஆட்சியிலிருந்த இந்தியக் காங்கிரசு அரசின் அக்கறையின்மை என சீக்கியர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.




### இந்தி மொழி திணிப்பு

1950களில் பஞ்சாபின் அனைத்துப் பள்ளிகளும் பஞ்சாபி மாணவர்களுக்கு இந்தி கற்பித்ததால் பெற்றோர்களும் சமூகத் தலைவர்களும் கவலையுற்றனர். மொழிப் பிரச்சினைக்குத் தீர்வுகாணவும் பஞ்சாபின் அலுவல்மொழியாக பஞ்சாபியை மீளமைக்கவும் பஞ் சாப் தனிமாநில இயக்கம் துவங்கப்பட்டது. பஞ்சாப் தனிமாநில இயக்கத்தை ஏப்ரல் 14, 1955 அன்று இந்திய அரசு தடை செய்தது.

பஞ்சாப் மாகாணம் சீக்கியர்களின் பாரம்பரிய நிலப்பகுதியாகும். இந்திய நிலப்பகுதிகள் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டிற்குள் வருவருதற்கு முன் சுமார் 50 ஆண்டுகள் இப்பகுதிகளை சீக்கிய அரச பரம்பரையினர் ஆண்டனர். இந்திய பாகிஸ்தானிய பிரிவினைக்குப் பின் பெருமளவில் சீக்கியர்கள் பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்திலிருந்து இந்தியாவின் பஞ்சாப், ஹரியானா, இமாச்சலப் பிரதேசத்திற்கு குடியேறினர்.

### மொழிவாரி மாநில எழுச்சி

பின்னர் மொழிவாரி மாநிலங்கள் பிரிவினையின் அடிப்படையில் அதிக சீக்கியர்கள் வகித்த இந்தியாவின் பஞ்சாப் மாகாணம் மொழியின் அடிப்படையில் பிரிக் கப்பட வேண்டும் என அகாலி தளம் கட்சி தொடர்ந்து குரல் கொடுத்து வந்தது. இந்திய அரசு முதலில் இதை நிராகரித்தாலும் பின்னர் நடந்த தொடர் கோரிக்கைகளாலும் வன்முறைச் சம்பவங்களாலும் இந்திய ஒன்றிய அரசு இதற்கு உடன்பட்டது. ஆனால் தங்களுக்கு அதிக அதிகாரம் ஒன்றிய அரசால் தரப்படவில்லை என்ற காரணத்தால் காலிஸ்தான் தேசிய இயக்கம் தொடர்ந்து இயங்கி வந்தது. காலிஸ்தானுக்கு என அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து நாடுகளில் ஆதரவு திரட்ட முயற் சித்தது. 1980களில் காலிஸ்தான் அமைப்பால், காலிஸ்தான் தனி நாடு என அறிவிக்கப்பட்டு அதற் கெனத் தனி நாணயத்தையும் அஞ்சல் தலையையும் வெளியிட்டதும் அறிந்ததே.

### உலகளாவிய வாக்கெடுப்பு

இந்தியாவில் சீக்கிய மக்கள் தங்கள் தனநாட்டு கோரிக்கையை வலுப்படுத்த உலகளாவிய ரீதியில் நடந்த காலிஸ்தான் வாக்கெடுப்புகளை நடத்தி



வருகின்றனர். கடந்த அக்டோபர் 31, 2021 அன்று இங்கிலாந்தில் இருந்து தொடங்கிய வாக்கெடுப்பு சுவிட்சர்லாந்து மற்றும் இத்தாலி முழுவதும் பல நகரங் களில் நடைபெற்று, சுமார் 450,000 சீக்கியர்கள் வாக்களித்துள்ளனர்.

காலிஸ்தான் பொது வாக்கெடுப்பை அதிகாரபூர்வ மாக எந்தவொரு மேற்கத்தய நாடுகளும் அங்கீகரிக்க வில்லை. ஆயினும் பலத்த சர்ச்சையை உருவாக்கியுள்ள “காலிஸ்தான் வாக்கெடுப்பு” முடிந்து போன காலிஸ் தான் பிரச்சினையை மீண்டும் தூண்டிவிட்டு இந்தியா வில் குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்கில் செயல்படுவ தாக இந்திய அரசு அறிவித்துள்ளது.

தற்போது இந்தியாவில் சீக்கியர்கள் அனைவரும் அமைதியான முறையில், தேசிய ஒருமைப்பாட்டுடன் வாழ்ந்து வருகிறார்கள் என இந்திய அரசு கூறினாலும், புலம் பெயர் சீக்கிய மக்களால் நடைபெறவுள்ள சுதந்திர தாயகத்திற்கான காலிஸ்தான் வாக்கெடுப்பும், ”வாரிஸ் பஞ்சாப் டி” அம்ரித்பால் சிங் எனும் சீக்கிய மத பிரமுகரின் வருகையும் இந்திய அரசியலில் மட்டுமல்ல, சர்வ தேசத்தின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

# ஜே. வி. பி. கப்பம் கோரினால் நிரூபித்துக் காட்ட வேண்டும்!

## நளிந்த ஜயதிஸ்ஸ சவால்

தேசிய மக்கள் சக்தி யிடம் (ஜே. வி. பி.) ஆட்சியை ஒப்படைப்பதற்கு மக்கள் தயாராகி விட்டனர். இதனைப் பொறுக்க முடியாத ஆளுங்கட்சியும் ஏனைய எதிர்க்கட்சிகளும் தேசிய மக்கள் சக்தி தொழில்சங்கங்கள் ஊடாக நிறுவனங்களை அச்சுறுத்தி கப்பம் கோருகிறது என்று அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

எனவே, தம்மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் உண்மையெனில் அவற்றை பகிரங்கமாக ஆதரங்களுடன் நிரூபிக்குமாறும் அவர் சவால் விடுத்தார்.

தேசிய மக்கள் சக்தி பணிமனையில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தேர்தலுக்கான தினம் அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் மக்கள் மத்தியில் அது தொடர்பான நிச்சய மற்ற நிலைமையே காணப்படுகிறது.

ஆணைக்குழுவின் அறிவிப்பையும் மீறி தேர்தலை மேலும் காலம் தாழ்த்துவதற்கு அரசாங்கத்தால் பாராளுமன்றத்தின் ஊடாகவும் முயற்சிக்கப்படுகின்ற மையின் காரணமாகவே மக்கள் மத்தியில் இவ்வாறு நம்பிக்கையின்மை ஏற்பட்டுள்ளது.

தேர்தல் மீதுள்ள அச்சத்தினால் சில எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்புடன் அரசாங்கம் தேசிய மக்கள் சக்தி மீது சேறு பூசும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது. தொழில்சங்கங்களை அமைத்து அவற்றின் ஊடாக பல்வேறு நிறுவனங்களிடம் கப்பம் கோருவதாக தேசிய மக்கள் சக்தி மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது.

அத்துடன், இதுவரையில் தேர்தல் பிரசார கூட்டங்களுக்காக 300 கோடி ரூபாய் செலவிட்டுள்ளதாகவும் கூறுகின்றனர். அவர்கள் கூறுவது உண்மையெனில், அதனை நிரூபிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தேசிய மக்கள் சக்தியிடம் ஆட்சியை ஒப்படைப்பதற்கு மக்கள் தயாராகியுள்ளமையாலேயே எம்மீது இவ்வாறான அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. ஆனால், எமது ஆட்சியில் நாம் இவ்வாறு கூறிக் கொண்டிருக்கப் போவதில்லை. இன்று பல்வேறு வழிகளிலும் கப்பமும் இலஞ்சமும் பெற்றுக் கொண்டிருக்கும் சகலரும் சிறையிலடைக்கப்படுவர் - என்றார். (ஐ)

# சர்வதேச முதலீட்டாளரின் முதலீடு பொருளாதார மீட்சிக்கு அவசியம்!

## முதலீட்டு ஊக்குவிப்பு பிரதிநிதி

கொழும்பு, மார்ச் 12

இலங்கையின் பொருளாதாரத்தை நெருக்கடியில் இருந்து மீட்டெடுப்பதற்கு சர்வதேச நாடுகளிலுள்ளவர்களின் முதலீடுகள் மிக முக்கியமானது என்று முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் பிரித்தானியாவுக்கான இலங்கை பிரதிநிதி கந்தையா கஜன் தெரிவித்துள்ளார்.

நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக பதவி ஏற்றுக்கொண்டதன் பின்னர் உலக நாடுகளிலுள்ள இலங்கை புலம்பெயர்ந்தோரை இலங்கையில் முதலீடு செய்யுமாறு அழைப்பு விடுத்தார்.



இலங்கையில் காணப்பட்ட பொருளாதார நெருக் கடி மற்றும் அரசியல் நெருக்கடியால் சர்வதேச முதலீட் டார்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு தயக்கம் காட்டினர்.

தற்போது ஜனாதிபதி அவர்களின் பொருளாதார மீட்புக்கான திட்டங்களால் இலங்கையின் பொருளாதாரம் மீண்டும் வளர்ச்சி பாதையை நோக்கி பயணிக்கின் றது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில், உலக நாடுகளிலுள்ள சர்வதேச முதலீட்டாளர்களை இலங்கைக்கு அழைத்து வந்து அவர்களை இலங்கையில் முதலீடு செய்வதை ஊக்குவிக்கவே எனக்கு இந்தப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் முதலீடு செய்ய ஆர்வமுள்ள அனைத்து சர்வதேச முதலீட்டாளர்களையும் இணைத்து இலங்கையின் பொருளாதாரத்தை மீட்பதற்கான முயற்சியை எவ்வித தடையுமின்றி முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளேன்.

சர்வதேச முதலீட்டார்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு முன்னர் இலங்கையில் முதலீடு செய்வதற்கான பின்னணியை உருவாக்க வேண்டும்.

அதற்கு முன்னர் இலங்கையில் பாதுகாப்பான முறையில் முதலீடு செய்ய முடியும் என்ற நம்பிக்கையை முதலில் உறுதிப்படுத்த வேண்டும். அதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்துவருகிறோம். முதலீடு செய்யும் முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பான முதலீட்டு துறை மற்றும் திட்டங்களை அறிமுகம் செய்யவுள்ளோம் - என்றார். (ஐ - கே)

# கிழக்கில் பொறியியல் பீடம் அமைக்க ஜனாதிபதி இணக்கம்!

மட்டக்களப்பு, மார்ச் 12

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனிப்பட்ட பயணமாக நேற்று முன்தினம் மட்டக்களப்புக்கு வந்திருந்தார். இதன்போது, கிழக்கு பல்கலைகழகத்தின் துணை வேந்தர் கனகசிங்கம், பதிவாளர் பகீரதன் ஆகியோர் அவரை சந்தித்தனர்.

துணைவேந்தரின் வேண்டுகோளுக்கு இணங்க பொறியியல் பீடத்தை ஆரம்பிக்கவும் இந்திய அரசின் உதவியுடனான கேட்போர் கூடத்தை விரைவாக அமைத்துக் கொடுக்கவும் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார்.

அத்துடன், மட்டக்களப்பு மாவட்டத்தின் அறுவடைகாலத்தையும் விதைப்பு காலத்தையும் கருத்தில் கொண்டு உரமானியம், நெல் விலை நிர்ணயம் மற்றும் நெல் கொள்வனவு மேற்கொள்ளப்படும் என தமிழ் உணர்வாளர் அமைப்பின் தலைவர் க.மோகனிடம் ஜனாதிபதி உறுதியளித்தார்.

## கல்வி tv CHANNEL-1

**12.03.2023**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

## கல்வி tv CHANNEL - 2

**12.03.2023**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# சமூகத்தில் 6,000 காச நோயாளர் பொது சுகாதாரத்துக்கு ஆபத்து!

## சுகாதார மேம்பாட்டு பணியகம்

கொழும்பு, மார்ச் 12

**நாட்டில் சுமார் 5000 - 6000 காச நோயாளர்கள் தமக்கு காச நோய் இருப்பதை கண்டறியாமல் - சிகிச்சை பெறாமலிருக்கின்றனர். இவர்கள் சமூகத்தில் ஏனையோருக்கும் காச நோயை பரப்புபவர்களாகக் காணப்படு கின்றமையால் இன்று காச நோய் இலங்கையில் பிரதான பொது சுகாதார பிரச்னையாக மாறியுள்ளதாக சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் சுகாதார மேம்பாட்டு பணியகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :

காச நோய் என்பது சுவாசத் தொகுதியை அடிப்படையாகக் கொண்டதாகும். பற்றீரியா தொற்றின் மூலம் ஏற்படும். இந் நோயை ஆரம்ப கட்டத்திலேயே இனங்கண்டு , முறையான சிகிச்சைகள் வழங்கப்பட்டால் அதனை முழுமையாகக் குணப்படுத்த முடியும்.

இலங்கையில் புதிய காச நோயாளர்கள் இனங்காணப்படும் வீதமானது உலக சுகாதார ஸ்தாபனத்தினால் மதிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கையை விடக் குறைவானதாகும்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் மதிப்பீட்டுக்கமைய 13 ஆயிரத்து 500 புதிய காச நோயாளர்கள் இனங்காணப்படவேண்டும். ஆனால், இலங்கையில் 7,000 - 9,000 காச நோயாளர்களே இனங்காணப்படுகின்றனர்.

இதன் அர்த்தம் 5,000 - 6,000 காச நோயாளர்கள் தமக்கு காச நோய் இருப்பதை அறியாது சிகிச்சை பெறாமலுள்ளனர் என்பதாகும். இவர்கள் ஏனையோருக்கும் காச நோயை பரவச் செய்து கொண்டிருக்கின்றனர். இதன் காரணமாக காச நோயானது இலங்கையின் பொது சுகாதார பிரச்னையாகியுள்ளது.

மார்ச் 24ஆம் திகதி சர்வதேச காச நோய் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. “2035 இல் காச நோயற்ற நாடாக இலங்கையை மாற்றியமைப்போம்“ என்ற தொனிப் பொருளின் கீழ் சுகாதார மேம்பாட்டு பணியகத்தினால் விசேட செயல்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன - என்றுள்ளது.

(ஐ)



# ரூ. 16 கோடி பெறுமதியான தங்கம் கட்டுநாயக்காவில் பறிமுதல்!

கொழும்பு, மார்ச் 12

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 16 கோடி ரூபாய்க்கும் அதிகமான பெறுமதியான தங்கத்தை இந்தியாவுக்கு கடத்த முனைந்த 5 பேர் சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் சிறீலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தில் இந்தியாவின் மும்பைக்கு செல்லவிருந்தபோது கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களில் இந்திய பிரஜை ஒருவரும் உள்ளடங்குகின்றார்.

இவர்கள் தங்கள் பயணப் பொதிகளில் சூட்சுமமான முறையில் தங்கத்தை மறைத்து கடத்த முயன்றனர். இவர்களிடமிருந்து 10.5 கிலோ தங்கத் தகடுகள், ஜெல் வடிவில் உள்ள தங்கம் மற்றும் தங்க ஆபரணங்கள் சுங்க பிரிவினரால் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட தங்கத்தின் பெறுமதி 160 மில்லியன் ரூபாய் எனத் தெரிவிக்கப்பட்டது. இவர்களிடம் சுங்க அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# கொழும்பு - மட்டு. ரயிலில் கைவிடப்பட்ட சிசு மீட்பு!

கொழும்பு, மார்ச் 12

கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு பயணிக்கவிருந்த ரயிலின் கழிவறையில் கைவிடப்பட்ட சிசு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் கொழும்பு கோட்டையில் இருந்து மட்டக்களப்புக்கு பயணிக்கவிருந்த ரயிலிலேயே இந்த சிசு கண்டுபிடிக்கப்பட்டது.

சிசு நீல நிற பிளாஸ்ரிக் கூடையில் கழிவறையில் வைக்கப்பட்டிருந்ததாக கொழும்பு கோட்டை புகையிரத நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கழிவறைக்கு சென்ற பயணி ஒருவர் இந்த சிசுவைப் பார்த்து கோட்டை ரயில் நிலைய அதிகாரிகளுக்குத் தெரிவித்தார் ஊழியர்கள் குழந்தையை மீட்டு கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

மீட்கப்பட்ட சிசுவுக்கு ஒன்றரை மாத வயது இருக்கலாம் என்று தெரிகிறது என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார். பொலிஸ் காவலில் வைக்கப்பட்ட சிசு கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

புகையிரத நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள சி. சி. ரி. வி. கமெராக்கள் மூலம் கழிவறையில் சிசுவை வைத்து விட்டு சென்றவர்களை கண்டறிய நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் கோட்டை பொலிஸ் அதிகாரிகள் குழு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# அரசாங்க நிறுவனங்கள் தனியார் மயமானால் இரத்தகளரி ஏற்படும்!

## எதிர்க்கட்சி எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 12

மக்கள் ஆணையின்றி அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்த முயற்சித்தால் நாட்டில் இரத்தக்களரி ஏற்படும் நிலைமையே உருவாகும். அதனால் தேர்தலை நடத்தி மக்கள் ஆணையை பெற்றுக்கொள்ளுங்கள் என எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

தேர்தலுக்கு அஞ்சும் அரசாங்கம், அதனை தடுப்பதற்காக பல்வேறு தந்திரங்களை மேற்கொள்கிறது. இந்நிலையில் வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக ஒதுக்கப்பட்டுள்ள நிதியை விநியோகிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதன்படி ஏப்ரல் 25 ஆம் திகதி தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

தற்போது சர்வதேச நாணய நிதியத்துக்கு தாமதித்தாவது அரசாங்கம் சென்றுள்ளது. இதன்போது 15 விடயங்களுக்கு இணங்கியுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். அந்த 15 விடயங்களும் என்ன என்று தெரியவில்லை.

தற்போது சௌபாக்கிய நோக்கு செயல்படுத்தப்படுகின்றனவா? அரச நிறுவனங்களை விற்கும் செயல்பாடுகளே நடக்கின்றன. இந்த அரசாங்கத்துக்கு மக்கள் ஆணை கிடையாது. இப்படி இருந்துகொண்டு அதனை செய்ய முடியுமா? தனியார் மயப்படுத்துவது என்றால் மக்களிடம் அனுமதி பெற வேண்டும். இவற்றை பாதுகாக்கவே மக்கள் ஆணை கிடைத்தது.

அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதாக இருந்தால் அதற்கு மக்கள் ஆணை பெற்றுக்கொள்ள வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்திருக்கிறது. அதனால்தான் தேர்தல் ஒன்று தேவை என்கிறோம்.

உள்ளூராட்சி தேர்தலை நடத்தி உங்கள் வேலைத் திட்டங்களை முன்வையுங்கள். அப்போது மக்கள் எந்த பக்கம் இருக்கிறார்கள் என்பதை பார்க்கலாம். மக்கள் ஆணை இன்றி இதனை செய்யப் போனால் நாட்டில் இரத்தக் களரி ஏற்படும் நிலைமையே உருவாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாட்டை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவது மக்கள் ஆணையாக அமையாது. மக்களிடம் கேட்க வேண்டும். தேர்தலுக்கு அஞ்ச வேண்டாம். மக்களுக்கு சரியான பக்கத்தை தெரிவு செய்ய இடமளிக்க வேண்டும் - என்றார்.

(ஐ)

# நாடு கடந்த வணிக நிறுவனங்களின் வலையமைப்பை நிறுவ இலங்கை ஆதரவு!

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி

கொழும்பு, மார்ச் 12

உள்ளக பிராந்திய முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில், நாடுகடந்த வணிக நிறுவனங்களின் வலையமைப்பை கட்டியெழுப்புவதற்கான இலங்கையின் முழுமையான ஆதரவையும் வெளிப்படுத்துவதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இணையவழி மெய்நிகர் முறையில் நடைபெற்ற பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன்முயற்சியின் (பிம்ஸ்ரெக்) 19ஆவது அமைச்சர்கள் கூட்டத்தில் உரையாற்றும் போதே வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் ,

உலகப் பொருளாதார வளர்ச்சியின் பாதை ஆசியாவை நோக்கி நகர்வதால், பிம்ஸ்டெக் நாடுகளின் வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கூறுகள் தொடர்புடையதாக இருப்பதற்காக புத்துயிர் பெற வேண்டும்.

வர்த்தகம் மற்றும் முதலீட்டின் ஓட்டத்தை மேம்படுத்துவதற்கு வலுவான மற்றும் ஆற்றல் மிக்க தனியார் துறை வலையமைப்பை உருவாக்குவதற்கான ஒரு வழித்தடமாக மாறுவதற்காக பிம்ஸ்டெக் முன்னணி வகிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி, ஒவ்வொரு நாட்டினதும் ஒப்பீட்டு நன்மைகளை மையமாகக் கொண்டு, பிராந்திய வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான கூட்டு முயற்சிகளை வலுப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

இந்தச் சூழலில், வர்த்தகம் மற்றும் முதலீட்டுத் துறைகளில் முன்னெச்சரிக்கையுடன் பணியாற்றுவதற்கான இலங்கையின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்துகின்றேன். மேலும், அனைவருக்கும் உருமாறும் பொருளாதார வளர்ச்சியை உருவாக்குவதற்காக, உள்ளகப் பிராந்திய முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில், நாடுகடந்த வணிக நிறுவனங்களின் வலையமைப்பை கட்டியெழுப்புவதற்கான இலங்கையின் முழுமையான ஆதரவையும் வெளிப்படுத்துகின்றோம்- என்றார். (ஐ)

# குழு மோதலில் ஒருவர் மரணம்!

கண்டி, மார்ச் 12

இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். மேலும் இருவர் காயமடைந்தனர் என்று கண்டி - தவுலகல பொலிஸார் தெரிவித்தனர்.

ஹந்தஸ்ஸ பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய நபரே சம்பவத்தில் உயிரிழந்தார்.

இந்த இளைஞர் தனது சகோதரரின் வீட்டுக்கு சென்றபோது, அவரின் சகோதரரின் வீட்டாருக்கும் அருகில் உள்ள வீட்டைச் சேர்ந்தவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலின் போது, குறித்த இளைஞர் கத்திக்குத்துக்கு இலக்காகி காயமடைந்து, கண்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

இதேவேளை சம்பவத்தில் காயமடைந்த இருவர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

(ஐ)

## மகிந்த...

இதில், மகிந்த ராஜபக்ஷ மீண்டும் பிரமதராவாதற்கான பிரசாரத்தை தொடங்குவார். இந்த பிரசார கூட்டத்தை முன்னாள் அமைச்சர் ஷசீந்திர ராஜபக்ஷ ஏற்பாடு செய்துள்ளார்.

அண்மையில், ராஜபக்ஷ குடும்பத்தின் சகோதரி ஒருவரின் கொழும்பு வீட்டில் இரவு விருந்து நடைபெற்றது. இங்கு நடந்த கலந்துரையாடலிலேயே மகிந்தவை மீண்டும் பிரதமராக்குவது குறித்து முடிவு செய்யப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இதன் பின்னரே, ஷசீந்திர ராஜபக்ஷ மொனராகலை பிரசார கூட்டத்தை ஏற்பாடு செய்தார் என்று கூறப்படுகின்றது.

எது எப்படி இருப்பினும், எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தலை இலக்காகக் கொண்டு இந்த பிரசாரக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் பின்னர் மாவட்ட மட்டத்தில் இந்த மாநாடுகளை ஏற்பாடு செய்யத் தீர்மானிக்கப்பட்டது எனவும் அந்தக் கட்சியின் வட்டாரங்கள் மூலம் அறிய முடிந்தது. (ஐ-சி)

## தொல்பொருள்...

வருடங்கள் இயங்கும். இவர்கள், தொல்பொருள் திணைக்கள பணிப்பாளருக்கு ஆலோசனைகளை வழங்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், இந்தக் குழு நியமிக்கப்பட்டமையை வெளிப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தல் புத்தசாசன சமய மற்றும் கலாசார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவால் நேற்று வெளியிடப்பட்டது. (ஐ)

## இலங்கைக்கு...

வாய்ப்பு தவறவிடப்பட்டிருப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபையின் உலகளாவிய ஆய்வாளரும் கொள்கை ஆலோசகருமான சன்ஹிதா அம்பாஸ்ற் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுமாத்திரமன்றி இலங்கையின் 22 மில்லியன் மக்களின் உரிமைகளில் ஏற்பட்டுள்ள தாக்கத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு இலங்கையை இந்தக் கடன் நெருக்கடியிலிருந்து விடுவிப்பது இன்றியமையாததாகும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

உலகளாவிய பொருளாதாரம் முகங்கொடுத்திருக்கும் சவால்கள் தொடர்பில் கடந்த பெப்ரவரி நடைபெற்ற ஜி-20 நாடுகளின் நிதியமைச்சர்கள் கூட்டத்தில் ஆராயப்பட்டது. இருப்பினும், இதன்போது கடன் நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள நாடொன்றுக்கு உதவுவதற்கான வாய்ப்பு தவறவிடப்பட்டுள்ளது.

குறிப்பாக இந்தக் கூட்டத்தின் இறுதி அறிக்கையில் இலங்கை மக்கள் முகங்கொடுத்திருக்கும் சவால்களுக்குத் தீர்வு காண்பது குறித்து வெறுமனே மேம்போக்காக மாத்திரமே அவதானம் செலுத்தப்பட்டுள்ளமை மிகுந்த அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

ஜி-20 அமைப்பானது சீனா, இந்தியா, ஜப்பான் மற்றும் தென்கொரியா உள்ளிட்ட இலங்கையின் முக்கிய இரு தரப்புக் கடன் வழங்குநர்களையும், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட பல்தரப்புக் கடன் வழங்கல் கட்டமைப்புக்களில் அங்கம் வகிக்கும் ஆதிக்கம் மிகுந்த நாடுகளையும் உள்ளடக்கியுள்ளது.

எனவே இந்த அமைப்பானது செயல்திறன்மிக்கவகையில் ஒருங்கிணையுமேயானால், அதனூடாக இலங்கைக்கு அவசியமான கடன்சலுகையை வழங்கவும், நெருக்கடிக்கு மத்தியில் மக்களின் பொருளாதார மற்றும் சமூக உரிமைகளை பாதுகாத்து வலுப்படுத்தவும் முடியும்.

இலங்கையின் கடன் நெருக்கடியானது மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் இயலுமையைப் பாதித்துள்ளது. எனவே 22 மில்லியன் மக்களின் உரிமைகளில் ஏற்படும் தாக்கத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு இலங்கையை இக்கடன் நெருக்கடியிலிருந்து விடுவிப்பது இன்றியமையாததாகும் - என்றும் கூறியுள்ளது. (ஐ)

## அரசுக்கு...

வழங்குவதில்லை. இவ்வாறான போராட்டங்கள் மற்றும் அரச விரோத செயல்களில் ஈடுபடுவோர் அடையாளம் காணப்பட்டு எதிர்காலத்தில் அவர்களை பற்றிய பதிவுகள் பேணப்பட்டு அவர்கள் முன்வரும் போது தகுதியானவர்களாக கருதப்படுவதற்கான அடிப்படை ஆவணமாகப் பயன்படுத்தப்படும் என்றும் ஆலோ சிக்கப்பட்டது. (ஐ - சி)

## தேர்தலின்...

தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பில் நிச்சயமற்ற தன்மை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. தற்போதைய தருணத்தில் இந்தத் தேர்தல் பொருளாதார வளர்ச்சிக்கு உகந்த தாகவோ அல்லது தங்களுக்கு அநுகூலமானதாகவோ இருக்கப்போ வதில்லை என்பதால் நடத்தப்படக்கூடாது என்று அரசாங்க தலைவர்கள் வெளிப்படையாக கருத்து தெரிவிப்பதை பாராளுமன்றத்தில் அவர்களின் உரைகளும் அங்கு நடைபெறும் விவாதங்களும் வெளிக்காட்டுகின்றன.

மார்ச் 9 ஆம் திகதி நடத்தப்பட இருந்த உள்ளூராட்சி தேர்தலுக்கு தேவையான நிதியை விடுவிப்பதற்கு அரசாங்க திறைசேரி தவறியதால் ஒத்தி வைக்கப்பட்டதை தொடர்ந்து இந்த நிலைமை காணப்படுகிறது.

அரசமைப்பின் பிரகாரம் தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்ட பிறகு அரசாங்க திணைக்களங்கள் தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டியது முக்கியமானதாகும்.

உயர்நீதிமன்றம் பிறப்பித்த முக்கியத்துவம் வாய்ந்த இரு தீர்ப்புகள் தாமதமின்றி தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற தெளிவான செய்தியை முழு நாட்டுக்கும் கூறியிருக்கின்றன. உயர்நீதிமன்றத்தின் உத்தரவு பாராளுமன்றத்தின் சிறப்புரிமையை மீறுவதாக அமைந்திருக்கின்றன என்ற காரணத்தின் அடிப்படையில் அவற்றை அலட்சியம் செய்யுமாறு அரச திணைக்களங்களுக்கு பாராளுமன்றத்துக்குள் இருந்து பகிரங்க அழைப்புகள் விடுக்கப்படுவதை கண்டு தேசிய சமாதானப் பேரவை கவலையடைகிறது.

ஜனநாயக செயன்முறைகளை பகிரங்கமாக கேள்விக்குள்ளாக்கி அவமதிக்கும் செயல்கள் சகல மட்டங்களிலும் அரசாங்க உறுப்பினர்களால் முன்னெடுக்கப்படுகின்றன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை போன்ற பழுத்த அனுபவமிக்க ஒரு பாராளுமன்றவாதியின் தலைமைத்துவத்தின் கீழ் இவ்வாறு நடைபெறும் என்று எதிர்பார்க்கவில்லை.

மக்களின் இறையாண்மை, சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களின் மூலமாக அரசாங்கத்தின் சகல மட்டங்களிலும் தங்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கு மக்களுக்கு இருக்கும் உரிமை, நீதித்துறைக்கு மதிப்பு ஆகியவை ஜனநாயகத்தின் அத்திபாரங்களாக அமைகின்றன. சட்டத்தின் ஆட்சியையும் ஆட்சிமுறையின் பல்வேறு நிறுவனங்களும் அவற்றின் அதிகாரங்களை முறையாகப் பிரயோகிப்பதை உறுதிசெய்யும் தடுப்புக்கள் மற்றும் சமப்படுத்தல் முறைமையையும் பேணிப்பாதுகாக்க தவறுவது ஜனநாயகத்தையும் நாட்டின் சர்வதேச நம்பகத்தன்மை மற்றும் தேசிய நலன்களையும் கடுமையாக மலினப்படுத்திவிடும்.

உயர்நீதிமன்றத்தின் உத்தரவுகளுக்கு மதிப்பளித்து தேர்தல் செயன்முறைகளை துரிதப்படுத்துமாறும் உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு அறிவிக்கப்பட்ட புதிய திகதியை (ஏப்ரல் 25) ஏற்றுக்கொள்ளுமாறும் தேசிய சமாதானப் பேரவை அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கிறது.

உரிய நேரத்தில் சுதந்திரமாகவும் நீதியாகவும் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்ற கோட்பாட்டை பேணிப் பாதுகாப்பதற்கும் தேர்தலின் தேவை குறித்து அரசாங்கத்துக்கு நம்பிக்கையூட்டவும் எதிரணி அரசியல் கட்சிகளை ஓர் அரங்குக்கு கொண்டுவர சிவில் சமூக அமைப்புகளால் முன்னெடுக்கப்படும் கூட்டு முயற்சி தேசிய சமாதானப் பேரவைக்கு பெரு மகிழ்ச்சியை தருகிறது - என்றுள்ளது. (ஐ -சி)

# புற்றுநோய் விழிப்புணர்வு நடைபவனி யாழில் நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 12

புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவை காட்டவும் நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபவனி நடைபெறவுள்ளது.

யாழ். போதனா மருத்துவமனையின் புற்றுநோய் பிரிவின் ஏற்பாட்டில் 200 ஆண்டு விழாவை கொண்டாடும் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியுடன் இணைந்து மேற்கொள்ளவுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் இந்த நடைபவனிக்கான அழைப்பு விடுக்கப்பட்டது.

இந்த செய்தியாளர் சந்திப்பில், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்திய மூர்த்தி, யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் துசிதரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதி பதி இ. சுரேந்திரகுமாரன், புற்றுநோய் சத்திரசிகிச்சை நிபுணர் கணேசமூர்த்தி சிறீதரன், பெண்களுக்கான புற்றுநோய் சத்திரசிகிச்சை நிபுணர் தனுஜா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# அரசு தனது உண்மை முகத்தை சிங்கள மக்களுக்கும் காட்டுகிறது!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 12

தனது பெயரில் ஜனநாயக சோசலிச குடியரசு என்று பெயரை மட்டும் தாங்கிக் கொண்டிருக்கின்ற இலங்கை அரசு அதன் உண்மை முகத்தை தற்போது சிங்கள மக்களுக்கும் காட்டி வருகின்றது என்பதுதான் உண்மை- இப்படி தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க. சுகாஷ் தெரிவித்துள்ளார்.

நேற்று காரைநகரில் நடந்த மக்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், இலங்கையின் சிவில் சமூகத்தின் ஒரு பகுதியாக இருக்கக்கூடிய அனைத்து பல்கலைக்கழக மாணவர்களால் ஜனநாயக ரீதியில், அரசாங்கத்துக்கு எதிராகவும் - மக்களுடைய குரலாகவும் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் மனிதாபிமான நெறிமுறைகளுக்கும் - ஜனநாயக விழுமியங்களுக்கும் மாறாக கண்ணீர் புகை குண்டுகளை வீசி மக்களின் - மாணவர்களின் குரல் வளையை அடக்க முற்பட்டிருக்கிறார்கள்.

இதனால், அங்கு இரண்டு உயிர்கள் பறிக்கப்பட்டிருக்கின்றன. கடந்த காலத்திலும் பல்வேறு சமயங் களில் இலங்கை தமிழ் மக்களுக்கு எதி ராக, அதிலும் குறிப்பாக வடக்கு - கிழக்கிலேயே இராணுவ பயங்கரவாத ஆட்சி நடைபெறுகின்றது என்று நாங்கள் குற்றச்சாட்டு முன்வைத்தோம். இம்முறை எங்களுடைய குற்றச்சாட்டு உண்மை என்பதை அவர்கள் நிரூபித்து இருக்கின்றார்கள்.

புத்தி ஜீவிகளான சிங்கள மக்களும், உண்மையை உணரக்கூடிய சிங்கள மக்களும் சர்வதிகார தேசமும் உணர்ந்து கொண்டு, இனப்படுகொலையாளிகளால் வஞ்சிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைப்பதற்கு அனைவரும் சேர்ந்து குரல் கொடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

## தேர்தலுக்கான...

நிதி விடுவிப்பு விவகாரத்தில் நிதி அமைச்சரின் அனுமதி அவசியம் என்று திறைசேரி செயலாளர் மகிந்த சிறிவர்த்தன தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவுறுத்தியதை தொடர்ந்து ஜனாதிபதிக்கு எழுத்து மூலமாக இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

மேலும், நிதி விடுவிப்பு தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள இடைக்கால தடை உத்தரவை தொடர்ந்து தேர்தல் நடவடிக்கைகள் அரசமைப்பு ரீதியாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் ஏப்ரல் 25ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது பொருத்தமானதாக அமையும் என்று தீர்மானிக்கப்பட்டு மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்கள் விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டுள்ளனர்.

எனவே, உள்ளூராட்சி தேர்தலை நடத்த தேவையான நிதியை வழங்குமாறு வலியுறுத்தி கடந்த 7ஆம் திகதி திறைசேரி செயலருக்கு கடிதம் அனுப்பினோம். இதற்கு நிதி அமைச்சரின் அனுமதி அவசியம் என்று அவர் அறிவுறுத்தினார்.

இந்தப் பின்னணியில் நிதி அமைச்சர் என்ற ரீதியில் நிதி அமைச்சரிடம் நிதியை கோரியுள்ளோம். தேவையான நிதி தாமதமின்றிய வகையில் கிடைக்கப் பெறும் என எதிர்பார்க்கிறோம்.

தபால் மூல வாக்களிப்புக்கு தேவையான வாக்குச் சீட்டுக்களை எதிர்வரும் வாரத்திலும், ஏப்ரல் 25ஆம் திகதி இடம்பெறவுள்ள வாக்கெடுப்புக்கு தேவையான வாக்குச்சீட்டுக்களை 20 நாட்களுக்குள்ளும் வழங்குவதாக அரச அச்சகம் உறுதியளித்துள்ளது. வாக்குச்சீட்டு அச்சிடல் பணிகளுக்கு தேவையான நிதியை துரிதமாக ஒப்படைக்க தீர்மானித்துள்ளோம். உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் எதிர்வரும் வாரம் அரசியல் கட்சி செயலாளர்களுடன் பேச்சில் ஈடுபட எதிர்பார்த்துள்ளோம் - என்றார். (ஐ)

## யாழ்ப்பாணத்தில்...

சுவிற்சர்லாந்தை தலைமையாகக் கொண்ட காற்று தர தொழில்நுட்ப நிறுவனமான ஐ. கியூ. எயாரின் புள்ளிவிவரப்படி நேற்று பகல் காற்று தரச் சுட்டி யாழ்ப்பாணத்தில் 155 பி. எம். ஆகவும், கொழும்பில் 152 பி. எம். ஆகவும் காணப்பட்டது.

இதேபோன்று, நுவரெலியா, தம்புள்ளை, அம்பாந்தோட்டை, இரத்தினபுரி, கம்பஹா நகரங்களில் காற்று தரச் சுட்டி 100 பி. எம்மிற்கும் மேல் காணப்பட்டன.

எனினும், நேற்றிரவு காற்றின் மாசு 101 பி. எம். ஆக யாழ்ப்பாணத்தில் குறைவடைந்தது. எனினும், இதுவும் பாதுகாப்பற்ற கட்டமே என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## எம்.பிக்களின்...

தின் கீழ் ஆணையத்தில் மேன்முறையீடு செய்தார்.

மேன்முறையீட்டை பரிசீலித்த தகவல் ஆணையம் உரிய கோரிக்கையின் படி பாராளுமன்ற உறுப்பினர்களின் சொத்து விவரங்கள் குறித்த தகவல்களை அளிக்க செயலாளருக்கு உத்தரவிட்டது. இந்த உத்தரவால் அதிருப்தி அடைந்த பாராளுமன்ற செயலாளர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் குடிமக்களுக்கு தகவல்களை அறிய உரிமை உண்டு எனவும் அரசமைப்பின்படி, தகவல்களை அறிவது அடிப்படை உரிமை எனவும் மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர்களின் சொத்து விவரங்களை சமர்ப்பிக்கவும் உத்தரவிட்டது.

இந்தத் தீர்ப்பு சிவில் உரிமைகள் தொடர்பில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பாக மாறியுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# இரு அமைச்சர்களுக்கு மக்கள் கடும் எதிர்ப்பு



கொழும்பு, மார்ச் 22

குருநாகல் - வாரியபொலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கலாசார நிலையத்தை திறந்து வைக்க சென்ற அமைச்சர்கள் இருவர் பிரதேசவாசிகளின் கடும் எதிர்ப்பை எதிர்கொண்டனர். இதையடுத்து, பெருமளவு பொலிஸாரின் பாதுகாப்புடன் அவர்கள் நிகழ்ச்சியை தொடர்ந்து நடத்தினர்.

250 இலட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட கலாசார நிலையத்தை அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, இராஜாங்க அமைச்சர் டி. பி. ஓ. ஹேரத் ஆகியோரால் திறந்து வைக்கப்படவிருந்தது. இந்த நிகழ்விலேயே மக்கள் கூடி எதிர்த்தனர். இதற்கு முன்னரும் பல தடவைகள் இந்த கட்டிடம் திறந்து வைக்கப்பட்டுள்ளதாக போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

அத்துடன், இந்த நிலையம் அமைந்துள்ள மஹாகெலிய கட்டுபொத வீதி சில காலமாக பழுதடைந்துள்ளதாகவும் இவ்வாறான போலியான நிகழ்வுகளுக்கு செலவிடப்படும் பணத்தில் வீதியை சீர் செய்ய வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனினும் புத்தசாசன கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க வைபவத்துக்கு வரத் தாமதமானதால் புதிய கட்டிடத்தின் பலகை உள்ளூர் கலைஞர்கள் குழுவால் திறந்து வைக்கப்பட்டது. (ஐ)

# ஆலயங்களின் அழிப்பை மறைக்கவே காணிகள் இன்னும் படைகளின் வசம்!

## இந்து சமயப் பேரவை சாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 12

போரைச் சாட்டாக வைத்து இந்து ஆலயங்களைத் துவம்சம் செய்தவர்கள், போர் முடிந்த பின்பும் இந்து ஆலயங்களை உரியவர்களிடம் கையளிக்காது இருப்பதன் நோக்கம் கீரிமலை ஆதிசிவன் ஆலயத்தையும் ஏனைய சடையம்மா மடம் போன்றவற்றையும் அழித்து துவம்சம் செய்த உண்மை உலகுக்கு தெரியாது போவதற்கான சதிநடவடிக்கையே - என்று கூறியுள்ளார் இந்து சமயப் பேரவையின் தலைவர் சக்திகிரீவன்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

இது போன்று ஒரு விகாரையை அழித்துவிட்டு ஆட்சியைத் தொடர முடியுமா? இலங்கை அரசு நினைக்கிறது இந்து ஆலயங்களை அழித்தால் எம்மை யார்தான் கேட்கப் போகின்றார்கள் என்று.

சிவபிரானுடைய கோயிலை அழித்தால் அல்லது பூஜை நடைபெறாது தடுத்தால் நாட்டை ஆள்பவர்கள் ஆட்சியை இழப்பார்கள் - நாடு பஞ்சத்தில் வாடும் என்று சாஸ்திரங்கள் தெளிவாகக் கூறியுள் ளன.

அது நடந்தேறியும் கொண்டிருக்கிறது. இந்தக் கொடுமையான செயலில் ஈடுபட்டவர்கள் இதை இன்னும் உணராதிருப்பதே வேடிக்கை. இதற்கு பிராயச் சித்தமாக இடித்த ஆலயங்களை முன்பு இருந்ததைவிட நூறு மடங்கு பிரமாண்டமாக சம்பந்தப்பட்ட ஜனாதிபதி தமது சொந்தப் பணத்தில் அமைக்காது போனால் அவரின் சந்ததியினர் பொருள் புகழ் அனைத்தையும் இழந்து பிச்சாபாத்திரம் ஏந்தும் நிலைக்கு ஆளாக வேண்டி வரும். ஆதலால் உலக நாடுகளை ஏமாற்றுவது போல் சிவபிரானை சுலபமாக ஏமாற்றலாமென எண்ணாதீர்கள் - என்றுள்ளது. (ஐ)

# டிரான் அலஸுக்கு அழைப்பு ஆணைக்குழுவுக்குள் சர்ச்சை!

கொழும்பு, மார்ச் 12

பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முற்படுமாறு அழைப்பாணை விடுக்கப்பட் டமை ஆணைக்குழுவுக்குள் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

கொழும்பு, களனி பல்கலைக் கழகங்களின் மாணவர்களின் பேரணிகள் மீது பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும் தண்ணீர் தாரைப் பிரயோகம் செய்தும் கலைக்கப்பட்டன. இது தொடர்பான விசாரணைக்காக நாளை திங்கட்கிழமை பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைக்கு அழைத்திருந்தது.

ஆனால், அமைச்சரை விசாரணைக்கு அழைப்பதற்கு ஆணைக் குழுவின் தலைவர் மட்டுமே தீர்மானம் எடுத்தார். ஆணைக்குழுவின் ஏனைய 4 உறுப்பினர்களும் ஏற்றுக் கொள்ளாததே இந்த சர்ச் சைக்கு காரணம் என்று கூறப் படுகின்றது.

இதனிடையே, நாளை மனித உரிமைகள் ஆணைக்குழு முன்பாக முற்பட்டு பொலிஸார் பேரணிகளை கலைக்கப் பின்பற்றிய நடைமுறைகள் குறித்து விளக்கமளிக்க தீர்மானித்துள்ளார் என்றும் கூறப் படுகின்றது. (ஐ)




# வவுனியா இளைஞர் கொலை ஐந்து சந்தேகநபர்கள் கைது!

வவுனியா, மார்ச் 12

பூவரசன்குளத்தில் இளைஞர் வெட்டிக் கொல்லப்பட்டமை தொடர்பில் 5 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா, பூவரசன்குளம், மணியர்குளம் குளக்கட்டின் அருகில் வெட்டு காயங்களுடன் நித்திய நகர் பகுதியை சேர்ந்த சக்திவேல் யசோதரன் (வயது 30) என்பவர் கடந்த 9 ஆம் திகதி காலை சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்திருந்த பூவரசன்குளம் பொலிஸார் குறித்த இளைஞருடன் மது விருந்தில் பங்கேற்ற ஐவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர். இவர்களிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# மின்சார சபையை சீரமைக்க பல நிறுவனங்கள் உதவிகள்!

## அமைச்சர் விஜயசேகர தெரிவிப்பு

இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்க பல நிறுவனங்கள் உதவி வழங்கியுள்ளன.

மின்சார சபையின் மறுசீரமைப்பு தொடர்பான முன்னேற்றம் குறித்து பல தரப்பினருடன் கலந்துரையாடப்பட்டதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, யு எஸ். எய்ட் மற்றும் ஜெய்கா ஆகியவை இந்த செயல்முறைக்கு வழங்கக்கூடிய உதவிகள் குறித்து தெரிவித்துள்ளதாக எரிசக்தி அமைச்சர் கூறினார்.

இதற்கான வழிமுறைகள் மற்றும் காலக்கெடு விரைவில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் என அமைச்சர் விஜயசேகர மேலும் தெரிவித்தார்.

இறுதிச் சட்டத்துக்கு முன்னர் அமுல்படுத்தக்கூடிய சீர்திருத்தங்கள் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படும் என அமைச்சர் குறிப்பிட்டார். (ஐ)

# வயலில் புதைக்கப்பட்ட பெண்ணின் சடலம் மீட்பு

கண்டி, மார்ச் 12

வயல் நிலத்தில் புதைக்கப்பட்ட நிலையில் இளம் பெண்ணொருவரின் சடலம் நேற்று காலை கண் டெடுக்கப்பட்டது.கண்டி அலவத்துகொட பிரதேசத்தை சேர்ந்த தனுகா மதுவந்தி (வயது 26) என்ற பெண்ணின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டது.

பெண்ணின் கணவர் வெளியில் சென்று வீடு திரும்பிய நிலையில், மனைவியை காணவில்லை என்று பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்தார். இதைத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணையிலேயே அந்தப் பெண் சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் கண்டி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.03.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.